1642

மலர்கள் 21. ஜோதி

ஒளி. 1. பெ. 8-9

Oct. 1936 – Nov & Dec.

147640.

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாது௵ ஐப்பசி௴
OCTOBER 1936

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆரம்பப் பள்ளிக்கூட கணித பாட போதனமுறைக் குறிப்புகள் .... .... .... 239
—எஸ். ஜெகன்னாதன்
2. பெண் கல்வி .... .... .... 254
—*By* Miss FALICIA BENJAMIN
3. கும்பலிலே "கோவிந்தா" .... .... 262
—T. V. வெங்கட்ராமன்
4. கடவுள் வணக்கம் .... .... .... 264
—C. G. இராமச்சந்திர ராவ்
5. சாரணீயமும் கல்வியும் ... .... .... 265
—K. R. சுந்தரராஜன்
6. எனது கொள்கை .... .... .... 267
7. தென்னிந்திய கல்விவாரக் கொண்டாட்டம் .... 272
8. பத்திராதிபர் குறிப்புகள் .... .... 281
9. ரக்ஷணைப் படங்கள் .... .... ....


---


## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷா—ல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்



# பாலர் கல்வி

தொகுதி 1] 1936ளு அக்டோபர்மீ [பகுதி 8


## ஆரம்பப் பள்ளிக்கூட
## கணிதபாட போதனமுறைக் குறிப்புகள்


எஸ். ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.



(*All rights reserved*)


ஆகஸ்டு மாத இதழில் தினசரி நடவடிக்கைகளையே கணித பாடத்தில் சேர்த்து நடத்தினல் நாம் சொல்லிக்கொடுக்கும் கணக்கு தினசரி வாழ்நாட்களுக்குப் பிரயோஜனகரமாயிருக்கும் என்று தெரிவிக்க நேர்ந்தது. அப்படிச் செய்வதினல் முக்கிய கணித பாடங்களில் தக்க பயிற்சி கொடுக்கவும் நேரிடுகிறது என்று நமக்கு நன்ருய்த் தெரியவந்தது. இவைகளுக்கு எல்லாம் அஸ்திவாரம் சதுரங்கங்களே யாகும். சதுரங்கங்களில் போதுமான பயிற்சியை முதல் மூன்று வகுப்புகளிலேயே கொடுக்க வேண்டும். முக்கியமாக மனக்கணக்குப் பயிற்சி இன்றியமையாதது.

சில உதாரணங்கள் பின் வருமாறு:—

(1)

| + | 8 | 5 | 4 | 2 |
|---|---|---|---|---|
| 8 | 16 | 13 | 12 | 10 |
| 9 | | | | |
| 7 | | | | |
| 6 | | | | |
| 5 | | | | |
| 2 | | | | |

(2)

| | |
|---|---|
| 22 | |
| 21 | |
| 20 | + 2 |
| 19 | |
| 18 | |
| 17 | |

147640
Chennai-600 005
JL
T15m21,N36PA
n24.1.8-9



(3)

7+8=15

17+8=

27+8=

37+8=

47+8=

(4)

19+9=28 (19+10=29 29ல் ஒன்று குறைவாக 28

28+9
37+9
48+9
17+9
26+9
34+9

(5)

| − | 7 | 3 | 9 | 4 |
|---|---|---|---|---|
| 11 | 4 | 8 | 2 | 7 |
| 12 | | | | |
| 10 | | | | |
| 9 | | | | |
| 13 | | | | |

(6)

| × | 5 | 4 | 8 | 9 |
|---|---|---|---|---|
| 8 | | | | |
| 6 | | | | |
| 12 | | | | |
| 16 | | | | |
| 7 | | | | |

குறிப்பு: கூட்டல், கழித்தல், பெருக்கல் சம்பந்தப்பட்டுள்ள சில வேடிக்கைக் கணக்குகளில் அப்பியாசப்படுத்துவது மிகவும் உசிதமானதாயிருக்கும்.

(உதாரணம்) மனத்தில் ஒன்றை நினைத்துக்கொள்.
அதை இரண்டால் பெருக்கு.
நான் கொடுக்கிற 10-ஐ கூட்டிக்கொள்.
பாதியைப் பிள்ளையாருக்குக் கொடு.
பாக்கி பாதியிலிருந்து நீ நினைத்ததைக் கழித்துவிடு.
பாக்கி எனக்குத் தெரியும், சொல்லட்டுமா?

(7)

2 | 16　　3 | 27　　4 | 24　　5 | 35　　8 | 24
6 | 12　　12 | 72　　16 | 64　　12 | 48　　7 | 49
10 | 90　　11 | 33　　8 | 96　　16 | 208

வகுத்தல் வாய்பாடு செய்து காட்டும் முறை.

8 பேருக்கு 8-ஐப் பிரித்துக் கொடு　8 | 8　　1×8= 8
8 பேருக்கு 16-ஐப் பிரித்துக் கொடு　8 | 16　　2×8=16
8 பேருக்கு 24-ஐப் பிரித்துக் கொடு　8 | 24　　3×8=24
8 பேருக்கு 32-ஐப் பிரித்துக் கொடு　8 | 32　　4×8=32
8 பேருக்கு 40-ஐப் பிரித்துக் கொடு　8 | 40　　5×8=40



| A | B | C |
|---|---|---|
| கணக்கு | கணக்குப்போடும் வழி | கணக்குப் போடுவதில் ஞாபகம் வைக்க வேண்டிய வாய்பாடு. |

ஆகவே மேலே சொல்லப்பட்ட வகுத்தல் கணக்குகளைச் செய்ய பெருக்கல் வாய்பாட்டின் அவசியம் ஏற்படுவதாயிருந்தாலும் இக்கணக்குகள் பெருக்கல் கணக்குகள் ஆகமாட்டா.

பெருக்கல், கழித்தல், வகுத்தல் முறைகள்.

8136

A.

| ப ல | ல | ப ஆ | ஆ | நூ | ப | ஒ | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | 0 3 | 8 6 | 5 8 | × |
| 2 | 4 1 | 5 2 2 | 6 5 5 | 6 1 5 | 8 0 | 0 | |
| 2 | 6 | 0 | 7 | 2 | 8 | 0 | |

இலக்கங்களை அந்தந்த ஸ்தானங்களுக்கு நேர் நேரே எழுதுவதால் பலவிதமான பிழைகள் நீங்கும். இம்மாதிரி ஆரம்பத்தில் பழக்குவது கணித பாடத்தின் ஒழுங்கு, வரிசை, அழகு இவற்றை வெளிப்படுத்தும்.

B. 63-ல் 38 போகப் பாக்கி:

(1) 63-ல் 30 போக, பாக்கி 33. 33ல் 8 போக, பாக்கி 25;

(2) 38-ம் 20-ம் 58: 58-ம் 5-ம் 63: 20+5=25.

அதே மாதிரி 10 ரூபாயில் ரூ. 6-9-2 போக மிச்சம்:

| | | |
|---|---|---|
| 7- 9-2-ம் | 10 பையும் ரூ. 7-10-0 | 0-0-10 |
| 7-10-0-ம் | 6 அணுவும் ரூ. 8- 0-0 | 0-6- 0 |
| 8- 0-0-ம் | 2 ரூபாயும் ரூ. 10-0-0 | 2-0- 0 |
| | | 2-6-10 |

வகுத்தல் :—வாய்பாட்டை அனுசரித்த முறை.

67ன் வாய்பாடு

$$405831 \div 67 = 6057$$

67×1= 67
67×2=134
67×3=201
67×4=268
67×5=335
67×6=402
67×7=469
67×8=536
67×9=603

```
67) 4 0 5 8 3 1 ( 6 0 5 7  ஈவு
    4 0 2
        3 8 3
        3 3 5
          4 8 1
          4 6 9
            1 2  மிச்சம்.
```

வாய் பாட்டைப் பார்த்தவுடனே 405-ல் 67-நிச்சயமாய்
6-தடவை தான் அடங்கும் என்று சொல்லலாம்.
38-ல் 67-அடங்காது, ஆக பூஜ்யம்.
383-ல் 67, 5-தடவை தான் அடங்கும்
481-ல் 67, 7 தடவைதான் அடங்கும்.

குறிப்பு: ஆரம்பத்தில் இம்முறையைக் கையாளுவது சிலாக்கியம். நிச்சயமாக ஒருவருக்கும் வகுக்கும் எண் வகுக்கப்படும் எண்ணில் எத்தனை தடவை அடங்கும் என்று சொல்ல முடியும். பழைய முறைப்படி, 6, 5, 7, தடவை போட்டுப் பார்த்துப் பிறகு 6-தடவை தான் என்று சொல்லுவது வழக்கம். மேலும் 6-தடவை, 5-தடவை, 7-தடவை பெருக்கிப் பார்த்து அழித்து அழித்துப் போடுவதையும், அப்படி அழிப்பதினால் பல இலக்கங்கள் தெரிந்தும் தெரியாமலும் இருந்து அதன் மேல் மேலும் மேலும் இலக்கங்களை எழுதிப் பிறகு நேரிடும் பல சந்தேகங்களுக்கு இடங்கொடாமலிருக்கவும் மேலே சொன்ன முறை நல்ல பயனைத்தரும். பல வருஷங்களில் இம்முறையைக் கையாண்டு வந்ததிலிருந்து நீண்ட வகுத்தல் கணக்கைப் பல குழந்தைகள் தப்பிதமின்றிச் செய்ய முடிகிறது என்று யான் அறிந்திருக்கிறேன்.

ரூ. அ. பை. பெருக்கல்,

| ரூ 7 | அ 12 | பை 5 × 26 |
|---|---|---|
| | 26 | |
| 26 × 7 | 12 | 26 × 5 |
| 182… | 312 | 12 ⌊ 130 |
| 20 | 10 | 10—10 |
| 202 | 16 ⌊ 322 | |
| | 20—2 | |
| ரூ. 202 | 2 | 10 |

இனம் இனத்துடன் சேரும்.

ஞாபகம் வை 1. அணாவை அணாவுடன் கூட்டு 2. ரூபாயை ரூபாயுடன் கூட்டிக்கொள். சாதாரணப் பெருக்கலுக்கு எடுத்துக் கொண்ட முறையையே இங்கும் அனுஷ்டித்திருப்பதைக் காணலாம்.

பெரிய எண்களைப் பார்த்துப் படிப்பதிலும் அவைகளை எழுதுவதிலும் பயிற்சிகள் உதாரணங்கள் :

A.

| ஊர் | ஜனத்தொகை |
|---|---|
| கோயம்புத்தூர் | 95198 |
| மதுரை | 182018 |
| கும்பகோணம் | 62317 |
| சைதாப்பேட்டை | 33037 |
| கள்ளிக்கோட்டை | 99273 |
| சென்னை | 647230 |
| காஞ்சிபுரம் | 65258 |



### கேள்விகள்

1. ஜனத்தொகையைப் படி.
2. எது அதிக ஜனநெருக்க முடையது.
3. எது குறைந்த ஜனங்களுடையது.
4. அதிக ஜனத்தொகையுள்ள ஊரில் முதலில் எழுதிப் படிப்படியாக ஜனத்தொகை குறைந்து வரும்படி ஊர்களையும் அவைகளின் ஜனத்தொகையையும எழுதிக்காட்டு.

### ஐந்தாம் ஜார்ஜ் ஞாபகார்த்த நிதி

B.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1936 ஜூலை 18 முடிய | 141863 | 14 | 7 |
| ஆகஸ்டு 1 முடிய | 175778 | 13 | 10 |
| ,, 8 முடிய | 189935 | 5 | 8 |
| ,, 15 முடிய | 205655 | 10 | 5 |
| ,, 22 முடிய | 222178 | 2 | 2 |
| ,, 29 முடிய | 230411 | 15 | 3 |

### கேள்விகள்

1. இவற்றை ஒவ்வொரு தேதிப் பிரகாரம் படித்துக் கொண்டுவா.
2. ஒவ்வொரு வாரத்திலும் எவ்வளவு அதிகமாயிருக்கிறது என்று கவனி.
3. ஆகஸ்டு 8-ஐ விட 15உ எவ்வளவு அதிகம் ஏறியிருக்கிறது ?
4. 15-ஐ விட 22உ ,, ?
5. 22-ஐ விட 29உ ,, ?

### கடைச்சாமான்களின் விலைகளை அறிதல்: நூறறைப்பெட்டி.

சாதாரணமாய் வீட்டில் வழங்கும் சாமான்களின் விலையைப் பிள்ளைகளைக் கொண்டு கடைகளிலிருந்து அறிந்து கொள்ளுவது வெகு பிரயோஜனமுள்ளதாயிருக்கும். மேல் வகுப்புகளில் அடியிற் கண்ட பிரகாரம் ஒரு விலை ஜாபிதா தயார் செய்வது நல்லது.

பலவிதக் கடைக்கணக்கு, பின்னக்கணக்கு, பட்டி தயார் செய்தல் சில்லரை வியாபாரம் போன்ற கணக்குகளுக்கு இவை உபயோகப்படும். முக்கியமான பண்டங்களை ஐந்தறைப்பெட்டி போன்ற சில பெட்டிகளில் வைத்திருப்பது பல பாடங்களிற்குப் பிரயோஜனமாயுள்ளதாகும். நூறு அறைகள் உள்ள பெட்டியில் இவைகளை ஜாக்கிரதைப் படுத்தலாம்

## பண்டங்களின் விலை ஜாபிதா.

படி = பட்டணம் படி :

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. அரிசி (பச்சை) 38½-படி ... | 7 | 12 | 9 |
| 2. அரிசி (புழுங்கல்) 5-படி ... | 1 | 0 | 0 |
| 3. அரிசி நொய் 6½-படி ... | 1 | 0 | 0 |
| 4. நெல் 11-படி ... | 1 | 0 | 0 |
| 5. கம்பு 8½-படி ... | 1 | 0 | 0 |
| 6. கேழ்வரகு 10-படி ... | 1 | 0 | 0 |
| 7. கோதுமை சம்பா 5-படி | 1 | 0 | 0 |
| 8. ஷை (மா) 5-படி 6-ஆழாக்கு | 1 | 0 | 0 |
| 9. சவ்வரிசி வீசை ... | 0 | 5 | 6 |
| 10. கடலை 8½-படி ... | 1 | 0 | 0 |
| 11. உளுந்து 5½-படி ... | 1 | 0 | 0 |
| 12. பயறு 6-படி ... | 1 | 0 | 0 |
| 13. காராமணி படி ... | 0 | 2 | 6 |
| 14. கடலைப்பருப்பு படி ... | 0 | 2 | 4 |
| 15. உளுத்தம் பருப்பு படி ... | 0 | 3 | 6 |
| 16. பயத்தம் பருப்பு படி ... | 0 | 3 | 6 |
| 17. மொச்சை படி ... | 0 | 4 | 0 |
| 18. பட்டாணி படி ... | 0 | 2 | 3 |
| 19. கோதுமை மா படி ... | 0 | 2 | 6 |
| 20. புளி வீசை ... | 0 | 4 | 3 |
| 21. உப்பு படி ... | 0 | 1 | 6 |
| 22. மிளகாய் வீசை ... | 0 | 7 | 0 |
| 23. தனியா வீசை ... | 0 | 4 | 6 |
| 24. கடுகு வீசை ... | 0 | 5 | 0 |
| 25. மிளகு வீசை ... | 1 | 0 | 0 |
| 26. சீரகம் வீசை ... | 1 | 0 | 0 |
| 27. வெந்தியம் வீசை ... | 0 | 4 | 6 |
| 28. பூண்டு வீசை ... | 0 | 5 | 0 |
| 29. வெங்காயம் வீசை ... | 0 | 1 | 3 |
| 30. மஞ்சள் (வரளி) வீசை ... | 0 | 4 | 6 |
| 31. மஞ்சள் (பூச்சு) வீசை ... | 0 | 7 | 0 |
| 32. பெருங்காயம் பலம் ... | 0 | 2 | 6 |
| 33. வெண்ணெய் வீசை ... | 1 | 14 | 0 |
| 34. நெய் வீசை ... | 2 | 4 | 0 |
| 35. நல்லெண்ணெய் வீசை ... | 0 | 10 | 0 |
| 36. எள் படி ... | 0 | 4 | 6 |
| 37. சர்க்கரை(அஸ்கா)வீசை ... | 0 | 5 | 9 |
| 38. சர்க்கரை (பூரா) வீசை ... | 0 | 6 | 6 |
| 39. சர்க்கரை (நாட்டு) வீசை... | 0 | 3 | 8 |
| 40. வெல்லம் வீசை ... | 0 | 3 | 0 |
| 41. வெல்லம் (பனை) வீசை ... | 0 | 4 | 6 |
| 42. பனங்கற்கண்டு வீசை ... | 0 | 6 | 0 |
| 43. காப்பிக் கொட்டை (குண்டு) வீசை ... | 1 | 6 | 0 |
| 44. காப்பிக் கொட்டை(அரை) வீசை ... | 1 | 2 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 45. ஓவல்டின் பெரியது 1-டப்பி | 2 | 0 | 0 |
| 46. ஓவல்டின் நடுத்தரம் 1-டப்பி | 1 | 2 | 9 |
| 47. ஓவல்டின் சிறியது 1-டப்பி | 0 | 11 | 0 |
| 48. சேமியா பெரியது பெட்டி | 0 | 1 | 8 |
| 49. சேமியா சிறியது பெட்டி | 0 | 0 | 10 |
| 50. வாதாங்கொட்டை வீசை | 0 | 13 | 0 |
| 51. முந்திரிப்பருப்பு வீசை ... | 1 | 2 | 0 |
| 52. திராட்சை வீசை ... | 1 | 2 | 0 |
| 53. குங்குமப்பூ வராகனிடை... | 0 | 6 | 0 |
| 54. பச்சைகர்ப்பூரம்வராகனிடை | 0 | 3 | 0 |
| 55. கிராம்பு பலம் ... | 0 | 1 | 0 |
| 56. ஏலக்காய் பலம் ... | 0 | 3 | 3 |
| 57. பட்டணம் பாக்கு வீசை ... | 1 | 4 | 0 |
| 58. ஆமணக்கெண்ணெய் பெரிய புட்டி ... | 0 | 6 | 6 |
| 59. பாக்குப் பொடி 5-பலம் ... | 0 | 2 | 9 |
| 60. சுக்கு பலம் ... | 0 | 0 | 9 |
| 61. விளக்கெண்ணெய் வீசை | 0 | 8 | 3 |
| 62. கிரவின் டப்பா ... | 2 | 12 | 0 |
| 63. கர்ப்பூரம் பலம் ... | 0 | 2 | 3 |
| 64. சாம்பராணி பலம் ... | 0 | 0 | 10 |
| 65. குங்குமம் 5-பலம் ... | 0 | 1 | 0 |
| 66. சீயக்காய் வீசை ... | 0 | 5 | 6 |
| 67. சீயக்காய் பொடி வீசை ... | 0 | 6 | 6 |
| 68. தேயிலை பவுண்டு ... | 0 | 9 | 3 |
| 69. பேரீச்சம்பழம் வீசை ... | 0 | 3 | 6 |
| 70. கடலைமா படி ... | 0 | 3 | 0 |
| 71. கொள் படி ... | 0 | 1 | 11 |
| 72. தொன்னை நூறு ... | 0 | 4 | 0 |
| 73. தையல் இலை கட்டு ... | 0 | 7 | 0 |
| 74. ஓமம் வீசை ... | 0 | 8 | 0 |
| 75. சித்தரத்தை பலம் ... | 0 | 0 | 6 |
| 76. கண்டந்திப்பிலி பலம் ... | 0 | 0 | 9 |
| 77. தாம்புக்கயிறு முதல் தரம் | 0 | 5 | 0 |
| 78. தாம்புக்கயிறு மட்டம் ... | 0 | 3 | 6 |
| 79. துணிசோப்பு கட்டி ... | 0 | 0 | 9 |
| 80. உடம்பு சோப்பு (சந்தனம்) கட்டி ... | 0 | 2 | 9 |
| 81. உடம்பு சோப்பு (வேப்) கட்டி ... | 0 | 3 | 0 |
| 82. கோகோ டப்பி ... | 0 | 8 | 6 |
| 83. கிளாக்ஸோ டப்பி ... | 2 | 3 | 6 |
| 84. அமிர்தாஞ்சன் டப்பி ... | 0 | 7 | 0 |
| 85. துவரம் பருப்பு படி ... | 0 | 3 | 6 |
| 86. தேங்கா யெண்ணெய் வீசை ... | 0 | 10 | 0 |



நாம் இம்மாதிரி விலைப் பட்டிகளை அடிக்கடி தயார் செய்து வருவோமானால் அடியிற் கண்ட பதங்களின் அர்த்தமும் நன்கு விளங்கும்.

| | | |
|---|---|---|
| A | ஏற்றம் | இறக்கம் |
| | அதிகம் | குறைவு |
| | ஜாஸ்தி | கம்மி |
| | உயர்வு | தாழ்வு |
| | கிராக்கி | மலிவு, நயம் |
| B | முதல் தரம் இரண்டாந் தரம் | |
| | நடுத்தரம் : திடம், மட்டம் : | |

பல தேதிகளிலுள்ள விலையைக் கவனிக்க, ஒரு சாமான்கள் விலை ஏறியிருக்கிறதா, இறங்கி யிருக்கிறதா, தற்சமயம் அது கிராக்கியாகி விட்டதா, மலிவாகிவிட்டதா என்று பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்.

### கணக்குகளைப் படத்துடன் அமைத்துக் காட்டுதல் :

உபாத்தியாயர் இம்முறையைக் கையாளுவது நல்லது. நாம் கடைக்குச் சென்றால் பண்டங்களின் விலையைக் கடைக்காரன் சாதாரணமாய் வாயினாலே சொல்லி விடுகிறான். துணி பாத்திரம் முதலான கடைகளில் அந்தந்தப் பண்டங்களின் மீது அச்சாமான்களின் விலை ஒரு சீட்டில் குறிக்கப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும். இம் முறையைத்தான் படம் மூலமாகக் காட்டுகிறோம். பிள்ளைகளே அந்தந்தச் சாமான்களின் விலையை அறிந்து கொண்டு கேட்ட கணக்குகளை வாயினாலேயே செய்ய முயலுகிறார்கள். சில சந்தர்ப்பங்களைப் படங்களின் மூலமாகக் காட்டுவதும் ஏற்றதாகும்.

உதாரணங்கள்




அப்பியாசம் i. விலை என்ன?

A 1. ஒரு மேஜை, ஒரு நாற்காலி, ஒரு பீரோ ரூ. அ. பை.

2. ஒரு கித்தான் சாய்வு நாற்காலி }
ஒரு பிரம்பு சாய்வு நாற்காலி }

3. ஒரு தொட்டில், ஒரு கட்டில், ஒரு புஸ்தக அலமாரி

———————

மீதி ரூபாய்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| B | 1. ஒரு கித்தான் சாய்வு நாற்காலியும், ஒரு புஸ்தக அலமாரியும் வாங்கி ரூ. 10 கொடுத்தால் | | | |
| | 2. ஒரு மேஜை ஒரு நாற்காலி, ஒரு பீரோ வாங்கி ரூ. 40 கொடுத்தால் | | | |
| | 3. ஒரு தொட்டிலும் ஒரு கட்டிலும் வாங்கி ரூ. 35 கொடுத்தால் | | | |
| | 4. ஒரு பிரம்பு சாய்வு நாற்காலியும் ஒரு பீரோவும் வாங்கி ரூ. 30 கொடுத்தால் | | | |

———————

மொத்தம் எவ்வளவு ரூபாய்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| C | 1. புஸ்தக அலமாரி 3, கித்தான் காற்காலி 4 | | | |
| | 2. பீரோ 2, பிரம்பு சாய்வு நாற்காலி 2 | | | |
| | 3. நாற்காலி 4, மேஜை 3 | | | |

**வார்த்தைகளைக் குறைத்து அந்தந்த இடங்களில் சரியான விடையை எழுதச் செய்தல்**

**உதாரணம்**

| A | சாமான்களின் பெயர் | ஒன்றின் விலை | டஜன் விலை | குரோஸ் விலை |
|---|---|---|---|---|
| 1. | பென்சில் | 0 — 0— 5 | | |
| 2. | பொத்தான் | 0 — 0— 3 | | |
| 3. | அடிக்கோல் | 0 — 0—11 | | |
| 4. | நெருப்புப் பெட்டி | 0 — 0— 4 | | |
| 5. | பலூன் | 0 — 0— 3 | | |
| 6. | பேனா | 2 —10— 0 | | |
| 7. | சோப்பு | 0 — 3— 9 | | |
| 8. | நோட்டுப் புஸ்தகம் | 0 — 4— 6 | | |

**B சோப்பு வியாபாரம். ஞாபகம் வை. பெட்டி ஒன்றுக்கு 3 சோப்பு**

| | சோப்பின் பெயர் | பெட்டி விலை | ஒன்றின் விலை | டஜன் விலை |
|---|---|---|---|---|
| (1) | வினோலியா | 0—12—0 | | |
| (2) | எராஸ்மிக் | 0—14—0 | | |
| (3) | கிளிஸிரின் | 0—13—6 | | |
| (4) | ரோஜா | 0— 5—6 | | |
| (5) | சந்தனம் | 0—12—6 | | |
| (6) | வேப்பம் | 0— 9—6 | | |
| (7) | வேப் | 0— 8—6 | | |
| (8) | மைசூர் சந்தனம் | 0—11—6 | | |



**படிப்படியாக முறைகளின் மாறுதல்களைக் கவனிக்க.**

**சங்கீதக் கச்சேரி**

| | இடம் | டிக்கட்டு வீதம் | செலவான டிக்கட்டு | வசூலான பணம் |
|---|---|---|---|---|
| A | முதல் வகுப்பு | 0—8—0 | 151 | |
| | இரண்டாம் வகுப்பு | 0—4—0 | 239 | |
| | தரை | 0—2—0 | 267 | |
| B | நாற்காலி | 1—0—0 | 118 | |
| | பெஞ்சு | 0—8—0 | 307 | |
| | தரை | 0—4—0 | 389 | |

A. மாதிரி. $151 \times 8$ அணு $= 1208$

$1208 \div 16 =$ ரூ. 75—8—0

B. மாதிரி. 151 அரை ரூபாய்.

1 ரூபாய்க்கு 2 அரை ரூபாய்

$151 \div 2 =$ ரூ. 75—8—0

C. மாதிரி. $151 \times \frac{1}{2}$ = ரூ. 75—8—0

இங்குக் காண்பிக்கப்பட்ட 3 மாதிரிகளையும் கவனிக்கவும் வயதும் அறிவும் அநுபவமும் அதிகரிக்கிறதற்குத் தக்கபடி முறைகள் மாறிவருகிறதையும் இங்கிருந்து கவனிக்கலாம்.

வேறு ஒரு உதாரணம்.

**கணக்கு.**




ஒரு நீண்ட சதுரத் தோட்டத்தின் நீளம் 8-செ. 38-லிங்.

அகலம் 6—75.

அதைச்சுற்றி வேலி போட எவ்வளவு நீளமுள்ள வேலி வேண்டும்?

**சுற்றளவு கண்டு பிடிக்க முறைகளும் ஒவ்வொன்றுக்கும் ஏற்படும் நேரமும்.**

A. சுற்றளவு = 2 (நீளம் + அகலம்) = 2 நீளம் + 2 அகலம். இம் முறைப்படி செய்ய 2 பெருக்கலும் ஒரு கூட்டலும் ஆகிறது.

i. அதற்கு உண்டான நேரம் எனக்கு 1 நிமிஷம் :

ii. அம்முறைப்படி 15 பிள்ளைகளைச் சராசரி எடுத்துக் கொண்ட நேரம் 3 நி—45 செக்கண்ட் :

iii. முதல் பையன் 2 நி 40 செக் : கடைசி பையன் 5 நிமிஷம் :

B. நான்கு பக்கத்து அளவுகளையும் ஒரு தடவையில் ஒரே கூட்டலாய்க் கூட்ட.

i. நான் எடுத்துக்கொண்ட நேரம் ½ நிமிஷம்.

ii. 18 பிள்ளைகள் அம்மாதிரி செய்வதில் சராசரி எடுத்துக் கொண்ட நேரம் 2 நிமிஷம்.

iii. முதல் பையன் 1 நி 15 செ : கடைசி பையன் 3 நி 20 செக்·

C. ஒரு கூட்டலும் ஒரு பெருக்கலும்.

செ. வி.
6 — 75
8 — 38
15 — 13 × 2

இம்மூன்று முறைகளையும் பரீக்ஷித்துப் பார்க்க வகுப்பிலுள்ள பையன்களை மூன்று சமப் பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவையும் மேற்சொல்லியவைகளில் ஒரு முறையை அனுஷ்டித்தும் கணக்குப் போடச் சொல்லிப் பார்த்தால் சரியான நேரம் தெரியவரும். இப்பரீக்ஷைகளிலிருந்து எம்முறையை அனுசரிக்கச் சீக்கிரமாகவும் சரியாகவும் போடக்கூடும் என்பதைக் கண்டறியலாம்.

பிள்ளைகள் தனித்தனியே வேலை செய்யும் பரிசோதனைகள்.

| | | | நேரம் நி. | நேரம் செ. | சராசரி நேரம் நி. | சராசரி நேரம் செ. |
|---|---|---|---|---|---|---|
| I. | கூட்டல் 32 கணக்கு | முதல் பையன் | 10 | 15 | 20 | 50 |
| | | கடைசி | 45 | 0 | | |
| II. | கழித்தல் 42 கணக்கு | முதல் பையன் | 14 | 0 | 20 | 25 |
| | | கடைசி | 29 | 20 | | |
| III. | பெருக்கல் 40 கணக்கு | முதல் பையன் | 12 | 20 | 21 | 10 |
| | | கடைசி | 30 | 0 | | |
| IV. | வகுத்தல் 32 | முதல் பையன் | 14 | 20 | 31 | 30 |
| | | கடைசி | 50 | 0 | | |

(வயது 9 முதல் 13 வரையில்). (பிள்ளைகளின் சங்கியை 25,27,26,26)

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக் கூடியது என்ன ? ஒவ்வொரு பையன் தனது தேக மன வளர்ச்சி, புத்தி கூர்மை, நல்ல படிப்பை ஏற்றுக்கொள்ளும்படியான இடத்தின் அமைப்பு, படிப்பை அளிக்கும் சாதனங்கள், தனது சக்தியை வெளிக் காட்டுவதில் கொடுக்கப்பட்ட அவ



காசம் இதற்குத் தகுந்தாற்போல் விருத்தியடைகிறான். எல்லோரையும் நிறுத்தி வைத்து ஒரு கணக்கைச் சொல்லிவிட்டு 'ரெடி, வொன், டூ, த்ரீ,' என்று சொல்லிக் கணக்கும் போடச்சொல்லுவது மிகப்பொருத்தமாயிராது. நாமே ஒரு கணக்குக்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று நிர்ணயிக்கப் போதுமான பரீக்ஷைகள் செய்து பார்க்கவேண்டும். மேலும் சரியாகவும் சீக்கிரமாகவும் கணக்குப்போட ஒவ்வொருவனுக்கும் அப்பியாசம் கொடுக்கவேண்டும்.

### ஒரே காலத்தில் அனைவரும் கணக்குப் போடும் பரீக்ஷைகள்

மேலே காட்டியபடி பரீக்ஷை செய்து சராசரி நேரம் எடுத்து வைத்து அந்த நேரத்தில் மறு வருஷம் அதே கணக்குகளை அதேவகுப்புப் பையன்கள் போடச்சொல்லி பரீக்ஷை செய்தால் இதன் பிரயோஜனம் தெரியவரும். மேலே சொல்லப்பட்ட சராசரி நேரத்தில் 9, 9, 8, 5 மாணவர்கள் முறையே கணக்குப் போட்டு வந்தார்கள். மேலும் நமக்கே அந்த நேரம் தெரியவரும். ஒரே சமயத்தில் பல பிள்ளைகள் கணக்குப் போட்டு வந்துவிடுவார்கள்.

**தனித்தனி அப்பியாசம்.** நம்முடைய வகுப்பில் 30 பிள்ளைகள் இருந்தால் 30 பிள்ளைகளும் ஏககாலத்தில் ஒன்றிற்கொன்று எண்களில் வித்தியாசமுள்ள 30 கணக்குகளைப் போடும்படி சாதனங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். 30 அட்டைத் துண்டுகளில் வெவ்வேறு கணக்குகள் இருக்கவேண்டும். எல்லாம் கூட்டல் முறையை அல்லது கழித்தல் முறையை அனுசரித்ததாய் இருக்கலாம். எல்லோரும் ஒரு கணக்கு போட்டபிறகு அட்டைகளை மாற்றிக் கொடுக்கலாம். இப்படி செய்யின் ஒரே சமயத்தில் ஒருவன் தானே ஒரு கணக்கைச் செய்து வருவான். இதில் அப்பியாசம் அதிகம் வேண்டும். தினசரி நட வடிக்கைகளில் காணப்படும் விஷயங்களை நோக்கின் இம்மாதிரி அப்பியாசம் கொடுக்கப் போதுமான சந்தர்ப்பங்கள் வருகின்றன என்று தெரிய வருகிறது. அட்டைகள் தயார் செய்வது சற்றே கடினம் தான்.

### (உதாரணம்) காலணா அரையணாக் கணக்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்டாம்பு | பட்டம் | பலூன் | குங்குமம் | வண்ணான் |
| நாடா | பொரி உருண்டை | நெருப்புப்பெட்டி | பூ | கூலி |
| சோடா | பக்ஷணம் | சூடம் | வெற்றிலை | முதலியன |

### தினசரி நடவடிக்கைகளைக் கையாளுவதினால் ஏற்படும் அனுகூலங்கள்.

1. பிள்ளைகள் தாங்களாகவே சிலவைகளைக் கண்டறியவும் சிலவற்றைச் செய்து பார்க்கவும், சிலவற்றைக் கண்ணால் பார்க்கவும் சிலவற்றை ஞாபகம் வைத்துக் கொள்ளவும் மேன் மேலும் ஒன்றை அபிவிருத்திச் செய்து கொள்ளவும் இடம் ஏற்படுகிறது.

1. பார்த்துவரக் கூடியவை.

1. சூளை (அதிக செங்கல், ஓடு)
2. கடைத்தெரு (வியாபாரம், நிறை அளவு, சாமான்கள்)
3. களஞ்சியம் (நெல் மூட்டைகள்)
4. வீடுகட்டுதல்
5. வயல்கள் (இடம், பரப்பு, விஸ்தீர்ணம்)
6. தோட்டம், தோப்பு.
7. கோயில் (மூலஸ்தானம், வீதி, பிராகாரம்)
8. கஜானா.
9. ரயில்வே ஸ்டேஷன்
10. தபால் தந்தி ஆபீஸ்
11. கூட்டமான இடங்கள் (எண்ணிக்கை)
12. சாலை போடுதல்.

2. சேகரம் செய்யக் கூடியவை.

1. ஸ்டாம்பு.
2. நெருப்புப் பெட்டி படங்கள்
3. அட்டை பெட்டிகள்
4. கவர்கள்
5. தினசரிப்பத்திரிகையில் கணக்குப் பாட சம்பந்தமான விஷயங்கள், சூரிய உதயம், அஸ்தமனம் சீதோஷ்ணம்
6. கியாடலாக்குகள்
7. படத்துடன் விலைகுறிக்கப் பட்ட சில விளம்பரத்துண்டுகள்
8. பலவித கடியாரங்கள் (நேரம் படித்துப்பார்க்கக் கூடியவை)
9. பலவிதத் தராசின் படங்கள்.

3. செய்து பார்க்கக் கூடியவை.

1. கடிகாரம்
2. தராசு
3. கியாலண்டர்
4. சோப்புப் பெட்டி
5. பகல் இரவு காட்டும் படம்
6. தபால் கவர்
7. பின்னங்களைக் காட்டும் வட்டங்கள்
8. பந்தயம் விட்டு அளத்தல்
9. ,, நேரம் அறிதல்
10. தேசப்படங்கள் (ரயில்மார்க்கம்)
11. மணி கோர்த்தல்
12. நெருப்புப் பெட்டி அலமாரி

5. தாங்களே அளர்ந்து பார்த்துவரக் கூடியவை

A. நீளம் அகலம்

| | |
|---|---|
| 1. வகுப்பு அறை | வீட்டின் அறை |
| 2. பாய் | கம்பளி |
| 3. அட்டை | மெத்தை |
| 4. மேஜை, கரும்பலகை | தலையணை |
| 5. பெஞ்சி, கட்டில் | சமுக்காளம் |
| 6. பெரிய கடிதம் | போர்வை |
| 7. திண்ணை | வயல் |
| 8. தாழ்வாரம். | தெரு |
| 9. முற்றம் | கோயில், குளம் |



147640 சென்னை-600 003.

B. உயரம் அகலம்

1. கதவு
2. ஜன்னல்
3. தட்டி
4. படுதா } கொசுவலை (நீளம், அகலம், உயரம்)

5. மரத்திற்கு மரம்
6. தூணுக்குத் தூண்
7. குழாய்க்குக் குழாய்
8. விளக்குக்கு விளக்கு
9. கம்பத்திற்குக் கம்பம்
10. நிழலின் நீளம் } நீளம் மாத்திரம்.

(நோட்டு, புஸ்தகம், சிலேட்டு, பெட்டி)

6. சித்திரம் வரைதல்.

| | | |
|---|---|---|
| கைகாட்டி மரம் | விமானம் | அவுன்ஸ் பாத்திரம் |
| கைல், பர்லாங், கல் | மழை அளக்குங் கருவி | அதிர்வெடிக் குழாய் |
| காற்றாடி | பானை, அகல், பாலிகை | ஜலம் செல்லும் குழாய் |
| பல்லக்கு | பாத்திரங்கள் | பலூன் |
| வாணம் | ரங்கராட்டினம் | கோபுரம், தேர், பலவித வண்டிகள். |

குறிப்பு: இம்மாதிரி பார்த்துச் செய்து, சேகரித்து, அளந்து பயிற்சி பெருவதுடன் கணக்கிலும் தேர்ச்சி யடையவேண்டு மென்பதை நாம் மறக்கக் கூடாது. முதலில் சொல்லியவைகள் கணக்கில் ஒரு அவா உண்டுபண்ணச் செய்யும் மார்க்கங்களாகும்.

புதிய ஒரு பாடம் கற்றுக் கொடுத்தல்.

இதில் அனுஷ்டிக்கவேண்டிய சில விதிகளை நாம் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

1. சம்பாஷணை
2. சோதனை
3. மனப் பயிற்சி
4. பயிற்சி
5. தனித்தனிபரிசோதனை
6. பரீக்ஷை
7. புதுப்பதங்களை அறிந்து கொள்ளுதல்.

இம்மாதிரி சில விதிகளை அனுசரித்துப் படிப்படியாகப் பாடத்தை நடத்துதல் முக்கியமானது. பிள்ளைகளும் உபாத்தியாயரும் ஒரு விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிக்க வேண்டும்.

வட்டி என்றால் என்ன ? ஏன் வாங்குகிறார்கள் ? எந்தெந்த விதமாக வட்டி வாங்குகிறார்கள் ? அடகு வைத்தல், ஈடு வைத்தல் என்றால் என்ன ? என்னென்ன சாமான்கள் அடகுவைக்கிறார்கள் ? இவைபோன்ற சம்பாஷணை அவசியம். ஒரு பிராமிசரி நோட்டு எடுத்துப் படித்துப் பார்க்கிறது. அதில் என்னென்னவிவரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன ? என்று கண்டறிவது அவசியம். பிறகு படிப்படியாகக் கணிதஞானத்தை விருத்தியடையச் செய்யக்கூடிய சுலபமான மனக்கணக்குகளால் பயிற்சி யளித்து

பிறகே சிலேட்டுக் கணக்குகளில் பழக்கம் கொடுக்கவேண்டும். இதன்பிறகு தலைக்கு 7, 8 கணக்கு கொடுத்து தனித்தனியாகப் போடச் சொல்லுவோமானால் ஒவ்வொருவனும் எடுத்துக்கொள்ளும்நேரம், தெரிந்துகொள்ளாத விஷயங்கள், செய்யும் பிழைகள் இவை தெரியவரும். இவற்றை நீக்கத் தக்க அப்பியாசமும் கொடுப்போமானால் நாம் சொல்லிக்கொடுத்த விஷயங்களைப் பரீக்ஷை செய்து பார்க்க நாம் யோக்கியதை யுள்ளவர்களாக ஆவோம். பிள்ளைகளும் பரீக்ஷை செய்யப்படுவதற்கு யோக்கியதா பாத்திரங்களாகிறார்கள்.

### கணிதபாட அட்டவணை. நாட்டுப்புறமும் நகரமும்.

ஒவ்வோரு வகுப்பிற்கும் ஒரு வருஷத்தில் நடக்கக்கூடிய கணித பாட திட்டத்தை உபாத்தியாயர்கள் அனுபவத்திலிருந்து தயாரித்துக் கொள்ளலாம். கணிதஞானம் ஒன்றுதான். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் ஒருவித பயிற்சியும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் வேறு வித அப்பியாசத்தில் அதிகப் பயிற்சியும் வேண்டியிருக்கிறது. உதாரணமாக நாட்டுப்புறத்தையும் நகரத்தையும் எடுத்துக்கொள்ளுவோம். முன் இதழில் சொல்லிய 16 சந்தர்ப்பங்களிலும் நாட்டுப்புறத்தாரும் நகரத்தாரும் பழகத்தான் வேண்டியிருக்கிறது. ஆகவே பாட அட்டவணைக்கு அந்த 16-பிராஜெக்டுகளும் இன்றியமையாதவை என்றே நினைக்கிறேன். ஆனால் வகுப்பிற்குத் தகுந்தவாறு அமைத்துக்கொள்ளுவது உசிதமானது. நாட்டுப்புறத்திலிருந்தே நகரத்தாருக்கு அரிசி, கறிகாய் வரவேண்டி யிருக்கிறது. நாட்டுப்புறத்தில் படிக்கிற பிள்ளைகள் ஆரம்பப் படிப்பு முடிந்ததும் அருகாமையிலுள்ள நகரத்திற்கு வரவேண்டியிருக்கிறது. நகரத்தாருக்குச் சொந்தமான நிலங்கள் நாட்டுப்புறத்திலேயே இருக்கின்றன. மேலும் சில கிராமங்கள் நகரத்தைச் சுற்றியே இருக்கின்றன. நாட்டுப்புறப் பள்ளிக்கூடங்களிலும் பலவித குழந்தைகள் ஜாதி, மதம், செல்வம், நிலைமை, தொழில் இவைகளில் வேறுபாடுள்ளவர்கள் ஒருவர்க்கொருவர் சேரவேண்டியிருக்கிறது. அதனால் ஒருவர்க் கொருவர்க்குள்ள குணவிசேஷங்கள் தெரியக் காரணம் ஏற்படுகிறது. “பட்டிக் காட்டான் ரயிலைப் பார்த்துப் பிரமிக்கிறான்” என்று சொல்லுவது உண்டு. ஆனால் வரவர அக்காலம் மாறி வருகிறது. முற்றிலும் மலையேறவில்லை என்பது ஒன்றுதான். தினசரிப்பத்திரிகை, மாதசஞ்சிகை, ரயில், பஸ், ஆகாய விமானம், தந்தி, தபால் மூலமாக வெகு சீக்கிரம் வெகு தூரத்து சமாசாரங்கள் கிராமங்களுக்கு இட்டி விடுகின்றன: ஆகவே இருதாரத்துக் குழந்தைகளும் நூதன விஷயங்களில் கற்று அறிய வேண்டியவர்களாயிருக்கிறார்கள், ஆயினும் இப்பொழுதுஇருக்கும் ஒரு “ஷரா” ப்படிகிராமத்துக் குழந்தைகள் பாட அட்டவணை கிராமத்திற்கு ஒத்ததாயும் நகரத்துக் குழந்தைகள் பாட அட்டவணை நகரத்திற்கு ஒத்ததாயும் இருக்கவேண்டும் என்பது சரியே. பொதுவாக எல்லோருக்கும் ஒருவிதக் கணிதப் பயிற்சியை அளிப்பது அவசியம்.



இடவேலை, நீட்டலளவை இவ்விரண்டும் ஒன்று ஆகா. இடத்தில்
ரப்பு, நீளம் அகலமுவ்ள இடம், விஸ்தீர்ணம் என்பது அடங்கியிருக்
றது. ஆகவே இடவேலை என்பதற்கு அஸ்திவாரமாயுள்ள சதுர
ங்குலம், சரது அடி, சதுர கெஜம் என்பவை தெரிந்திருத்தல் அவசிய
ாகும். முந்தின சஞ்சிகையில் பிராஜெக்ட் 11, 12-ல் காட்டப்பட்ட
டுகட்டுதல், தோட்டம், நிலம், தெரு இவைகளில் சொல்லப்பட்ட
றிப்புகளைக் கவனித்து இடவேலை சம்பந்தமான பாடங்களை நடத்துவதே
சிதமாகும்.

### டிவுரை

சென்ற 7-மாதங்களாக நான் இவ்விஷயத்தைக்தக்குறித்து எழுதி
ந்தது என்னுடைய தாழ்ந்த ஆராய்ச்சியின் போக்கை ஒருவாறு வெளிப்
டுத்துகிறது. வெகு நாட்களாக நான் கணிதபாட போதனையில் கவனம்
சலுத்தி வருகிறேன். இவைகளை எல்லாம் முற்றிலும் ஒழுங்குபடுத்தி
கோதர சகோதரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமானால் புத்தகங்கள்
ன்றியமையாதவை ஆகும். கடவுளுடைய கிருபையினால் அக்காலமும்
நருங்கும் என்றே நினைக்கிறேன். குழந்தைகளுக்குப்பாடம்கற்றுக் கொடுக்
கயில் நம்மினுள் உள்ளே சில சந்தேகங்கள் தோன்றுகின்றன. குழந்தை
ள் சில விஷயங்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். காலபேத இயல்பு
ன்பது ஒருவாறு மனதில் தோன்றுகிறது. இவைகளைக்கொண்டு நாம்
த்மசோதனையில் ஆழ்ந்திருப்போமானால் பளிச், பளிச், என்று சில
தாற்றங்கள் உண்டாகின்றன. இவைகளை ஒருவாறு சேகரம் செய்ய
ற்போதுள்ள கணித விஷயங்களும், கணித முறைகளும் சற்றுமாறு
தற்கு இடமிருக்கின்றன. பழைய முறைகளிலும் குழிக்கணக்கு, பெரு
ழி, சிறு குழி என்பவைகள் சதுரவாய்ப்பாட்டிற்கு இன்றியமையாத
ாகவு மிருக்கின்றன. நம் மிடம் குழந்தைகள் படித்து முன்னுக்கு வர
வண்டும் என்று நினைப்பவர் யாவரும் தாங்கள் அறிந்தும், அறியாமலும்
ூதன விஷயங்களில் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். குழந்தைகளுட.
ிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம்” என்பதை ஞாபகம் வைக்க
ல்லா விஷயங்களும் கடவுள் கிருபையினால் நன்கு தெரியவரும்.

# பெண் கல்வி

*By* **Miss FALICIA BENJAMIN**

*Head Mistress, Danish Missitress Gires' School, Siloam, Tirukoilur.*

"பெண்கல்வி" என்ற பொருள் பற்றி உபந்நியாசிப்பதோ, வியாசம் எழுதுவதோ, கிளர்ச்சி செய்வதோ, நமது தேசத்தில் "பெண்கல்வி" எவ்வளவு பரிதாபகரமான நிலையிலிருக்கிறது என்பதையேனும் அல்லது ஏதோ ஓர் காலத்தில் மேம்பாடான நிலையிலிருந்து க்ஷீண தசையடைந்து விட்டது என்பதையேனும் தெளிவாய்க்காட்டுவதாகும். மேலும் "பெண்களுக்குக் கல்வி எதற்கு?" என்று கேட்கும்படியான நிலைமை நேர்ந்ததற்காகத் தேசாபி விருத்தியை, குலாபி விருத்தியை, குடும்பாபி விருத்தியை விரும்பும் ஒவ்வொருவரும் வருந்தாமலிருக்க முடியாது. இக்கேள்வி தற்காலக் கேள்வியே' யென்றும், முன்காலத்துக் கேள்வி யன்று என்றும் நிதானிப்போர் பலர் உளர். காலசக்கரம் சுழன்று வரும் வேகத்தில் பிற்காலத்திலுண்டான மாறுதல்களின் மூலமாய் இக்கேள்வி பிறந்ததென்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில் இக்கேள்விக்கு இடமில்லாமல் ஆண்களும் பெண்களும் கல்வி கற்றனரென்பது சரித்திரங்களால் விளங்குகின்றது.

## I. முன்னிலைமை.

பண்டைக் காலத்தரசர், தாம் கொலுவிலிருக்கும் போது தன்னருகிலோர் ஆசனமிட்டு அதில் தம் பத்தினியை அமரும்படி செய்தனர் என்ப. பெண்பாலர் எவரும் வீட்டிலடைபட்டிராமல் அறிவிற் சிறியராய்த் தம்மிஷ்டப்படி கற்பழியாமல் எங்கும் சஞ்சரிப்பர். எப்பெண்ணும் தனக்கிஷ்டமில்லாத மூடனை விவாகஞ் செய்ய விரும்பமாட்டாள். பெண்களும் தேகாப்பியாசத்திற்குரிய விளையாட்டுக்களை விளையாடியும் யாழ்வாசித்தல், புல்லாங்குழல் ஊதுதல், ஊஞ்சலாடுதல், சொக்கட்டானாடுதல், கவி எழுதுதல் முதலிய கலைஞானங்களிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். பூர்வீகத்தமிழ் மாதரின் சரிதைகளை ஆராய்வோமானால், வீரத்தாய்மாரும் கல்வியிற் சிறந்த நற்பெண்டிரும் எங்கு மிருந்தனர் என்றே புலப்படுகிறது. மகா வித்துவான் ரா. ராகவையங்கார் அவர்கள் எழுதியுள்ள 'நல்லிசைப் புலமை மெல்லியலார்' என்னும் நூலும் இதனைத் தெளிவு பெற வலியுறுத்திக்காட்டும்.

கம்பர், பாலகாண்டத்தில் நாட்டுப் படலத்திலே கோசலநாட்டுப் பெண் மக்களின் குணாதிசயங்களை வருணிப்பதைக் காண்கில் அந்நாட்டுப்பெண்கள் நிச்சயமாய்ப் படித்திருந்தார்கள் என்றேற்படுகிறது.



முன்னோர் காலத்தில் விஜய நகரத்தரசனாகிய கிருஷ்ண தேவராயர் சமஸ்தானத்திலும், ராஜ்யத்திலும் அநேகமாய் அரிவையர் நாகரிகத்திலும், கல்வி கேள்வியறிவிலும், தைரியத்திலும் சிறந்து விளங்கினர். அநேக ஸ்திரீகள் உறை கழித்த வாளோடு ராஜ ஸ்திரீகளைப்பாதுகாத்து வருவார். ராயர் வீட்டுப் பெண்கள் வெளியிற் புறப்படும் போதும், திரியும் போதும் ஏறிச்செல்லும் பல்லக்குகளும், அவற்றைச் சுமந்து செல்வதற்குப் பணிப் பெண்களும் உடன் செல்வதற்கு மெய்க்காவலாளரும் பெண்களாகவே ஏற்பட்டிருந்தனர். இதுவு மன்றி 12,000 பெண்கள் அவர் சமஸ்தானத்திலிருந்து மற்ற வித்தைகளோடு கூட, யுத்தப் பயிற்சிக்குரிய நூற்களைக்கற்று மல்யுத்தம், வில் வித்தை, யானை, குதிரை, ஏற்றம் முதலிய தேகாப்பியாசத் தொழில்களிலும் தேர்ந்திருந்தனரென்று, சரித்திர மூலமாய் நன்குணரலாகும்.

பண்டைக் காலத்து வடமொழியாளர், தருமவிதி யொன்று ஏற்படுத்தித் தமிழ் நாட்டில் இன்னின்ன ஜாதி, மதத்தினர் மட்டுந்தான் கற்க வேண்டும், இன்னின்னவர் கற்கக்கூடாது என்றும், அவர்களோடு சூத்திரரும், தாழ்மையாக எண்ணப்பட்ட ஸ்திரீ ஜாதியையும் விலக்கி வைத்தனர். எனினும் அக்காலத்திலும் கற்றறிந்த பெண்கள் அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்னும் ஸ்திரீ குணங்களுடன் வீரம் என்னும் ஐந்தாவதான ஆபரணத்தையுமணிந்திருந்தனர். யுத்தத்தில் முதுகுகாட்டி வீட்டிற்கு வந்த தன் கணவனுக்கு ஓர் மாது புத்தி காட்டும்படி வழக்கம் போல் ஸ்நானம் செய்யும்படி கூப்பிட்டாள். புழக்கடை வந்ததும் தனக்கான வஸ்திரம் அங்குயில்லாமல், அதற்குப் பதிலாக ஒரு சேலையும் அரைத்த மஞ்சளும் இருக்கக்கண்டு வீரன் காரணங் கேட்டான். அதற்கவள், "ஐயா, இதுகாறும் மாமியும் நானுமாக 2 பெண்கள் இருந்தோம். இப்போது நீர் யுத்தத்தில் முதுகு காட்டி வீரத்தன்மை யிழந்து வந்ததால் நீரும் உலகத்தார் கூறியபடி பெண்ணுக்குச் சமானமானீர். ஆகையால் நீர் குளிக்க மஞ்சளும் உடுத்திக்கொள்ளச் சேலையும் கொணர்ந்தேன்," என்றனள். கணவன் வெட்கி அன்று முதல் வீரமுள்ள திடகாத்திரனாய்க் காலங் கழித்தான் என ஒரு கதையுண்டு. வீரமாதர்களின் சிறப்பைப் பழந்தமிழ் நூலான புறநானூற்றுப் பாடல்களாலும் நன்கு அறியலாகும். கவிப் பெருமாட்டியாகிய ஔவையாரே, பெண் கல்வியின் மேம்பாடு எத்தன்மைத்தாய்ப் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிற்று என்பதற்குத் தக்க சான்றுவாள்.

## II. தற்கால நிலைமையோ,

எழுத்து வாசனையற்றவர்களாய், ஏற்க வேண்டிய பொறுப்புகளுக்கு அபாத்திரராய், அறிவிலிகளாய், ஆரணியத்தில் வாழும் ஜீவன்களுக் கொப்பாய், நமது நாட்டில் பெரும் பான்மையான அரிவையர்கள் ஏனைய நாட்டின் பெண் மக்களுக்கு இகழ்ச்சியாய், நிந்தையாய் அறிவின்மைக்குரிய சகல அஞ்ஞானத்திற்கும், தாழ்வுற்ற ஜீவியத்

திற்குப் இருப்பிடமாய் இருந்து வாழ்தல் இழிவு அன்றோ? ஆம். அஃதோர் பேரிழிவே.

III. கல்வியின் அவசியத்தைப்பற்றிச் செய்யுள் வாயிலால் அறியத் தகும்.

“ குஞ்சி யழகும், கொடுத்தானைக் கொட்டழகும்
மஞ்ச ளழகும், அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யா, மென்னும் நடுவு, நிலைமையால்
கல்வி யழகே, அழகு.”

எனப் பெரியோர்கள் கூறியிருப்பதால், முகத்தை அழகுசெய்யும் மஞ்சளைக்காட்டிலும் அகத்தை அழகு செய்யும் கல்வியே அழகாகும் என்பதை அறிகின்றோம்.

“ எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் ”

“ கண்ணு டைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர் ”

“ கல்வி இல்லாதவர் மூடர் ” என்றும் இவைபோன்ற ஆன்றோர் வாக்கியங்களால் கல்வி யுடையவரே கண்ணும் அறிவுமுடையவர் என்பது விளங்குகின்றது. பெண்களுக்குக் கண்களேன்?” என்று கேட்போர் எவரேனு முண்டேல், பெண்களுக்குக் கல்வி ஏன்? என்று கேள்வி கேட்கத்தகும். மேலும், கல்வியால் உண்டாகும் பயனை நோக்கு மிடத்தும், ‘கல்வி ஒரு பாலராகிய ஆண்பாலருக்கு மாத்திரம் உரியதாம்,’ என்று கூறுகிறதற்கு இடமின்றி ஆண் பெண் இருபாலருக்கும் உரியதே என்பது வெளியாகும்.

“ அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவ லொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூஉங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.”

“ இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால், தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம் காணேம் கல்விபோல்
மம்மா ரறுக்கும் மருந்து.”

இப்பாடல்களின் பொருளாவன:—கல்வியானது தருமத்தையும், செல்வத்தையும், இன்பத்தையும், மோட்சத்தையும் தரும். தலைவாயிலில் நல்ல கீர்த்தியையும், நிலை நிறுத்தும்; எவ்விதக்கவலை நேரிடினும் உதவிசெய்யும். (ஆதலால்) அற்பவாழ் நாளையுடைய உயிர்களுக்கு நீங்காத்துணையான கல்வியினும் மேம்பட்டது வேறொன்றுமில்லை! (பிறகு) கல்வி இப்பிறப்பில் பயன் கொடுக்கும்; பிறருக்குக் கொடுத்தாலும் குறைவு படாது;



கற்றவர்களைப் பிரகாசிக்கச் செய்யும்; தாமுள்ளவரைக் கெடுவதில்லை ஆகையால் எவ்வுலகத்திலும் கல்வியைப்போல அஞ்ஞானத்தை நீக்கும் மருந்தை நாம் கண்டறியோம்,” என்பதாம். இச்செய்யுள்களின் வாயிலாக் கல்வி புருஷருக்கே உரியதன்று; பெண்களுக்கு முரியதே யென்று அறியலாகும். தவிர, இல்லறம் பெண்களாலேயே நடைபெறுவது. “இல்லாளகத்திருக்க இல்லா தொன்றில்லை” இல்லாள் இல்லாத வீடு இடுகாடு (சுடுகாடு)”, வீடு வாசல்களைச் சுத்தமாக வைத்திருந்தாலும், வருவாயிக்குத் தக்கபடி செலவு செய்து கணக்குகளைச் சரியாக வைத்தலும், கணவன், மாமன், மாமி, உற்றார், விருந்தினர் முதலியோரிடத்து அவர்களுக்கேற்றவாறு நடந்து கொள்ளுதலும், பிள்ளைகளை நல்லவிதமாக வளர்த்தலுமாகிய பல வகைப்பட்ட வீட்டுக் காரியங்களை விமரிசையாய் நடத்துவதில் புருடரை விடப் பெரும்பொறுப்பு வாய்ந்த பெண்கள் கல்வியில்லாதவர்களாயின், தங்கள் கடைமையை யுணர்ந்து, சீராகக் குடித்தனம் செய்ய எவ்வாறு முடியும்?

IV. பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும்?

பெண்கள் எத்தகைய கல்விக்கேற்றவர்களென்னும் விஷயத்தில் பலர் பலவாறான அபிப்பிராய முடையவர்களாயிருக்கின்றனர்.

(a) சாதாரணமாய் எழுதவும் படிக்கவும் தெரிந்தால் போதுமென்பார் ஒரு சாரார். தற்போது கற்றவர் வகுப்பிற் கணக்கிடப்பட்ட பெண்களிற் பெரும்பாலோர் அத்தகைய குழந்தைக் கல்வியுடையோரே யாவர். இது கல்வியின்பாற்படுமோ? தோராமற் கற்றது கல்வியேயன்று. இத்தகைய கல்வி என்ன பலனைத் தரும்?

(b) க்ருஹிணி, மனைவி, இல்லாள், முதலிய பெயர்கள் பெண்களுக்கிடப்பட்டுள்ளதை யாராய்ந்து நோக்குமிடத்துப் பெண்கள் வீட்டுக் காரியங்களுக்கே ஏற்றவர்கள் என்று பாவித்து அவர்களது தொழில்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ற கல்வியே கொடுக்கப்படவேண்டும் என்பார் வேறொரு சாரார். கணவனைத் தெய்வமாகப் பாவித்து, அவன் இதத்தையே கோரி, அவன் பிரியம் போல் நடந்து கற்புநிலை தவறாது, மன மொத்து வாழல், வரவுக்குத் தக்கபடி சிக்கனமான செலவு செய்தல், குடும்ப நிர்வாகத்தில் ஏற்படும் கஷ்டநிஷ்டூரங்களைச் சகித்தல், மாமன் மாமியாரைத் தந்தை தாய்போல் கருதி உபசரித்தல், பக்குவமாக உண்டி சமைத்தல், வீட்டைச் சுத்தமாக வைத்தல், பிள்ளைகளைச் சன்மார்க்கத்தில் பயிற்றல் முதலிய அவர்கள் கடமைகளுக் கேற்றபடி இராமாயணம், மகாபாரதம், போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. கணிதநூல், குறள், நாலடியார்போன்ற நீதி நூல்கள், பாகசாஸ்திரம், சுகாதாரநூல், வைத்தியநூல், தையல் முதலியவற்றை அவர்கள் கற்கவேண்டும். இலக்கணம், பூகோளம், நவீன நூல்களில் நன்மை பயக்கும்

நூல்கள், நாவல்கள் முதலியவை படித்தலும் குற்றமாகாவென்று கூறுவாருமுண்டு.

(c) மற்றொரு சாரார் ஆண்களைப்போலவே பெண்களும் ஆங்கிலம் கற்றுப் பட்டங்களை அடைந்து, உத்தியோகங்களில் அமர்ந்து திரவியம் சம்பாதிக்க வேண்டும் என்பர். உயர்தரக் கல்வியைப் பெறாதோர் சற்றுக் குறைவான கல்விகற்று உபாத்தியாயினி வேலையிலமர்ந்து மரியாதையான ஜீவியம் நடத்தும் பொருட்டுப் பொருள் சம்பாதித்துத் தன்னையும், பிறரையும் காப்பாற்றுதல் போற்றத்தகும் என்பர்.

(d) இத்தகைய கல்வியோடு நிற்குமோ, இதையுந் தாண்டி ஜப்பான், சீனா கீழ் நாட்டுப் பெண் கல்விபோலும், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேனாட்டுக்கல்வி போலும் சாதாரணப் பயிற்சி, கல்லூரியின் உயர்தரப் படிப்பு, சர்வகலாசாலையின் சாஸ்திரப் பயிற்சியுடன் ராணுவ பயிற்சி, தொழில்களின் பயிற்சி, சகலவிதமான தேக அப்பியாசப் பயிற்சி, விமான மூர்தல், நீரில் நீந்துதல் முதலிய நாகரிகங்களையும் அடையும்படிசெய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்வோர் இனி வருங்காலத்தில் கிளம்பினுங் கிளம்புவார். காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றவாறு மக்களின் அபிப்பிராயமும் மாறியும், குறை பட்டும், வளர்ந்தும் வரும். ஆகவே எத்தகைய கல்வி நமது தாய்நாடாகிய பரத கண்டத்துப் பெண்மணிகளுக்கு வேண்டுமென்னும் விஷயத்தில், குழந்தைக்கல்வியாகிய எழுதவும், படிக்கவும் தவிர, அதற்கு மேல்வருவதெதுவும் நம் தாய் நாட்டிற்கு லாபமென்றே எண்ணவேண்டும். அதற்காகப் பணஞ் செலவிடுதல் வேண்டும். எவர் மாட்டும் ஊக்கம் பிறத்தல் வேண்டும்.

## V. நம் நாடும் பெண் கல்வியும்

பலவகைக் கலை ஞானங்களும், கல்வியும், நாகரிகமும், மேன்மையும் பெற்று முதன்மை யடைந்திலங்கின நமது பரத நாட்டின் தற்கால நிலையை உற்று நோக்கின், பெண்களல்லாமல் நமது ஆண்களும் கூடக் கல்வியில் மிகக்குறைவுடையோராயிருத்தல் மிகவும் வருந்தத்தக்கது. நமது பெருமை பண்டைக் காலத்துப் பெருமையைப்பற்றிய பெருமையே யல்லாமல் தற்காலப் பெருமையாய் நமக்கிருப்பது ஒன்றுமில்லை என்றே சொல்லவேண்டும். நமது நாட்டில் நூற்றுக் கொன்பது பேர் ஆண்களில் படித்தறிந்தவர் என்றும், நூற்றுக்கொன்று பெண்களில் படித்தறிந்தவர் என்றும் கணக்கிடப்பட்டதென்றால் ஆண் கல்வியே மிகக் குறைவாயிருக்கும்போது அதிலும் பெண் கல்வி ஒன்பது மடங்கு அதிகக் குறைவாயிருப்பது அதிசயமொன்றுமில்லை? சிறு கண்டம் என்றழைக்கப்படும் இப்பரதகண்டமாகிய இந்தியாவின்கண் சுமார் 36 கோடி ஜனங்கள் குடியிருந்து வருகின்றார்கள். இத்தனை ஏராள



ான ஜனத் தொகையுள்ள நாட்டில் கல்வி தாழ்வடைந்தும் பெண் கல்வி )ன்னும் பதின் மடங்கு தாழ்வடைந்து மிருந்தால், இந்த நாடு என்று ுறப்புறுமோ? அறிவுடையோரே இதனை ஆராய்தற் குரியர்.

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு நன்மைகளும் கல்வியி றாலேயே அடையப்பெறுவனவாயின் நமதுநாட்டில் ஆண் கல்வியும்,பெண் ல்வியும் எத்தனையோ மடங்கு குறைந்துள்ளதால், நமது நாட்டிற்கு எவ் ுகையில் சிறப்பு வாய்க்கும் என்று நாம் கருதிப்பார்த்தல் வேண்டும்.

நம்தேசத்தில் ஒற்றுமையை விரும்புகிறோம். மதபேதம், ஜாதி பேதம், குலபேதம் முதலிய தடைகளை எவ்விதத்திலும் அமிழ்த்தித் தேச விருத்தியை எதிர் நோக்கிச் சீர்திருத்தங்களை நாடி, உதவிபுரியும் எவ்வகைப் பட்ட உத்தியோகஸ்தர், சமூதாயப் பிரமுகர்கள் ஆகியவர்களின் உதவி யைக்கொண்டு சட்டங்களை ஏற்படுத்தி நாட்டின் மேன்மையைத்தேடி வரு கிறோம். வாழ்க்கைக்குத் தடையான பண்டைக்காலத்து வழக்கப் பழக் கங்களையும் கூடத் தகர்த்து எறிந்துவிட முன் நிற்கிறோம். பெண்களின் மகாநாடுகள் ஆங்காங்குக் கூட்டப்பட்டுப் பெண்களின் அபிவிருத்திக்கான வைகளைத் தீர்மானங்களால் நிறைவேற்றப்பட்டு வருகிறதை நாம் அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாக அறிந்து வருகின்றோம். அடிப்படையாக நமக் கிருக்க வேண்டிய கல்விச்செல்வம் வளமடைந்து செழித்தோங்கிச் சிறப் புப்பெற்று இலங்கும் வரை, ஏனைய நன்மைகளை எதிர் நோக்குவதும் நிலை நிறுத்துவதும் முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டது போலா கும். ஆகவே நம் நாட்டின் நிலைமையை அறிந்த நாம் மற்றவருக்கும் இதை எடுத்துக்காட்டி அவர்கள் உள்ளத்திலே கல்வியில் ஆசை ஊறி வளரத் தக்கவிதமாய் அறிவுறச்செய்யக் கூடுமானால் இதைக்காட்டிலும் நம் நாட்டிற்கு நாம் தொண்டாற்றும் பணி வேறொன்று மில்லை.

## VI. நம் நாடும் பிற நாடும் எதிர் காலமும் :—

நம்முடைய நாடு பல துறைகளிலும் மேனாடுகளோடு இணைக்கப் பட்டு வருகிறது. மேனாட்டோர் இங்குவந்து தங்குவதும், நமது நாட் டின் சிற்றரசர்கள், உத்தியோகஸ்தர்கள், மந்திரிகள், பிரபல பிரமுகர்கள் அடிக்கடி மேனாடுகளுக்குப் போய்த்தங்குவதும், கல்வி, தொழில் பயிற்சிக் காக இந்திய மாணாக்கர்களில் ஆண்கள் பெண்கள் கல்வி கற்று வருவதும், இத்தாலி, ஜர்மனி, பிராஞ்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளோடு வியாபாரமுறையிலும் சிநேக பாவத்திலும், விசேஷித்த மகாநாடுகளின் இயக்கங்களிலும் பலமாய் இணைக்கப்பட்டு வருவதும் நமக்குத்தெரிந்தவையே. விளையாட்டு விஷயமாயும் கூட, கிரிக்கட், ஹாக்கி, முதலிய பந்தய விளையாட்டுக்களின் மூலமாயும் சம்பந்தப்பட்டு வருகிறது. இவ்விதமாய் இணைக்கப்பட்டுவரும் தேசமாக நமது நாடு பிற நாடுகளின் மேம்பாடு எவ்வெவைகளிலுண்டோ அவ்வவைகளில் நம்

நாடும் மேம்பாடுபெறும் வழிகளில் ஈடுபடாமலிருக்க முடியாது. மேல் நாடுகளில் பெண்கல்வியின் மேம்பாட்டையும், பெண்களின் சிலாக்கியம், சுதந்திரம், முதலியவைகளையும் நம் நாட்டுக்கும் கிடைக்கும்படி அபரிமிதமாய் ஆசைப்படும் எதிர்காலம் ஒன்று நமக்குண்டு என்பதை யாவரும் மறுக்கமுடியாது. ராணுவத்திலும் ஆகாய விமானங்களிலும், கடல்மேற் செல்லுதலும், பலதரப்பட்ட தொழிற்சாலைகளிலும், வைத்திய ஸ்தாபனங்களிலும் அரசியலுக்குச் சம்பந்தப்பட்ட பலவகை உத்தியோகத் துறைகளிலும், கல்லூரி காலாசாலைகளிலும், மும்முரமான வீரத் தன்மைக்கும் ஆண்மைக்கும் உரிய பந்தயப் விளையாட்டுக்களாகிய கிரிக்கட், ஹாக்கி முதலிய சர்வதேச பந்தயப் போட்டிகளிலும் பங்கெடுத்துத் திடகாத்திரமும் நுண்ணறிவும் அபாரமாய் விருத்தியடைந்த மனமும், புத்தியும், ஆத்ம சுத்தத்திற்கனுகூலமான செல்வாக்குகளும் நிறைந்து, முழுபலமுள்ள பெண்களைப்போல விருத்தியடையும் படியான காலம் வெகு சமீபத்தி லிருக்கிறது. மேலும் நமது நாட்டில் அரசியல் சம்பந்தமான அதிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஏற்று, நாட்டின் சுதந்தர காலத்தை எதிர் நோக்கி நிற்கிறோம். அக்காலம் வரும்போது இந்திய ஜாதி சகல விதத்திலும் பொறுப்பேற்றுக் கொள்ளும்படியான நிலைமையிலிருக்க வேண்டுமன்றோ. பெண்கள் உயர்வடைந்து ஊக்கம் அளிக்கும்போது ஆண்கள் பலம் கொள்வார்கள். Madras Mail இல் (29-9-'36) இல் வெளி வந்த பத்திரிகையில் Mis Lotef என்ற மகமதிய மாது "Women are The Guardian of the race" என்ற தலைப்பின் கீழ் ஒரு சொற்பொழிவு நடத்தி இருக்கிறார்கள். "ஜாதி ஜனத்தின்பாதுகாப்பாளர் பெண்கள்" என்பது உண்மை என்றால், இந்திய ஜனத்தின் சீரிய குணங்களின் பாதுகாப்பாளராகிய பெண்களின் சரீர, ஆத்ம, மானஸ, தத்துவங்கள் விருத்தியடைந்து ஒருங்கே இரண்டு வளர்ந்து அபிவிருத்தி யடைந்த பெண்களாயிருக்க வேண்டுமென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனத் தெரிகின்றதன்றோ? அப்படியானால்,

## VII. நமது கடமை என்ன?

என்பதைச் சுருக்கமாய் எடுத்துக் கூறி முடிக்கிறேன். சகோதரிகள் கல்வி அறிவு பெறாமல், கைத்தொழில் பயிலாமல் வயதை அடைந்து, வாழ்க்கைத் துணையாய் ஒருவருக்கு அமரும் வாழ்வு இரங்கற்குரியதே என்னும் உணர்ச்சியை எவர் மாட்டும் பிறத்தல் வேண்டும். நாயகன் உத்தியோகத்தினின்று விலக்கப்படினும், நோய் வாய்ப்படினும், அல்லது மரணமடையினும் நாயகி எவர் உதவியையும் நாடாது எவர் மாட்டும் அணுகாது, தன் கல்வி அறிவால் கைத்தொழிலால் தன்னையும், குழந்தைகளையும் காப்பாற்றத்தக்கவளாதல் வேண்டும். அவள் அண்ணன் வீட்டை அடைவதும் அண்ணி கையை எதிர்பார்ப்பதும் மைத்துனன் வீட்டை நண்ணுவதும் மற்றவர் வாயிலேறுவதும் இழிவு! இழிவு! என்ற



புத்துணர்ச்சி உள்ளத்தில் ததும்பல் வேண்டும். மக்கள் தம் வாழ்நாளில் குடும்பத்தையும், தேசத்தையும் நடத்தும் அறிவாற்றல் பெறுமாறு தாய் தந்தையர்கள் அவர்களைப் பயிற்சி செய்வித்தல் வேண்டும். பெண் மக்கள் வீட்டில் அடைக்கப்பட்டிருக்கும்படியான துர்ப்பழக்கங்களும், மூட எண்ணங்களையும் முற்றிலும் விட்டுவிட வேண்டும். ஆடவர்களைப் போலவே அரிவையர்களும் மேம்பாடு அடையும்வரைக் குடும்பச்சீரும், தேசச் சீரும் பின்நோக்கி நிற்கும் என்று பலமாய் உணர்தல் வேண்டும். பெண்கள் தொழில் புரிவது இழுக்குமன்று, இழிவுமன்று என்றும், பெண்கள் கைத் தொழில்களைக் கற்றுப் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்துவது உசிதம் என்றும், பெண்கள் கற்றால் அகங்காரம் ஏற்படும், தீயபழக்கங்கள் ஏற்படுமென்று நினைத்தல் அனுசிதம் என்றும், அது அப்படி நேர்ந்தால், நேருங்காலத்து அதைக்கற்றவர் குறையே யன்றிக் கல்வியின் குறையன்று என்றும் எண்ணிப் பெண் கல்விக்கென்று சர்க்கார் தரப்பில் அநேக வசதிகளும், பாடசாலைகளும் ஏற்படுத்தி வைக்கும்படியும், கூடுமானால் நமது நாட்டில் பெண்களுக்குக் "கட்டாயக் கல்வி"க்கான சட்டத்தைப் பிறப்பிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்ய முயலவேண்டும்.

ஜனசமுதாயங்கள் தத்தம் சமுதாயங்களின் பெண்களுக்குக் கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்த, தூண்டுதல் செய்யப்பட வேண்டும். தனவான்களாகிய பிரபலஸ்தர்களின் நன்கொடைகளை விசேஷமாய் பெண் கல்வியின் விஷயமாய்த் திருப்பிவிட வேண்டும். இவ்விதமான, நற்காலத்தின் நறுமணம் பரதகண்டத்தின் நான்குதிசைகளிலும் வீசக் கடலைகள் மேலும் விமான மூலமாயும், நமக்குப் பல வகைகளிலும் ஊக்கத்தை எழுப்பிவிடும் சுற்றிய நாடுகளுக்குச் சென்று நமது பண்டைச்சீரும் சிறப்பும் காட்டி அந்நாட்டவர்களையும் பொறாமைப்படுமாறு செய்யவல்ல நலத்தை எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக.

# கும்பலிலே "கோவிந்தா !"

T. V. வேங்கட்ராமன் B.A.L.T.
கல்வி இலாகா டேபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம்.

பாகவதர் "கோவிந்தா"! எனக் கூப்பிட, கோஷ்டி, கோவிந்தா! கோவிந்தா! என்று தொடர்ந்து கோஷிப்பதை நாம் கண்டும், கேட்டுமிருக்கிறோம். கூட்டத்தில், அப்பெயரை யார் சரியாய் உச்சரித்தார்கள் என்றும், யார் அப்படிச் செய்யவில்லையென்றும் பாகவதருக்குத் தெரியுமா? உள்ளம் பக்திப்பெருக்கால் கலங்கி, உடல் பரவசப்பட்டு, அத்திருநாமத்தை யார் கூறுகிறார்கள் என்றும், தமாஷுக்கு யார் சத்தம் இடுகிறார்கள் என்றும் அவர் தெரிந்துகொள்ள முடியுமா? அவர் கண்டதெல்லாம், பலத்த கோவிந்தா கோஷமே யல்லவா?

நம்முடைய ஆரம்பப் பாடசாலைகளும், அவைகளில் நாம் கையாளும், போதனா முறைகளும், அநேக விஷயங்களில் மேலே சொன்ன சம்பவத்தை ஞாபக மூட்டுகின்றன. நம்முடைய கிராமங்களிருக்குமிடம் கண்களுக்குப் புலனாகுமுன், மூக்கிற்குப் புலப்படுவது போல், நம்முடைய பாடசாலைகள் இருக்குமிடத்தை நம்முடைய காதுகள் முதலில் அறிகின்றன. வாய்ப்பாடு அல்லது எழுத்து 'முறை' சொல்லும் சமயத்திலே நாம் அவைகளை நோக்கிச் சொல்ல நேரின், இன்னும் வெகுதூரத்திலேயே நம்முடைய செவிப்புலனுக்கு அவை வெளியாகும். ஒருவன் 'கே ஏறு' என, அதைத் தொடர்ந்து கே என்ற பெரிய சத்தம் ஒன்று கிளம்பவும், அல்லது 'நா மூணு பன்னெண்டு' என ஒரு குரல் கூவ அதைத் தொடர்ந்து ஒரு பெருங் கூச்சல் கிளம்பவும் கேட்டிருக்கிறோம். உபாத்தியாயர் பிள்ளைகளை நோக்கி ஒருகேள்வி கேட்க, உடனே எல்லாப் பிள்ளைகளும் அதற்கு விடையாக ஏதோ சத்த மிடுகிறார்கள். உபாத்தியாயர் திருப்தி யடைந்து, மற்றொரு கேள்வி கேட்கிறார். இம் முறையின் நோக்கத்தையோ ஆதாரத்தையோ நாம் ஆராய்வதுண்டா?

குழந்தைகளின் குரலைப் பழக்கி விருத்தி செய்யவும், ஒருமிக்கப் பாடப் பழக்கவும், நம்முடைய நோக்கமாயின் இம்முறை ஏற்றதாகும். முக்கிய பாடங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கவும், அவர்கள் கற்கவும், வேண்டுமானால், இது முறையாகாது. தாகமில்லாதவன் நீர் அருந்தான்; பழுக்காத காயைத் தடியாலடித்தாலும் அது கனியாதென்று நாம் உணர்ந்திருந்தும், நாம் கையாளும் போதனா முறைகளில் அவ்வறிவைப் பயன்படுத்திய பாடில்லை. தாகத்தை உண்டாக்கவோ, கனியும்படியான சாதகங்கள் செய்வதையோ விடுத்துப் பலாத்காரத்தைக் கைக்கொண்டோம். ஏன்? அது மிக சுலபமானது அல்லவா?

ஆதியில் பாடசாலைகளும் ஆசிரியர்களும் இம்மாதிரியாய் இல்லை என்று, சொல்லக் கேட்டும், படித்துமிருக்கிறோம். கல்வி கற்பவர்கள் சிறு பான்மையோர். பிரதி மாணவனும் தனியாக ஒரு வகுப்புப் போல



இருந்து, அநேகமாய்ச் சம்பாஷணை மூலமாய்க் கல்விகற்று வந்தான். மாணவர்கள் தொகை அதிகரிக்க இத்தனி முறையினின்றும் சிறிது சிறிதாய் விலகிச் சுமாராய்த் திறமையுள்ளவர்கள் என்ற 'வகுப்பு' அல்லது 'கூட்டத்திற்கு, ஆதியில் ஒருவனுடைய தேர்ச்சிக்கு ஏற்றபடி பாடம் போதித்ததுபோல், நடத்தலானார்கள். போதித்த விஷயங்களை அறிந்தவர்களா என்று சோதிக்க, அப்போதைக்கப்போது வகுப்பை நோக்கிக் கேட்கும் கேள்விகளாலும் பிறராவது ஒருவனோ அல்லது வகுப்போ கூறிய விடையைக் கொண்டு திருப்தியடைந்து வரலானார்கள். மாணாக்கர்கள் திறமை வித்தியாசம் அதிகரிக்க அதிகரிக்க, இம்முறை முற்றிலும் பொருந்தாமல் விசேஷமான 'நஷ்டமும் தேக்கமும்,' பரீக்ஷைகளில் தேறாதவர்களும், அதிகரிக்கின்றன. பெற்றோர்களும் ஜனத்தலைவர்களும், கல்விமுறையைக் கண்டிக்கின்றனர். திருப்திகரமான திட்டமாயினும், போதனாமுறை பொருத்தமற்றதாயின், இப்படித்தான் கேவலமாயிருக்கும் என்று கருதுகிறவர்கள் போதனாமுறையைச் சீர்திருத்தக் கவனம் செலுத்தி வருகிறார்கள். இம்முயற்சியின் பயனாகப் பலவிதமான முறைகள், மேல் நாடுகளில் வெளியாகி இருப்பதைப்பற்றி, நாம் படிக்கிறோம். ஆதி முறையாகிய 'தனிமுறை'யின் தத்துவங்களையே எல்லா ஆராய்ச்சிகளும் வற்புறுத்துகின்றன. மாணாக்கனின், Interests, Initiative, Individuality, (ஊக்கம், முயற்சி, தனிமை) ஆகிய இவைகளைக்கொண்டு போதனா முறையை அமைத்தால்தான் பயன்படுமென்று முடிவு கொண்டுளர் 'தனி முறையில் (Individual Method) ஆசிரியர் ஆதியில்,

(i) ஒவ்வொருவனாகப் பாடம் போதித்தார்.

(ii) அவன் சரியாய்க் கற்கிறானா என்று தான் கேட்டுத் திருத்த வசதி ஏற்படுத்தி இருந்தார்.

(iii) ஒருவன் தப்பாய்ச் சொல்லுவதை மற்றொருவன் கேட்காமலிருக்க ஏற்பாடு செய்திருந்தார்.

(iv) மந்தமாய்க் கற்பவனுக்குப் போதுமான அவகாசமும், தீக்ஷணமாய்க் கற்பவனுக்கு அதிகம் கற்க வசதியும் கொடுத்தார்.

(v) நீர் அருந்த விருப்பமில்லாதவனுக்குத் தாகத்தை உண்டாக்கினார்களே தவிர, வற்புறுத்தவில்லை.

அவர் ஒருவனைப்பற்றி இவ்வளவு கவலையும் பிரயாசமும் எடுத்துக் கொண்டதால், அதைப்போல் பலர் அடங்கிய வகுப்பு அல்லது கூட்டத்தைப்பற்றிக் கவலை அவருக்கில்லை. நாமும் அவரைப் பின்பற்ற முடியாதா?

# கடவுள் வணக்கம்

[By. C. G. Ramachandra Rao, *Brahmin Extension Higher Elementary School Coimbatore*]

**" கல்லார்க்கும் கற்றவர்க்கும் " என்ற மெட்டு**

ஆதியுமாய் அந்தமுமாய் எங்கும் நிறை பொருளே !
ஜோதிவடிவாய் உலகம் எங்கும் நின்று காக்கும் பொருளே !
எல்லார்க்கும் நன்மைசெய்யும் ஏக பரம் பொருளே !
நீரினுள்ளே பாசியைப்போல் எங்கும் நிறைந்த பொருளே !
கீர்த்தி தரும் கல்வி ஆயுள் பெருகும் செல்வம் உயர !
போற்றுகின்றோம் சிறுவர் அன்பாய் சீரும் வாழ்வும் அருளே !

அபிநயப்பாட்டு

## "வீண் முகஸ்துதிக்குச் செவிகொடாதே"

[ஒரு காக்கை ஒரு பக்ஷணக் கடையிலிருந்து கடைக்காரனுக்குத் தெரியாமல் ஒரு வடையைக் கவ்விக்கொண்டு சென்றது]

1. காகமதொன்று கர்வமதாகக் கனத்த வடை யொன்றை
கௌவிக்கொண்டோர்—காட்டுமரத்தில் களிப்பாய் உட்கார்ந்தது
2. பசியால் அலைந்து பக்கமெல்லாம்திரிந்த பக்கா நரியொன்று
வடையைப் பார்த்தவுடன்—அபகரிக்க—அன்பாய்ப் பேசியது.
3. காகமே உந்தன் அழகைக் காண கண்கள் கூசுதையோ !
உன் தங்க வாயால்—பாட்டுப்பாடிக் களிக்கச் செய்யாயோ.
4. அதைக் கேட்ட காகம் கர்வமடைந்து வாயைத் திறந்திடவே
விழுந்த வடையைக்—கௌவிக்கொண்டு நரி போய் விட்டது.
5. ஆகையினாலே இக்கதையாலே வஞ்சக வார்த்தைகளை
நம்பி மோசம்—போகொணாது என்பதை அறிகிறோம்.

# சாரணீயமும் கல்வியும்

### முன்னுரை

"நாம் நமது குழந்தைகளுக்காக உயிர் வாழ்வோம்" என்பது உபாத்தியாயர்களாகிய நமது பிரதிக்ஞையாகும். இதிலிருந்து குழந்தைகளின் கல்விக்கான எல்லா முறைகளையும் நாம் ஆராய்ந்து அவற்றைக் கையாள்வதற்குச் சம்மதப் படுகிறோம் என்பது புலனாகிறது. சாரணீயத்துக்கும் கல்விக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாம்.

### கல்வியைக் குறித்த சில வார்த்தைகள்.

நூற்றுக்கு எண்பது கல்வி கற்காதவரைக் காட்டிலும் இருபது கல்வி கற்றவர்களே ஒரு நாட்டுக்குக் நன்மை பயக்கக் கூடும். கல்வி கற்றவர்களான சிங்கங்கள்தான் ஒரு நாட்டின் ஆஸ்தியே யொழிய கல்விகற்காத கஜங்களல்ல. கல்வி இன்றியமையாதது.

### கல்வியின் நோக்கம்.

மனமானது குரங்கினது செயல்களைப்போலத் யதேச்சையான செயல்களையுடையது. அவ்விதச் செயல்கள் பயனளிக்கா. ஆனால் அவை ஒழுங்குபட்டு உபயோகமுள்ளவையானால் அவைகளால் பிரயோஜனமுண்டு. அப்பிரயோஜன முண்டாக மனத்தையும் தேகத்தையும் பயிற்றுவிக்க வேண்டும். தேகமாகிய சுவரில்தான் மனதாகிய சித்திரத்தைச் செம்மையாய் எழுத முடியும். ஆகவே நாம் பாடுபட்டுக் கற்பிக்கும் கல்வியின் நோக்கம், ஆரோக்கியமும், புத்திசாலித்தனமும் கண்ணியமும் உபயோகமும் வாய்ந்த யுவர்களாக்குவதுதான்.

### தற்காலக் கல்வி.

தற்காலம் என்ன காரணத்தாலோ (அதை ஆராயுந் தருண மிதுவல்ல) மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால்—உலகத்தின் தவப்பயனோ யாதோ தெரியாது—அதை ஈடேற்ற 1908-ம் வருடம் ஒரு சங்கம் தோன்றிற்று. அதுதான் சாரணச்சங்கம். அதை ஆரம்பித்தவர் ஸர் ராபர்ட் பேடன் பொவெல் பிரபு. இவர் அநேக யாண்டுகள் பிரிட்டிஷ் சேனையின் ஓர் உத்தியோகஸ்தராய் விளங்கினர். அச்சமயத்தில் தம் கீழுள்ள அநேக யுவர்களை இவர் பயிற்றுவிக்க நேர்ந்தது. அப்படிச் செய்கையில் அக்காலத்திய கல்வி முறையில் மேற்கண்ட குறையை (அதாவது கல்வியின் உண்மையான நோக்கம் ஈடேறாமலிருப்

பது,) கண்டார். பின்பு தாம் தமது உத்தியோகத்திலிருந்து விலகிய
பிறகு மேற்குறித்த குறையைப் பூர்த்திசெய்யவேண்டிச் சாரணச் சங்கத்
தைத் துவக்கினார். ஆகையால் இதிலிருந்து கல்வியின் நோக்கமும் சாரணீ
யத்தின் நோக்கமும் ஒன்றாயிருக்கவேண்டும் என விளங்குகின்றதல்லவா?

**சாரணீயத்தின் அடிப்படை.**

கிண்டர் கார்ட்டென், மாண்டிஸ்ஸொரி, ப்ளேவே, கேரி ஸிஸ்
டெம், ப்ரோஜெக்ட் மெதெட் என கல்விமுறைகள் பல. இவை எல்லாம்
குழந்தையின் மனோபாவத்திற் கேற்ப அமைக்கப் பெற்றிருக்கின்றன.
இதை விளக்குவோம். குழந்தைகட்கு வஸ்துக்களை ஸ்பரிசிப்பதிலும்,
உருசி பார்ப்பதிலும், அவ்வஸ்துக்களால் ஏதாவதொரு பொருளை உண்
டாக்கவும், உண்டாக்கிய அப்பொருளை அழிக்கவும், விளையாடவும்
யதேச்சையாய் இருக்கவும், கூச்சலிடவும் தம்போன்ற பிள்ளைகளுடன்.
சேர்ந்திருக்கவும், திறந்த வெளியில் வசிக்கவும் அதிக விருப்பம் உண்டு,
எல்லாக் கல்வி முறைகளும் இவ்விஷயங்களை யொட்டியே அமைக்கப்
பட்டுள்ளன. சாரணீயமும் மேலே சொல்லப்பட்ட விருப்பங்களை
எல்லாம் பூர்த்திசெய்து கொள்ள அநுமதிப்பதால் அதுவும் ஓர் கல்வி
முறையே.

**முடிவுரை நமது கடன்**

ஆகையால் இதிலிருந்து கல்விக்கும் சாரணீயத்திற்கும் நெருங்கிய
சம்பந்த முண்டென்று தெரிகிறது. எனவே இம்முறையையும் கையாள்
வது நமது கடன். எப்படிக் கல்வி பயிற்றுவிக்கப் போதனாமுறைப் பயிற்சி
அவசியமோ அப்படியே சாரணப் பயிற்சியும் நமக்குத் தேவையாகும்.
ஆதலால் அத்தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு நமது பிரதிக்
ஞையை நிறைவேற்ற ஈசனருள் கிட்டுவதாக.

K. R. சுந்தர ராஜன்.

# *எனது கொள்கை

**இரண்டு கோள்கைகள்**

நமது ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் கல்வி மோசமாயிருப்பதற்கு இரண்டுவிதக் கொள்கைகள் இருப்பதாகக் காணப் படுகின்றது. இக்கொள்கைகள், ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்பதை யாவரும் கவனிப்பதில்லை.

ஒன்று அநேகமாக ஆரம்பப் பாடசாலைகள் 30 அல்லது 35 பிள்ளைகள் கொண்டவை. சின்னஞ் சிறு பள்ளிக் கூடங்கள் ஓர் உபாத்தியாயர் பள்ளிகள். ஆனால் இந்த 30 அல்லது 35 பிள்ளைகள் நாலைந்து வகுப்புகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இவ்விதமாகப் பல வகுப்புகளுக்குப் போதிக்க வேண்டி ஒரு உபாத்தியாயர் இருக்கும் நிலைமை தான் ஆரம்பக் கல்வியின் மேம்பாட்டுக்குப் பெரிய தடையாகிறது.

இந்தக் காரணத்தினின்று எழும் முடிவுதான் மற்றொன்று பல வகுப்பு ஒரு உபாத்தியாயர் பள்ளிக்கூடங்கள்தான் கல்வி அபிவிருத்திக்குத் தடையானால், ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு உபாத்தியாயர் உள்ள பள்ளிக் கூடங்களில், கல்வி திறம்பட்டு விளங்கவேண்டு மல்லவா? அப்படித்தான். ‘வகுப்புக்கோரு உபாத்தியாயர் கோண்ட பள்ளிக்கூடங்களில் கல்வி நன்றாகப் போதிக்கப்படுகின்றது என்பதுதான் இரண்டாவது கொள்கை.

**உண்மை தான் என்ன?**

உண்மையில் இக்கொள்கைகள் சரியானவைகளல்ல. ஒரு உபாத்தியாயர் பல வகுப்புப் பள்ளிகளும், ஒரு உபாத்தியாயர் ஒரு வகுப்புப் பள்ளிகளும் கல்வி அபிவிருத்தி செய்யும் திறமையில் ஒரே விதமாகத்தான் இருக்கின்றன. இரண்டுவிதப் பள்ளிக்கூடங்களிலும் சரியாக கல்வி அபிவிருத்தி ஏற்படுவதில்லை. இதுதான் என் கொள்கை. இவ்வித கொள்கையை யுடையவர் வெகு சிலரே. ஒருகால் இக்கொள்கையை யுடையவன் நான் ஒருவன்தானோ என்றும் எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் நான் தகுந்த காரணங்களும் புள்ளி விவரங்களும் கொடுத்து என் கொள்கையை உண்மை யிருக்கின்றதென்பதை ருஜுப் படுத்தத் தயார்.

---

* ஸ்ரீமான் R. N. Savur அவர்களால் ஆங்கிலத்தில் South Indian Teacher-ல் எழுதிய கட்டுரை. வி. பி. பூவராகமூர்த்திராவ், அவர்களால் மொழி பெயர்க்கப் பட்டது.

### ஒரு உபாத்தியாயர் பல வகுப்புப் பள்ளிக் கூடமும் நல்ல வேலை செய்யலாம்.

ஒரு உபாத்தியாயரே பல வகுப்புப் பிள்ளைகளைப் பராமரித்து வரும் பள்ளிக்கூடம் 'சுத்த மோசமானது' என்பாருக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன். கொடைக்கானல் நகரில், கொடைக்கானல் கிளப்பின் அருகில் அழகியதோர் தோட்டத்தில் காணப்படும் சிறு பள்ளிகூடத்தைப்போய்ப் பாருங்கள். அது ஒரு ஹூதரன் ஸ்கூல் திரு பாக்வன் என்பார் உபாத்தியாயர். தலைமை உபாத்தியாயர், மானேஜர், எல்லாம் அவரே. மூன்று வருஷங்களுக்குமுன் நான் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்க்கச்சென்ற போது அதில் சுமார் முப்பத்தைந்து பிள்ளைகள் இருந்தனர். முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரைப் பல வகுப்புகள் இருந்தன அது ஒரு உபாத்தியாயர் பல வகுப்புப் பள்ளிக்கூடம்தான் என்பதில் சந்தேகமில்லை. மேலும் எட்டுவகுப்புகள் கொண்ட உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம். ஒரே உபாத்தியாயர் இந்த எட்டு வகுப்புகளுக்கும் போதித்து வந்த திறமையைப்பற்றி ஆராய்ந்தபோது திரு பாக்மன் கொடுத்த ஸர்டிபிகேட்டைக்கொண்டு பையன்கள் அமெரிக்கா ஐக்கிய மகாணத்தில் எந்தப் பள்ளிக்கூடத்திலேனும் மேல்வகுப்பில் நேராகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிந்துகொண்டேன். திரு பாக்மன் நடத்திவருகிற ஒரு - உபாத்தியாயர் - பல - வகுப்புப் - பள்ளிக்கூடம் ஒன்றே முதல் கொள்கையென்று சொல்லப்பட்ட கொள்கையைத் தவறு என்று நிரூபிக்கின்றது. திருபாக்மன் பள்ளிக்கூடத்தில் ஏற்படுகின்ற கல்வித் திறமை எந்தப் பள்ளிக்கூடத்திலுங் உண்டாகலாம். ஆனால் எல்லாம் உபாத்தியாயரைப் பொறுத்திருக்கிறது. போதனை முறையைப் பொறுத்திருக்கின்றது.

### சிறுபள்ளிக்கூடங்களில் மோசமாயிருப்பதற்கு ஒருகால் உபாத்தியாயர்களும் காரணமாயிருக்கலாம்?

நமது மாகாணத்தில் ஒரு உபாத்தியாயரைக்கொண்ட சிறு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதிகம். ஒரே உபாத்தியாயர் இருப்பதினால் மேல் கேட்பார் கிடையாது. வேலை நடக்கிறதா? காலாகாலத்தில் உபாத்தியாயர் பள்ளிக்கு வருகிறாரா? பள்ளிக்கு வந்த போதிலும் பாடம் சரிவர நடத்துகிறாரா? இந்த விஷயங்களைக் கவனிக்க யாரும் கிடையாது. சரிவரப் பள்ளிக்கூடம் வந்து பாடம் நடத்தினபோதிலும், சரியான போதனை முறையைக் கையாண்டால்தான் கல்வி மேம்பாடையுமல்லவா? உபாத்தியாயர்களுக்கு அநேகமாகப் பழையமுறை தெரியுமேயல்லாது தனிமுறையைப்பற்றி யொன்றுந் தெரியாது. தன்கூட வேறிரண்டு மூன்று உபாத்தியாயர் இருந்தால் ஒருகால் அவர்களுடைய மதிப்பைப்பெற வெண்ணியாவது சரிவர ஒவ்வொருவரும் வேலை செய்வார். சிறு பள்ளிக்கூடங்களின் நிலைமை அப்படியில்லாததனால், தனி உபாத்தியாயர் தனிக்காட்டு ராஜாவாக விளங்கலாம். திரு பாக்மன் மாதிரி சலிப்



பின்றிச் சிரமப்பட்டு சிறந்த முறையில் கல்வி போதித்து வந்தால் ஏன் கல்வி திறம்பட்டு வளராது?

### ஒருவகுப்பு - ஒரு உபாத்தியாயர் பள்ளிகள் நன்றாக வேலை செய்கின்றனவா?

சிறு பள்ளிக்கூடங்களின் நிலைமை இப்படியிருக்க, பெரிய ஆரம்பப் பள்ளிக் கூடங்களின் நிலைமையென்னவென்று பார்ப்போம். பெரிய பள்ளிகளில் வகுப்புக்கொரு உபாத்தியாயர் • இருக்கின்றார். தற்காலம் நிலவிவரும் கொள்கையின்படி இப்பள்ளிக்கூடங்கள் நன்றாக வேலை செய்ய வேண்டுமே. அங்கே போதிக்கப்படும் கல்வி உயர்தரமாகவும், உண்மையில் கல்வி யறிவு வளர்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமே. இவ்விஷயத்தைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்,

### வாசிக்கும் திறமையைப்பற்றி ஆராய்வோம்.

ஆரம்பப் பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கும் பல வருஷங்களில் ஒன்று வாசித்தல். வாசிக்கும் திறமையை எடுத்துக் கொள்ளுவோம். அதுதான் உண்மையான கல்வி யபிவிருத்திக்கு அடிப்படை. ஒரு பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு வாசிக்கும் திறமை உண்டாய்விட்டால் கல்வி யறிவும் உண்டாய்விடும்.

### வாசிக்குந்திறமை என்றால் என்ன?

இந்த வாசிக்குந்திறமை என்ன என்பதைப் பற்றி முதலில் ஆராய்வோம்; இங்கிலாந்து தேசத்தில் கல்வி இலாகாவில் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் வாசிக்கும் திறமை யென்றால்

(1) பிள்ளைகள் தாம் வாசிக்கும் விஷயத்தின் பொருள் இன்னதென நன்றாய் அறிந்துக்கொள்ளும் சக்திபெற்று

(2) வாய்விட்டு உறக்க வாசிக்காமல் மனதால் வாசித்து விஷயங்களைக் கிரஹிக்கும் ஆற்றல் முடிவில் அடைவது தான் என்று கூறப்பட்டது.

மேலும் ஆரம்பப் பாடசாலைகளில் உபயோகப்படுத்தக்கூடிய புத்தகங்களைப்பற்றி வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை யொன்றில் கல்வி இலாகா வலியுறுத்துகின்ற முக்கிய விஷயமானது.

புத்தகங்களைப் படிக்கவேண்டுமெனும் ஆசையைக் குழந்தைகளுக்கு உண்டாக்குவதும், அவர்களுக்குப் புத்தகங்களை எவ்விதம் உபயோகிக்க வேண்டுமென சொல்லிக்கொடுப்பதும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் விசேஷ கடமைகளாகும். ஒரு பையனுக்கோ பெண்ணுக்கோ பின்வரும் ஆற்றல்கள் உண்டாகாவிட்டால் வாசிக்குந் திறமை ஏற்படவில்லையென்றே கொள்ளவேண்டும். வாசிக்கும் திறமையைக் குறிக்கும் ஆற்றல்களாவன:

(i) சரியாகத் தட்டுத் தடங்கலின்றி வாசித்தல்; (ii) மனத்தால் மௌனமாக வாசித்துச்சூடிகையுடன் விஷயத்தைக் கிரஹித்துக் கொள்ளல்; (iii) வாசித்த விஷயத்தில் பொதிந்துகிடக்கும் விசேஷக் கருத்தை விட்டுவிடாதிருத்தல்; (iv) புத்தகங்களின் மீது ஒரு ஆசை உண்டாதல். மேல் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புக்கள் வாசிக்குந்திறமை என்றால் என்னவென்பதைப்பற்றி விரிவாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. வகுப்புக்கொரு உபாத்தியாயர் உள்ள பெரிய பள்ளிக்கூடங்களில் இந்த வாசிக்குந் திறமையை எப்படி அபிவிருத்தி செய்கின்றார்கள் என்று பார்க்கலாம்.

சாதாரணமாகக் கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் பாடசாலையைப் பரீட்சித்து விட்டு 'நன்றாயிருக்கிறது' என்று சொன்னால் பாடசாலை நன்றாகத்தான் இருக்கவேண்டும் என்று கொள்ளுகிறோம். அப்படிப்பட்ட பாடசாலையில் வாசித்தலை எப்படிக் கற்றுக் கொடுக்கின்றனர். எப்படி அத்திறமையைப் பரீட்சை செய்கின்றனர் என்பதைக் கவனிக்கலாம்.

## வாசிக்குந்திறமையை உண்டாக்கும் விதம்

ஆரம்பப் பாடசாலைகளில் ஒரு வருஷம் முழுவதும் வாசிக்க ஒரு புத்தகம் வைக்கின்றார்கள். அதில் சுமார் 30 பக்கங்கள் இருக்கின்றன. வாசிக்கவேண்டிய பாடங்களைப் பிள்ளைகள் நன்றாகத் தலைகீழ்ப்பாடமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள் அடியெடுத்துக் கொடுத்தால் பக்கம் முழுவதும் பையன் ஒப்பிப்பான். பையன்களுக்குப் பதிலாகக் கிளிப்பிள்ளைகள் வகுப்பிலிருந்தால் கூட ஒரு வருஷ காலத்தில் முழுப்புத்தகத்தையும் தலைகீழ்ப்பாடமாகத் திருப்பிச் சொல்லும் சக்தி ஏற்பட்டுவிடும் படித்த பாட புத்தகத்தைத் தவிரப் புதிய புத்தகமோ, நோட்டீஸோ, கடிதமோ கையில் கொடுத்து வாசிக்கச் சொன்னால் வாசிக்கும் விதமே அவர்களுக்குத் தெரிவதில்லை. பாடபுத்தகங்களைத் தவிர வேறு எதையும் வாசிப்பதற்குப் பயிற்சி கொடுப்பதில்லை.

முன்னொரு காலத்தில், நான் சிறுவனாக இருந்தபோது, இன்ஸ்பெக்டர்கள் பரீட்சை செய்யவரும்போது கடிதங்களும், பத்திரங்களுமாகப் பலவிதக் கையினால் எழுதிய ஏடுகளை வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். இந்த ஏடுகளில் ஒன்றை வகுப்புக்குத் தகுந்தவாறு பொறுக்கியெடுத்தும் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லுவது வழக்கம். பிறகு எவ்வளவுதூரப் தாம் படித்த விஷயத்தைக் கிரஹித்துக் கொண்டிருக்கிறார்களென்று பிள்ளைகளைக் கேள்விபோட்டு அறிவது வழக்கம். இதெல்லாம் பழைய காலம். பிறகு தமது ரிபோர்ட்டில் 'கையெழுத்து ஏடுகளை வாசித்தல்'. என்னும் குறிப்பின் கீழ்த் தகுந்த விதமாகத் தமது திருப்தியைத் தெரிவிப்பது வழக்கம். இக்காலத்தில் இவ்விதமாகப் புதிய விஷயங்களைப் பிள்ளைகள்வாசித்தறியும் சக்தி பெற்றிருக்கின்றார்களாவென்று பார்ப்பதாகத் தெரியவில்லை.



## வாசிக்குந்திறமை உண்டாவதில்லை

ஒருசிறு புத்தகத்தைத் தலைகீழ்ப் பாடமாக வாசித்துவிட்டால் பிள்ளைகள் தாம் வாசித்த விஷயத்தின் பொருளைத் தாமே அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக ஆய்விடுவார்களா? ஏதாவது புதிய விஷயங்களைக் கொடுத்து வாசிக்கச்சொல்லி எவ்வளவுதூரம் வாசிக்குந் திறமை பெற்றிருக்கின்றார்களென்று பார்க்கவேண்டுமல்லவா? பள்ளிக்கூடத்தில் இவ்விதத் திறமையை உண்டாக்குவதற்குப் பிரயத்தினம் கூடச் செய்வதில்லை. பரீட்சை செய்பவர்களும் வாசிக்குந்திறமை உண்மையாக ஏதாவது இருக்கிறதா என்று கவனிக்கிறதில்லை. இப்படியிருக்கும்போது கல்வி யபிவிருத்திக்கே அடிப்படையாக இருக்கும் வாசிக்குந்திறமை எவ்வளவு தூரம் பிள்ளைகளுக்கு உண்டாகும்?'நன்றாக இருக்கிறது' என்று சொல்லப்படும் ஒரு வகுப்புக்கு ஒரு உபாத்தியாயர் பள்ளிக்கூடங்களில் வாசிக்குந் திறமையே இவ்வாறு இருக்கிறது. 'புத்தகங்களைப் படிப்பதில் பிள்ளைகளுக்கு ஆர்வம் உண்டாக்க வேண்டும்' என்று கல்வி இலாகாவின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதே. அந்த விஷயத்தில் பிரயத்தினம் எந்தப் பெரிய ஆரம்பப் பள்ளிக்கூடத்திலும் செய்வதாகத் தெரியவில்லை.

அடுத்த பகுதியில் நான் சில முக்கியமான புள்ளி விவரங்களைக் கொண்டு வகுப்புக்கொரு உபாத்தியார் உள்ள ஆரம்பப் பள்ளிகளின் கல்வித் திறமையைப்பற்றி விரிவாக எழுதுகிறேன். அப்போது என் கொள்கை சரியா அல்லது இது போழ்து நிலவிவரும் இரண்டு கொள்கைகளும் சரியா என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளலாம்.

JL
T15m21, N36PA
N36.1.8-9
ஆவணக்காப்பக
147640
சென்னை-600 008.

# தென்னிந்திய கல்விவாரக் கொண்டாட்டம்

---

## பெற்றோர் வரவேற்பு

ஷடாணா—மெட்டு

**பல்லவி**

தென்னிந்தியக் கல்வி வாரமதை
தென்னாட்டவர் தெரியப்பண்ணவே—தென்.

**அநுபல்லவி**

கல்வி வாரத்தாலே—கழகத்தூண்டலாலே
பல்விதத்தினாலே—பரிவுடனிப்போதே—தென்.

**சரணம்**

1. பல பள்ளியாசிரியர் பலர் கூடி, தலதலம் ஓடி, தயவுடன் நாடி,
பெற்றோர்களும்கூடி, பெரிதும் கொண்டாடி,
பேதமையை யோட்டிப் பேரறிவை யூட்டி—தென்.

2. ஆசிரியர் பெற்றோர் ஏனையோரும் உற்றோர்
ஆசிகூறவேட்க, எந்தம் பள்ளி சேர்க்க,
ஊக்கத்தை அடுத்து, ஏக்கத்தை விடுத்து,
நோக்கத்தைக் கொடுத்து, ஆக்கத்தைத் தொடுத்து—தென்.

3. நன்று நன்று இன்று, துன்றுவிழாவிலே—
என்றும் என்றும் எங்கள் மன்றங்களுமோங்க,
சேய்களை விடாத செவிலித்தாய்கள் போல,
சேர்ந்து பெற்றோர்கள் நீங்கள், சேமமாயுழைப்பீர்—தென்.

4. ஆதலாலே இவ்வூர் வாசிகளே நீங்கள்,
காதலாலே ஓடி, கடைக்கணிக்கக் கூடி,
கல்வி வாரத்தாலே—கலைஞானிகளே !
செல்வியருளாலே—சேர்ந்துழைப்பீர்மேலே—தென்னிந்திய.

*　　　*　　　*　　　*

**ஆக்கியோன்**

பண்டிட். எம். எல். வி. தாதாசாரியர்,
வி. வி. வி இந்து கலாசாலை, திருவள்ளூர்.



### ஆத்தூர் தாலூக்கா

5-10-36 முதல் 11-10-36 முடிய "தென் இந்திய 6 வது கல்வி வாரம்" இந்தத் தாலூக்காவிலுள்ள எல்லா சங்கங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டு அதன்பிரகாரம் கொண்டாடப்பட்டது. ஷை வாரத்தில் பிள்ளைகள் ஊர்வலம், கல்வி, நன்னடக்கை முதலிய விஷயமான உபந்யாசங்கள், விளையாட்டுகள், பரிசுகள் தின்பண்டங்கள், தாம்பூலங்கள், முதலியன வந்திருந்த கனவான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டன.

ஷை விஷயங்கள் கொண்டாடப்பட்டதாகத் தகவல் கிடைத்த பாடசாலைகள் பின்வருமாறு :—

| | | | கிராமம். | தாலூக்கா. | ஜில்லா. |
|---|---|---|---|---|---|
| (1) | போர்டு | ஆண்பாடசாலை | நரசிங்கபுரம். | ஆத்தூர் | சேலம் |
| (2) | ,, | ,, | தலைவாசல் | ஷை | ஷை |
| (3) | ,, | ,, | உமயாபுரம் | ஷை | ஷை |
| (4) | ,, | ,, | செக்கிடிப்பட்டி | ஷை | ஷை |
| (5) | ,, | ,, | கொட்டவாடி | ஷை | ஷை |
| (6) | ,, | ,, | மணிவிழுந்தான் | ஷை | ஷை |
| (7) | ,, | ,, | ஆரியபாளையம் | ஷை | ஷை |

---

### பட்டி வீரன் பட்டி

நிலக்கோட்டை ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர் கிளைச் சங்கத்தின் சார்பாகவும், பட்டிவீரன் பட்டி நாடார் சரஸ்வதி விலாச வித்தியா சாலா ஆசிரியர் சங்கத்தின் சார்பாகவும், ஷை பாடசாலையில் கல்வி வார விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான பெற்றோர்களும், பக்கத்துக் கிராமங்களில் இருந்து ஆசிரியர்களும் விஜயம் செய்திருந்தனர்.

### நிகழ்ச்சிக் குறிப்பு பின்வருமாறு

5-10-36. திங்கள்:—பாடசாலைகளும் நன்னடத்தைப்பயிற்சியும்.
தலைவர் :—லேடி டாக்டர் அன்பு அம்மாள் அவர்கள் பட்டி வீரன் பட்டி.

#### சொற்பொழிவுகள்

1. The value of school discipline in character training—(பாடசாலை ஒழுங்கும் நன்னடத்தைப் பயிற்சியும்) By Mr. V. சுப்பையா, தலைமை ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி. வீரன் பட்டி.

2. பிள்ளைகளிடமிருக்கும் தகாத குணங்களைப் போக்க பாடசாலைகள் செய்யும் வேலைகள் By. Mr. V. ரெத்தினசாமி, உதவி ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி வீரன்பட்டி.
3. ஓய்வு நேர வேலைகளும் நன்னடத்தைப் பயிற்சியும் (By. Mr. R. திவாகரன், உதவி ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி வீரன்பட்டி.
4. பாடசாலைகளில் நீதி போதனையின் அவசியம் By Mrs. பாக்கியம் துரைராஜ், தலைமை ஆசிரியர், N. S. V. V. Sala, பெண் பாடசாலை பட்டி வீரன் பட்டி.
5. கைத்தொழில்களும் நன்னடத்தைப் பயிற்சியும் By. Mr. வேதமுத்து, உதவி ஆசிரியர். N. S. V. V. Sala, பட்டி வீரன்பட்டி.

6-10-36 செவ்வாய்க்கிழமை.

## ஆசிரியர் தினம்

## தலைவர்-Mr. A. கதிரேசன் B. A.

### சொற்பொழிவுகள்

1. கல்வி வாரமும் அது செய்திருக்கும் எழுச்சியும் By Mr. R. திவாகரன், உதவி ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி வீரன் பட்டி.
2. தென்னிந்திய ஆசிரியர் 'ஐக்கிய சங்கமும் அதன் வேலையும் By. Mr. V. சுப்பையா, தலைமை ஆசிரியர், N. S. V. V. பட்டி வீரன்பட்டி.
3. தொழில் கல்வியும் பொதுக் கல்வியும் By Mr. C. ராமசாமி உதவி ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி வீரன் பட்டி.
4. பெரிய கல்விப் பிரச்சனைகள் By Mr. K. S. N. P. நடராஜன் அவர்கள், வைஸ்சேர்மன், யூனியன் பஞ்சாயத்துப் போர்டு பட்டி வீரன்பட்டி.

### மாதிரிப் பாடங்கள்

1. லாப நஷ்டக் கணக்குகள் IV Std By Mr. K. ஆறுமுகம்.
2. பூகோளபாடம்—ஹாலண்டு VIII Std By Mr. D. S. B. வில்லியம், உதவி ஆசிரியர். N. S. V. V. Sala, பட்டி வீரன் பட்டி..

7-10-'36 புதன்கிழமை. ஓய்வு நேரவேலைகளும் (Extra Curricular activities) நன்னடத்தைப் பயிற்சியும்.

தலைவர் M. R. Ry. K. S. பெரியதம்பி நாடார் அவர்கள், பஞ்சாயத்து போர்டு தலைவர்



1. மாணவர் மாணவிகள் ஊர்வலம்
2. சாரணர், குருளையர் விளையாட்டுகள்
3. கும்மி, கோலாட்டம், டயலாக், ரெஸிடேஷன் (மாணவ மாணவிகள்)
4. மாணவ, மாணவிகள் சங்கமும் அதன் உபயோகமும் By தோழர் S. மாணிக்கம் அவர்கள் பட்டி வீரன் பட்டி.
5. சாரண இயக்கமும் நல்லொழுக்கமும் By. Mr. R. திவாகரன், Cub Master, N. S. V. V. Sala, பட்டி வீரன்படடி.
6. நல்ல உணவின் அவசியம் By Doctor முத்து அவர்கள், பட்டி வீரன்பட்டி.
7. உல்லாசப்பிரயாணம் By Mr. K. ஆறுமுகம், ஆசிரியர், N. S. V. V. Sala.
8. மாணவ மாணவிகளுக்கு ஓர் வேண்டுகோள் By. Mr. V. சுப்பையா, தலைமை ஆசிரியர், N. S. V. V. Sala, பட்டி வீரன் பட்டி.

---

தாரமங்கலம் உபாத்திமைச் சங்கச்சார்பாக.

(1) தாரமங்கலம் போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலையிலும் (2) தொளசம்பட்டி போர்டு பாடசாலையிலும் கீழ்க் கண்டவாறு வெகு சிறப்பாக நடைபெற்றன.

1. தாரமங்கலம் போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை :—

8-10-36 வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தாரமங்கலம் போர்டுஹையர் எலிமெண்டரி பாடசாலைக் கட்டிடத்தில் இவ்வூர்ப் பிரமுகர்களும் உத்தியோகஸ்தர்களும் இதர கனதனவான்களும் கூடிய கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு இவ்வூரிலுள்ள எல்லாபாடசாலை மாணவ மாணவிகளும் ஆஜரானார்கள். இவ்வூர் பஞ்சாயத்துப் போர்டு ஸ்பெஷல் ஆபீசர் உயர்திருவாளர் இராகவன் நாயர் அவர்கள் B. A., B. L. தலைமை வகித்தார். உயர்திருவாளர் T. L. வெங்கட்ட சுப்ரமண்ய அய்யர் அவர்களால் "மாணவர்களும் நல்லொழுக்கம் பயிற்சியும்" என்ற விஷயமாக ஓர் உபந்நியாசம் நடைபெற்றது. மற்ற ஆசிரியர்களும் இதை ஒட்டிப் பேசினார்கள். தலைவர் பின்னுரையில் மாணவர்களுக்குப் படிப்பும், படிப்பைவிட ஒழுங்கும் சிறந்தது என்றும் இவ்வொழுக்கத்தை மாணவர்கள் விளையாடும் இடங்களிலும் தங்களோடு பழகும் இதர மாணவர்களிடத்திலும் கற்றுக் கொள்ளுகிறார்கள் என்றும் மிக விரிவாகப் பேசினார்கள்.

மாலை 4 மணிக்கு எல்லாப்பாடசாலை மாணவ மாணவிகளாலும் கல்வி வாரத்தைக் காட்டக்கூடிய கொடிகளுடனும் விருதுகளுடனும் மேளவாத்தியத்துடனும் ஊர்வலம் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஊர்

வலம் நடைபெறும்போது ஒவ்வொரு மூலையிலும் கல்வி வாரக் கொண்டாட்ட விசேஷத்தைப்பற்றி ஒவ்வொரு உபாத்தியாயரும் ஜனங்களுக்கு விளங்கும்படி உபந்நியசித்தார்கள். பிறகு பாடசாலைக்கு வந்ததும் மிட்டாய்தினுசுகள் வழங்கப்பட்டன.

**9-10-36** வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு பெற்றோர்களின் சார்பாக ஊர்ச்சாவடியில் ஓர் பெருங் கூட்டம் நடை பெற்றது. இவ்வூர் பிரமுகர்களும்பொது ஜனங்களும் கூடி யிருந்தனர். இவ்வூர் பஞ்சாயத்துப் போர்டு ஸ்பெஷல் ஆபீசர் உயர் திருவாளர் இராகவன் நாயர் அவர்கள் B. A. B. L. தலைமையின் கீழ் "பெற்றோர்களின் ஒத்துழைம்பு" என்ற விஷயமாய் Messers :—T. P. நடராஜப் பிள்ளை T. L. வெங்கட்ட சுப்ரமணிய அய்யர், S. V. பிச்சுமணி அம்யர், தலைமை ஆசிரியர் T. R. சுப்ரமணிய அய்யர் அவர்களும் விரிவாகப் பேசினார்கள். அதாவது இத்தாலூக்காவிலேயே இவ்வூர்ப் பாடசாலைதான் பெரிது. அப்படி இருந்தும் கட்டிட வசதி, விளையாடும் இடம் முதலியவை இல்லாதது மிக்க வருத்தமடையவேண்டியிருக்கிறது. தற்பொழுதுள்ள கட்டிடமோ மிக்க கேவலத்துடன் ஒழுக்கலுடையதுமாய் அபாயகரமான நிலையிலு முள்ளது. இதைப்பற்றி இப்பாடசாலை ஆசிரியர்கள் மேலதிகாரிகளுக்கு எவ்வளவு சொல்லியும் எழுதியும் பயன்படாமலிருந்து வருகிறது. இனியாவது நீங்கள் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும். அதாவது அடுத்தாற்போல் ஜில்லா போர்டு தேர்தல் வருவதால் உங்களது வாழ்க்கை பெறுவதற்கு வரப்போகும் அபேக்ஷகர்களிடம் இதை வற்புறுத்த வேண்டும். எப்படியெனில் எங்களூர் பாடசாலைக் கட்டிடம் முதலிய பல விஷயங்கள் மிக்க கேவலத்திலுள்ளது. அதற்கு நீங்கள் எவ்வளவு தூரம் உதவி செய்ய இயலும் என்றுகேட்டு அவர்களிடம் பாடசாலை சம்பந்தமாகச் சகல விஷயத்திலும் உதவி செய்வதற்கான வாக்குறுதியைப் பெற்றபிறகு தான் உங்கள் உறுதியைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார்கள். பிறகு தலைவர் அவர்கள் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிய அளவில் தங்கள் கடமை தீர்ந்து விட்டதாகக் கருதக் கூடாது. பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் உதவியாக இருக்கவேண்டுமென்றும் சாரணர் இயக்கம் மாணவர்களின் ஒழுக்கத்திற்கு இன்றியமையாதது என்றும் கூறி தன்னுடைய பின்னுரையை முடித்தார். பிறகு மாஜி போலீஸ் சப் இனிஸ்பெக்டர் உயர் திருவாளர் S. சங்கமேஸ்வர சாஸ்திரியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சங்கம் கலைந்தது.

## 2. தோளசம்பட்டி

**7-10-36** மாலை 5 மணிக்கு தொளசம்பட்டி போர்டு பாடசாலைக் கட்டிடத்தின் சாதாரணக் கூட்டம் கூட்டப்பட்டு ம-ா-ா-ஸ்ரீ T. C. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் கோவாபரேடிவ் யூனியன் பிரசிடெண்டு



தலைமையின் கீழ் கல்வி வாரக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக 8-10-36 முதல் 10-10 36 வரை நடத்தலாமாகத் தீர்மானிக்கப்பட்டது. தாரமங்கலம் செண்டர் உபாத்திமைச் சங்கத்தில் சப்ளை செய்யலான அச்செழுத்துப் படங்களை ஜனங்களுக்குத் தெரியும் படியான இடங்களில் ஒட்டப்பட்டது.

**8-10-36** மாலை 2 மணிக்கு பாடசாலை மாணவ மாணவிகளால் கல்வி வாரக் கொண்டாட்டத்தை விளக்கக்கூடிய கொடிகளுடனும் விருதுகளுடனும் மேளவாத்தியத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. அப்போது ஜனங்கள் அதிகமுள்ள இடங்களில் இதன் நோக்கங்களைப்பற்றி ஒவ்வொரு ஆசிரியரும் ஜனங்களுக்கு விளக்கிக் காட்டினார்கள். பிறகு பாடசாலைக்கு வந்ததும் ம-ா-ா-ஸ்ரீ G. N சக்ரவர்த்தி அய்யங்கார் அவர்கள் யூனியன் மானேஜர் "கல்வியின் அவஸ்யத்தைப்பற்றி விரிவாகப் பேசப்பட்டும் பிள்ளைகளுக்குப் பொரிகடலை வழங்கப்பட்டும் கூட்டம் கலைந்தது.

**9-10-36** மாலை 5 மணிக்கு ஆண்பாடசாலைக் கட்டிடத்தில் கூட்டம் கூடியது. ம-ா-ா-ஸ்ரீ T. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையின் கீழ் Mr. A. வெங்கடாசல அய்யர் அவர்கள் தலைமை ஆசிரியர் அவர்களால் "பிள்ளைகளும் பெற்றோர்களும்" என்ற விஷயத்தைப்பற்றி விரிவாகப்பேசினார். இதை ஒட்டி மற்ற ஆசிரியர்களும் பேசினார்கள்.

**10-10-36** மாலை 5 மணி ஐக்கிய நாணய யூனியன் கட்டிடத்தில் கூட்டம் கூடியது. இக்கூட்டத்திற்கு ம-ா-ா-ஸ்ரீ G. N. சக்ரவர்த்தி அய்யங்கார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். "பெற்றோர்களும் உபாத்தியாயர்களும்" என்னும் விஷயத்தைப்பற்றி Mr. A. வெங்கட்டரமணய்யர் அவர்களால் உபந்நியசிக்கப்பட்டது. பிறகு அக்கிராசனர் அவர்களுக்கும் இக்கொண்டாட்டத்தை வெகு சிறப்பாக நடத்திக் கொடுக்கப்பட்ட ம-ா-ா-ஸ்ரீ தொளசம்பட்டி கொவாபரேடிவ் யூனியன் பிரசிடெண்டு T. C. கிருஷ்ணங்வாமி அய்யர் அவர்களுக்கும் மற்றுமுள்ள கனதனவான்களுக்கும் தலைமை ஆசிரியர் N. வெங்கடாசல அய்யர் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இச்சபை கலைந்தது.

---

## கோபி நாயகன் பட்டி

கோபிநாயகன் பட்டி "ஆசிரியர் தேசிய கழகத்தின்" ஆதரவில் கல்விவாரம் இப்பக்கங்களிலுள்ள சில கிராமங்களில் அதி விமரிசையாய் கொண்டாடப் பட்டது. விவரம் வருமாறு :—

**5-10-36** ஆம் தேதி மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சேங்குளம் கிராமத்தில் குடியானவர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. முதலில் மாணவிகள் கும்மியும் கோலும் அடித்தார்கள். மாணவிகளின் பாட்டும் கோலாட்டமும் கிராமத்து ஜனங்கள் அனைவரும், வந்து கூடும்படி செய்துவிட்டது. முதலில் ஸ்ரீமான்

கொ. வெங்கிடாசலபதி அவர்கள் "தென்னிந்தியக் கல்விவாரக் கொண்டாட்டக் கமிட்டியாரின்" நோக்கத்தை கூறிவிட்டு கிராம வாசிகளுக்கு கல்வி எவ்வளவு அவசியமென்பதைப் பற்றியும் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் தேடிவைக்கும் அழியாத ஆஸ்தி கல்வி தானாகுமென்பதையும் பற்றிக் குறிப்பிட்டார். வி. கே. வித்யாசாலா ஆசிரியர் எஸ். ராமையா அவர்கள் "கல்வி அழகே அழகு" என்னும் பொருள் பற்றியும் பிரபல வியாபாரியும் மிராசுதாரருமான ஸ்ரீமான் மாரியப்ப நாடார் அவர்கள் "இளைஞரே தேசத்தின் மூலதனம்" என்னும் விஷயமாகவும் பேசினார். விருதுநகர் ஹரிஜனசேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீமான ரா. குருசாமி நாடார் அவர்கள் கிராமப்புனர் உத்தாரணத்திற்கு ஆரம்பக் கல்விதான் முக்கியமென்பதைப் பற்றிப் பேசிய பின்னர் 'கல்விவாரக் கமிட்டியாரின் துண்டுபிரசுரங்கள் வழங்கப்பட்டு தேச வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது. இந்தக் கூட்டத்தின் காரணமாகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்ப ஆரம்பித்திருப்பதுடன் பள்ளிக்கு வருவதை இடையே நிறுத்தியிருந்த மாணவர்கள் பலர் ஒழுங்காக வர ஆரம்பித்திருக்கின்றனர்.

**6-10-36** கமிட்டியார் முருகனேரி என்ற கிராமத்திற்கு மாலை கல்விப் பிரசாரப் படங்களுடனும் துண்டு பிரசுரங்களுடனும் சென்றனர். மாணவர்கள் பாட்டுப் பாடிய பின்னர் கூட்டம் நடைபெற்றது. வி. கே. வித்யாசாலா தலைமை யாசிரியர் கல்வி வாரத்தைப் பற்றியும் குடும்ப முன்னேற்றத்திற்கும் கிராம முன்னேற்றத்திற்கும் கல்வி எத்துணை அவசியமென்பதையும் பற்றிப் பேசினார். ஸ்ரீமான் வெங்கடசுப்பு அவதானி அவர்கள் "கல்வியே கருந்தனம்" என்னும் விஷயமாகப் பேசி குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். கூட்டத்திற்கு அக் கிராமத்திலுள்ள சுமார் 200 ஹரிஜனங்களும் வந்திருந்தனர்.

**7-10-36** ரெட்டிரப்பட்டி கிராமத்திற்கு கமிட்டியார் சென்று பாரதியாரின் கல்வி சம்பந்தமான கீதங்களுடன் ஊர்வலம் வந்தனர். கிராமப்பெரியதனக்காரர் தலைமை வகித்தார். வி. கே. வித்யாசாலா ஆசிரியர்கள் கல்வியின் அவசியத்தைக் குறித்துப் பேசினார்கள். ஸ்ரீமான் என். சுப்பையா அவர்கள் பெண்கள் படிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி வற்புறுத்திக் கூறினார். பின் அக் கிராம 'ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ராமசாமி அவர்கள் வந்தனோபசாரம் கூற தேசவாழ்த்துடன் கூட்டம் முடிந்தது.

**8-10-36** வேங்கடாசலபுரம் கிராமத்திற்குப் பிரசாரம் செய்வதற்காக கமிட்டியார் சென்றார்கள். அக்கிராமவாசிகள் எதிர்கொண்டழைத்து உற்சாகமாகப் பெருங்கூட்டம் கூடினார்கள். ஸ்ரீமான் ஜெயகரன் அவர்கள் 'கல்வியும் விவசாயமும்' என்னும் விஷயமாகப் பேசிய பின்னர் ஆசிரியர்கள் 'மற்ற தேசங்களில் கல்வி எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்னும் விஷயமாகவும் நம் நாட்டில் கல்வி பரவினால்,



கற்றவர்களைப் பிரகாசிக்கச் செய்யும்; தாமுள்ளவரைக் கெடுவதில்லை ஆகையால் எவ்வுலகத்திலும் கல்வியைப்போல அஞ்ஞானத்தை நீக்கும் மருந்தை நாம் கண்டறியோம்," என்பதாம். இச்செய்யுள்களின் வாயிலாக் கல்வி புருஷருக்கே உரியதன்று; பெண்களுக்கு முரியதே யென்று அறியலாகும். தவிர, இல்லறம் பெண்களாலேயே நடைபெறுவது. "இல்லாளகத்திருக்க இல்லா தொன்றில்லை" இல்லாள் இல்லாத வீடு இடுகாடு (சுடுகாடு)", வீடு வாசல்களைச் சுத்தமாக வைத்திருந்தாலும், வருவாயிக்குத் தக்கபடி செலவு செய்து கணக்குகளைச் சரியாக வைத்தலும், கணவன், மாமன், மாமி, உற்றார், விருந்தினர் முதலியோரிடத்து அவர்களுக்கேற்றவாறு நடந்து கொள்ளுதலும், பிள்ளைகளை நல்லவிதமாக வளர்த்தலுமாகிய பல வகைப்பட்ட வீட்டுக் காரியங்களை விமரிசையாய் நடத்துவதில் புருடரை விடப் பெரும் பொறுப்பு வாய்ந்த பெண்கள் கல்வியில்லாதவர்களாயின், தங்கள் கடமையை யுணர்ந்து, சீராகக் குடித்தனம் செய்ய எவ்வாறு முடியும்?

## IV. பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும்?

பெண்கள் எத்தகைய கல்விக்கேற்றவர்களென்னும் விஷயத்தில் பலர் பலவாறான அபிப்பிராய முடையவர்களாயிருக்கின்றனர்.

(a) சாதாரணமாய் எழுதவும் படிக்கவும் தெரிந்தால் போதுமென்பார் ஒரு சாரார். தற்போது கற்றவர் வகுப்பிற் கணக்கிடப்பட்ட பெண்களிற் பெரும்பாலோர் அத்தகைய குழந்தைக் கல்வியுடையோரே யாவர். இது கல்வியின்பாற்படுமோ? தேராமற் கற்றது கல்வியேயன்று. இத்தகைய கல்வி என்ன பலனைத் தரும்?

(b) க்ருஹிணி, மனைவி, இல்லாள், முதலிய பெயர்கள் பெண்களுக்கிடப்பட்டுள்ளதை யாராய்ந்து நோக்குமிடத்துப் பெண்கள் வீட்டுக் காரியங்களுக்கே ஏற்றவர்கள் என்று பாவித்து அவர்களது தொழில்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ற கல்வியே கொடுக்கப்படவேண்டும் என்பார் வேறொரு சாரார். கணவனைத் தெய்வமாகப் பாவித்து, அவன் இதத்தையே கோரி, அவன் பிரியம் போல் நடந்து கற்புநிலை தவறாது, மன மொத்து வாழல், வரவுக்குத் தக்கபடி சிக்கனமான செலவு செய்தல், குடும்ப நிர்வாகத்தில் ஏற்படும் கஷ்டநிஷ்டூரங்களைச் சகித்தல், மாமன் மாமியாரைத் தந்தை தாய்போல் கருதி உபசரித்தல், பக்குவமாக உண்டி சமைத்தல், வீட்டைச் சுத்தமாக வைத்தல், பிள்ளைகளைச் சன்மார்க்கத்தில் பயிற்றல் முதலிய அவர்கள் கடமைகளுக் கேற்றபடி இராமாயணம், மகாபாரதம், போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. கணிதநூல், குறள், நாலடியார்போன்ற நீதி நூல்கள், பாக சாஸ்திரம், சுகாதாரநூல், வைத்தியநூல், தையல் முதலியவற்றை அவர்கள் கற்க வேண்டும். இலக்கணம், பூகோளம், நவீன நூல்களில் நன்மை பயக்கும்

பொது ஜனக்கிளர்ச்சிக்கு இச்கொண்டாட்டம் மிகவும் துணைபுரியுமென்றும் நம்புகின்ருேமென்று, நமது நிருபர், ஸ்ரீமான் கோ. வெங்கிடாசலபதி, ஆசிரியர் தேசீயக் கழகத்தின் காரியதரிசி, எழுதியுள்ளார்.

## கல்வி வாரப் பயனைப்பற்றி ஒரு விசேஷ நிருபர்

கோடுமுடி

கொடுமுடி ஸ்ரீ சீதாலக்ஷ்மி பாலிகா பாடசாலா மாணவ மாணவிகள் ஷை பாடசாலா உபாத்தியாயர் உபாதியாயனிகளுடன் கல்வி வாரத்தை முன்னிட்டு இன்று எங்கள் ஊர் பாமர ஜனங்களுக்கு கல்வியின் அவசியத்தை நன்கு எடுத்துக் காட்டினார்கள். கல்வியின் முன்னேற்றத்திற்காக இவ்வளவு சிரத்தையாக வேலை செய்தவர்கள் நம் ஊரில் இதுவரையில் ஒருவரையும் காணோம். தற்போது தலைமை உபாத்தியாயரும் என் நண்பரும் ஆகிய K. S. பெரியசாமி ஐயர் மற்ற உபாத்தியாயர்களுடன் இவ்வித சிறந்த வேலையில் ஈடுபட்டிருப்பதைக்கண்டு நான் அளவில்லா ஆனந்தத்தை அடைந்ததோடு அடுத்த வருஷம் முதற்கொண்டு எங்கள் ஊரிலுள்ள பிள்ளைகளை ஷை பாடசாலாவிற்கு அனுப்பச் சகலவித ஏற்பாடுகளும் செய்து பள்ளிக்கூடத்திற்கு என்னால் இயன்ற உதவி புரியவும் எண்ணங் கொண்டுள்ளேன். உள்ளூர் வாசிகளும் ஷை பள்ளிக்கூடத்தை முன்னேற்ற மடையச் செய்வதில் முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நல்லசாமி கௌண்டர். மிராசுதார்.

# பத்திராதிபர் குறிப்புகள்

## கல்வி வாரம்

5-10-36 முதல் 11-10-36 வரையில் நமது ராஜதானியில் பல இடங்களில் கல்விவாரம் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தை கல்வி அபிமானிகளும் ஆசிரியர்களும் கல்வி இலாகா ஆபீஸர்களும் மிக ஊக்கத்துடன் நடத்திவைத்தார்களென்று நமக்கு ஆங்காங்கு வந்திருக்கும் அறிக்கையிலிருந்து நன்கு விளங்குகிறது. கல்விவாரக் கொண்டாட்டத்தில் பெற்றோர்களும் மற்றையபொது ஜனங்களும் அளவற்ற உற்சாகம் காண்பித்திருக்கின்றனர். எல்லா இடங்களிலும் கல்வி அவசியத்தைப் பற்றி பல பிரமுகர்கள். சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கிறார்கள். கல்வியறியாமையே நமது தேசத்தின் முன்னேற்றத்துக்கே ஒரு பெரிய தடை; அத் தடையை தவிர்த்தாலல்லவோ தேசம் முன்னேற்றமடையும். பொது மக்களிடத்தில் கல்வியின் அவசியத்தையும் கல்வி போதனைக்காக ஏற்பட்டிருக்கும் வசதிகளைப் பற்றியும் தெரிவித்தல் மிக இன்றியமையாதது. அப்பொழுதே ஆசிரியர்கள் தொண்டின் மேன்மையைப் பற்றியும், பள்ளிக்கூடங்களில் பாலர்களுக்காக வேண்டிய வசதிகளைப் பற்றியும் அவர்கள் அறிந்துக்கொள்ள முடியும். கல்வி வாரத்தின் ஒரு முக்கிய கொள்கை இதுவே யாம். வருடந்தோரும் இம்மாதிரி கல்வியைப்பற்றியும் பள்ளிக்கூடங்களைப் பற்றியும் ஒரு வாரமாவது ஜனங்கள் நினைக்கும்படி செய்வோமானால் சீக்கிரத்திலே நமது நாட்டின் கல்வி அறியாமை ஒழிந்து விடும். பொது மக்களும் பள்ளிக்கூடங்களில் சிரத்தைக் காண்பித்து அவைகள் அபிவிருத்திக்கு வேண்டிய சாதகங்கள் செய்ய முன் வருவார்கள். ஆசிரியர்கள், இக்கல்வி வாரத்தில் காட்டிய ஊக்கத்தை வளரச் செய்ய முயற்சித்து வந்தார்களானால் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் முக்கியமான இடமாக மாறிவிடும்.

---

## ஆரம்பப்பள்ளிக்கூட கட்டிடங்கள்.

சென்ற மாதப் பத்திரிகைகளில் வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அவர்கள், வேலூர் முனிசிபாலிடியின் ஆளுகையைப்பற்றி எழுதும் பொழுது, சில முனிசிபாலிடி பள்ளிக் கூடங்கள் இருக்கும் கட்டிடங்கள் ஆடு மாடு தங்கும் இடங்களைவிட கேவலமாயிருக்கின்றனவென்றும்,இம்மா

திரி கட்டிடங்களுக்குள் சிறுமாணவர்களைப் போகும்படி கட்டாயப்படுத்துவது மிகப்பாவம் என்றும் அபிப்பிராயப் பட்டதாகத் தெரிகிறது. அதற்கு சிலநாள்முன்புதான் அனந்தபூர் ஜில்லா போர்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் பற்றி, அந்த ஜில்லா கலெக்டரும், இம்மாதிரியாகவே எழுதியிருந்தார். முனிஸிபாலிடி ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களிலே யிருக்கின்றன. வாடகையில் இவர்கள் செலவிடும் தொகை, சில இடங்களில் ஆசிரியர்களின் சம்பளத்தைவிட ஆதிகமாகத் தானிருக்கிறது. ஆயினும் பள்ளிக்கூடமிருக்கும் கட்டிடங்களே மிக கேவலமானதாயும் மாடுகட்டும் இடங்கள் போலவே தான் காணப்படுகின்றன. பிள்ளைகளிருக்குமிடம் அழகானதாயும், விசாலமாயும், நல்ல வெளிச்சமுள்ளதாயுமிருக்க வேண்டும்.

வாடகைக் கட்டிடங்கள் தான் இவ்வாறு இருக்கின்றதென்றால் சொந்தக் கட்டிடங்களாவது சரியாக அமைக்கப்பட்டிருக்கின்றனவா? பெரும்பாலும் மிகத் தளுக்காக கட்டிய கட்டிடங்களாகவே யிருக்கின்றன. அநேக இடங்களில் சுவர் இடிந்தும், சுண்ணாம்பு உதிர்ந்தும் கூறை பிரிந்தும் காணப்படுகின்றன.

ஆரம்பக் கல்வியில் வீண் செலவு அதிகமென்றும், பணத்துக்குத் தகுந்த பலனில்லையென்றும் துரைத்தனத்தார் பல தடவைகளில் சொல்லுகிறார்கள். பள்ளிக்கூடங்கள் கட்டும் முறைகளையும், பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் வாடகைக்கு ஏற்படுத்தும் முறையும் சற்று கவனித்து வந்தால் வீண் செலவைக் குறைக்கலாம். பாடசாலை கட்டிடங்களும் நன்றாக அமைக்கப்படலாம். இரண்டு ஜில்லா கலெக்டர்கள் இதைப் பற்றி புகார் செய்தபிறகாவது, துரைத்தனத்தார் இதைப்பற்றி கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

JL
T15m21,N36PA
N36.1.8-9
ஆவணக்காப்பக நூலகம்
147640
சென்னை-600 008.

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | | |
|---|---|---|
| English Conversation Book I | | for Class IV |
| do. do. Book II | | do V |
| Arithmetic for Beginners ... | ... | in Tamil |
| Domestic Hygiene ... | ... | in Tamil |
| Stories from Indian History ... | ... | for Class V |
| Tamil Primer for Beginners | ... | ... ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above.

To The Editor of this Magazine or to:

**C. S. RAMASWAMY IYER** (*Retired Teacher*)

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.**

A GUIDE TO

# ELEMENTARY SCHOOL TEACHERS

By **Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.**

with a foreword by **D. S. REDDI, M.A. (*Oxon.*)**

**English Edn.]** **178 pp. with 45 Illustrations** **[Price Re. 1**

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**

**EDUCATIONAL PUBLISHERS,**

**Narasingapuram Street — Mount Road, Madras.**

***N.B.*—Tamil Edition—in the Press.**

Regd. No. M. 3473

# தென் இந்திய ஆசிரியர்
# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் —

— ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித்தோங்கி வளர்ந்து வருகிறது.
உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union. 41, Singarachari St., Triplicane, Madras.

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாது ௵ கார்த்திகை - மார்கழி ௴
NOVEMBER & DECEMBER 1936

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆரம்பப் பள்ளிக்கூட பாஷாபி விருத்தி முறைகள் .... 283
—என். ஜெகன்னாதன்

2. எதிர்கால ஆரம்பப் பாடசாலை .... .... 295

3. முதல் வகுப்பிற்கு தாய் பாஷையை கற்பிக்கும் விதம் 300
—ஆசிரியர் A. மாரிமுத்து போர்டு பாடசாலை, செதுவாலை

4. ஆரம்ப ஆசிரியர்களுக்கோர் விஞ்ஞாபனம் .... 312
—D. கிருஷ்ணசாமி

5. பத்திராதிபர் குறிப்புகள் .... .... 314

6. இந்தியச் செய்திப் படம் .... .... ... 318

7. ரக்ஷணைப் படம் .... .... ...


---


கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷூல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

தொகுதி 1]    1936ஆம் நவம்பர்-டிசம்பர்மீ    [பகுதி 9

சென்னை-600 0

## ஆரம்பப் பள்ளிக்கூட பாஷாபிவிருத்தி முறைகள்

---

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

II. 1936 (ஜூலை மாதம் தொடர்ச்சி.)

### 1. பாஷைப் பாடநோக்கங்கள்

முன்பு ஜூலை மாத சஞ்சிகையில் ஆரம்பப்பள்ளிக்கூட பாஷாபி விருத்தி முறைகளைப்பற்றி சற்று விரிவாக எழுதலானேன். மற்றும் அதே விஷயத்தைப்பற்றி யோசிக்குங்கால் மற்றும் பல கருத்துகள் மனதில் உதயமாகின்றன. பாஷைப்பாடம் கற்பிப்பதில் உள்ள நோக்கம் காலத்திற்குக் காலம் மாறி வருகிறது.

1. வந்து போன கடிதத்தைப் படிக்கத்தெரிந்தால் போதும்.

2. ஒரு ஐந்தாவது வகுப்புப்பாட புஸ்தகத்தைப் படிக்கத்தெரிய வேண்டும்.

3. ஒரு தினசரிப் பத்திரிகை படித்துத்தெரிந்து கொள்ளப் போதுமான திறமை ஏற்பட வேண்டும் என்று நோக்கங்கள் மேன்மேலும் அதிகரித்து வருகிறதைக் கவனிக்கவேண்டி யிருக்கிறது. கடைசியில் சொல்லப்பட்ட நோக்கமே தற்காலம் எங்கும் பரவிவருகிறது. இதைப் பற்றி நாம் ஆராய்வது அவசியம்.

### 2. தினசரிப் பத்திரிகையைப் பற்றின ஆராய்ச்சிகள்

#### வார்த்தைகளின் கணக்கு

ஒரு தினசரிப்பத்திரிகையில் காணப்படும் வார்த்தைகள் எவை? எவ்வித வார்த்தைகள் திரும்பத் திரும்ப உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றனர். எவை வெகு சொல்பமாகவே உபயோகப்படுத்தப் படுகின்

147640
Chennai-600 005



றன? குன்[illegible] எவ்வளவு வார்த்தை தெரிந்திருந்தால் சாதாரணமாக ஒருவன் தினசரிப்பத்திரிகைகளைப் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடும்? தமிழ் பாஷையிலுள்ள வார்த்தைகளைத் தவிர மற்றும் எவ்வித வார்த்தைகள் தினசரி நடவடிக்கையில் உபயோகப் படுத்தப்பட்டு பலராலும் எளிதாக அறிந்து கொள்ளப்படுகின்றன? என்பவைகளைப் பற்றி சிந்திப்பது அவசியம் ஆகும்.

சில வருடங்களுக்கு முன் டீசர்ஸ்காலேஜில்கூட இதைப்பற்றி ஓர் ஆராய்ச்சி நடந்தது. காலஞ்சென்ற கல்வி இலாகா டைரெக்டர் சாம்பியன் அவர்களாலும், காலஞ்சென்ற கல்வி இலாகா உத்தியோகஸ்தர் வி. பி. வெங்கட்ட ராமய்யர் அவர்களாலும் இந்த விஷயம் கவனிக்கப்பட்டு வந்தது. அவர்கள் கணக்கு எடுத்ததில் சில புள்ளி விவரங்கள் தோன்றலாயின.

காலேஜில் படித்து வந்த மாணவர்கள் இந்த விஷயத்தில் ஒன்று கூடி ஒத்துழைத்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கத்திலுள்ள வார்த்தைகளை கணக்கெடுத்தனர். கடைசியில் இவற்றைத்திரட்டிப் பதித்ததில் கிட்டத்தட்ட 3400 வார்த்தைகள் பலதரம் வந்துள்ளன. சிலவை 1000-ந் தரமும் வந்திருக்கின்றன.

இந்த வார்த்தைகளுக்குள் 1300 வார்த்தைகள் பள்ளிக்கூடப் புஸ்தகங்களிலும் காணப்பட்டன.

மறுபடி பிள்ளைகளின் பள்ளிக்கூடப் புஸ்தகங்களைப் பரிசோதித்ததில் அவைகளில் அடங்கிய சுமார் 1600 வார்த்தைகள் தினசரிப்பத்திரிகை வார்த்தைக் கணக்கில் காணக்கூடவில்லை.

| | |
|---|---|
| பத்திரிகையிலும் புஸ்தகத்திலும் அடங்கியவை | 3400. |
| புஸ்தகததில் அடங்கியவை | 2900. |
| புஸ்தகக்தில் இருந்து பத்திரிகையில் இல்லாதவை | 1500. |
| பத்திரிகையிலிருநது புஸ்தகத்தில் இல்லாதவை | 2100. |

**பத்திரிகை, பாட புஸ்தகங்களில் பொருள் அடக்க வித்தியாசங்கள் :—**

இவைகளிலிருந்து நாம் கவனிக்கக்கூடிய விஷயங்கள் மற்றும் சிலவை ஆகும். பத்திரிகையிலுள்ள விஷயங்கள் எவை? புஸ்தகங்களிலுள்ள விஷயங்கள் எவை? இவைகளை அறிய மேற்சொன்ன வார்த்தை வித்தியாசங்களுக்குக் காரணம் தோன்றக் கூடும்.

### பத்திரிகை

1. உள்ளூர் வர்த்தமானம்
2. வெளியூர் சமாசாரம்
3. அயல் நாட்டுச்செய்திகள்
4. இராஜீய விஷயங்கள்
5. வியாபார அறிக்கைகள்
6. நீதிஸ்தல நடவடிக்கைகள்
7. பிரசங்கங்களின் சுருக்கங்கள்
8. நகரச் செய்திகள்

JL
T15m21, N3ala N36.118-9



9. விளையாட்டுகள், பந்தயங்கள்
10. ரேடியோ பிரசுரங்கள்
11. வேறு பத்திரிகை விஷயத் [திரட்டு
12. கதைகள்
13. தொழிற் பகுதி
14. நாணய வாரி மதிப்புகள்
15. சட்டசபை நடவடிக்கைகள்
16. கடிதங்கள், தர்க்கங்கள்
17. உலக அதிசயங்கள் [யங்கள்
18. மதசம்பந்தமான பொது விஷ
19. ஐக்கிய சங்கம், வியவசாயம்
20. மதிப்புரை முதலியன.

### பாடபுஸ்தகம்.

1. சிறுவர் கதைகள்
2. நூதன ஏற்பாடுகள்
3. தாவர வர்க்கம்
4. ஜீவ வர்க்கம்
5. உபயோகங்கள்
6. பயிர்த்தொழில்
7. நீதிக்கதை
8. புராணக் கதை
9. பெரியோர் ஜீவிய சரித்திரம்
10. ஆறு, பட்டணம், மலை
11. சாதாரணப் பண்டங்கள்
12. சுகாதாரம்
13. தேச சரித்திரக் கதைகள்
14. இலக்கணக் குறிப்புகள்
15. பாட்டு
16. பழமொழி, விடுகவி, முதலியன

இம்மாதிரி வேறுபாடுள்ள பொருள் அடக்கத்தினாலே வார்த்தைகள் வித்தியாசப்பட நேரிடுகிறது.

### பத்திரிகையிலுள்ள சில வார்த்தைகள்

யானே ஒருதரம் சில பிள்ளைகளின் உதவியைக் கொண்டு 5, 6 நாள் தினசரிப்பத்திரிகைகளின் முக்கியமான விஷயங்களிலுள்ள வார்த்தைகளைச் சேர்க்கலாயினேன்.

### A சில பதங்கள்

1. அபிலாஷை
2. அதீதம்
3. அனுஷ்டானம்
4. அபேக்ஷகர்
5. இராஜீயவாதி
6. உபமான்யம்
7. ஊர்ஜிதம்
8. ஒப்பந்தம்
9. குடியேற்றம்
10. கையொப்பம்
11. கோஷ்டியினர்
12. சமஷ்டியினர்
13. சூசிகை
14. சூத்திரம்
15. செல்வத்துறை
16. தஸ்தா வேஜி
17. துணைக்கருவி
18. தொண்டர்
19. நிபுணத்துவம்
20. நிர்மாண வேலை
21. பகிஷ்காரம்
22. பிரேரணை
23. மசோதா
24. வல்லரசு
25. விக்ஞாபனம்
26. ஷரத்து
27. ஜனப்பிரதிநிதி

### B. இங்கிலீஷ் வார்த்தைகளையே தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்ட பதங்கள்

1. அஸெஸர்
2. அட்வோகேட்
3. அலவன்ஸ்
4. கமிட்டி
5. காங்கிரஸ்
6. காமன்ஸ்

7. கிராண்டு
8. கிரிமினல்
9. சான்ஸ்லர்
10. பப்ளிக்
11. பிராஸிகூடர்
12. மெஜாரிடி
13. ரிசர்வ்
14. ரீஜண்டு
15. ரிபோர்ட்டு
16. ரேடியோ
17. லாரி
18. லிபரல்
29. லீக்
10. லைசென்ஸ்
21. விஸிடர் காலரி
22. ஜூரி
23. ஸ்டாக்
24. ஹோட்டல்

### இராஜாங்க முறை விஷயங்கள், பிள்ளைகளின் மனோபாவம்

பெரும்பாலும் தினசரிப் பத்திரிகைகளில் இராஜாங்க சம்பந்தமான விஷயங்கள் வெளி வருகின்றன. எல்லோருக்கும் இராஜாங்க விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்பது சரியே. ஆனால் அதைப் போதிக்க வேண்டிய முறையும் அவர்களுக்கென்று எழுதப்படும் புஸ்தகங்களும் வேறு. தற்கால புஸ்தகங்களும் முறைகளும் பயன்படா.

சுமார் 30 பிள்ளைகள் படிக்கிற ஒரு வகுப்பில் ஒவ்வொரு வருஷமும் யான் பள்ளிக்கூட பாடங்களைப்பற்றி பிள்ளைகளின் மனோபாவங்களை அறிவதுண்டு. எது மிகப்பிரியம் ? எது வெருப்பைத் தருகிறது ? எது உபயோகம் ? எது உபயோகமில்லாதது ? எது சுலபம் ? எது கடினம் ? என்றுகேட்கிறது வழக்கம். அப்பாடங்களில் சிவிக்ஸ் அல்லது இராஜாங்க முறை என்பது ஒன்று. அதைப்பற்றி பிள்ளைகளின் அபிப்பிராயம் பின்வருமாறு (வயது 9 முதல் 12).

**வருஷம்.**

1931 : 21 பிள்ளைகள் இப்பாடத்தை 5 வது படிக்குக் கீழே தள்ளி விட்டார்கள்.

1932 : 5 பேர் இதை கடின பாடத்தின் முதலில் வைத்தார்கள்.

1933 : 9 பேர் இது கடினமென்றும், 7 பேர் இது விருப்பமில்லாதது என்றும் விடை தந்தனர்.

1934 : 8 பேர் "உபயோகமில்லை" என்றும், 8 பேர் "கடினபாடம்" என்றும் பதிலளித்தனர்.

1935 : ஐந்து பேர் மிகக் கடினம் என்று எழுதினர்.

1936 : 6 பேர் பிரயோஜன மற்றது<br>7 பேர் விருப்ப மில்லாதது<br>6 பேர் கடினம் } என்றும் சொல்லினர்.

ஒரு வருஷம் வாசக புஸ்தகத்திலுள்ள பாடங்களில் எது கடினமானது என்று வினவ "நமது துரைத்தனம்" என்ற பாட விஷயங்களே கடினம் எனச்சொல்லினர். ஆகவே குழந்தைகளின் மனோபாவப்படி இப்பாடத்தைப் பற்றி அவர்களுக்குப் பிடித்தம் இருக்கிறதாக நன்கு



தெரியவில்லை. இப்பாடங்களிலுள்ள விஷயங்களும் பதங்களும் அவர்களின் வயது, அறிவு இவைகளுக்கு அதிகமாகவே காணப்படுகின்றன. இவைகள் நேர் பார்வையிலும், தினசரி நடவடிக்கையிலும், அனுபவத்திலும் மேன்மேலும் அறிந்து கொள்ளக்கூடியவையா யிருக்கின்றன. வயதான பெரியவர்களுக்கே இவை கடினமான விஷயங்களாக விருப்பின் குழந்தைகளைப் பற்றி அதிகம் சொல்லுவதற்கில்லை. உதாரணமாக நாணய நிர்வாகம், பொருளாதார விஷயங்கள், ராஜீய விஷயங்கள் இவைகளைப் பற்றின குறிப்புகளும், பத்திரிகாசிரியர் தலையங்கங்களும் பலபேருக்கு எளிதில் புலப்படா. மேலே சொன்ன பாடத்தைப்பற்றக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டிய விஷயங்களையும் முறைகளையும் பற்றி ஆராய்ச்சி செய்வது அவசியம். நேரில்சென்று காணுதல், படங்களைக் கொண்டு விளக்குதல், நாடக ரூபமாய் விளக்குதல் போன்ற முறைகள் எவ்வாறு பயன்படும் என்றும் யோசிக்கவேண்டும்.

### தினசரிப்பத்திரிகையைப் படிக்கத் தூண்டுதல் அவசியமே.

இவ்வளவு தூரம் விஸ்தரித்து எழுதினதிலிருந்து யான் தினசரிப் பத்திரிகையைக் குழந்தைகள் படிப்பதற்கு விரோதம் என்று கருதப்படாது. ஆரம்பப்பள்ளிக்கூட ஆரம்பவகுப்பு முதற்கொண்டே தினசரிப் பத்திரிகை படிப்பதற்கேற்ற ஒரு தகுந்த சாதனம் என்றே கருதுதல் வேண்டும். பெரியவனாகப் போகிற காலத்தில் பாஷாபி விருத்திக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதிலும் முக்கிய சாதனங்களாக விருப்பது (1) தினசரிப்பத்திரிகை, (2) புத்தகசாலை. ஆயினும் வகுப்பு, குழந்தைகளின் வயது, குழந்தைகளின் பாஷாபிவிருத்தி இவைகளுக்குத் தக்க பிரகாரம் படிக்கவேண்டிய விஷயங்களை வகுத்து எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்றே கருதுகிறேன்.

1. தினசரிப் பத்திரிகையிலுள்ள படங்களை ஒரு அட்டையில் தொங்கவிட்டுப் பல பிள்ளைகள் இவற்றைப் பார்க்கவும் படிக்கவும் செய்வது அவசியம்.

2. செப்டம்பர் மாத "பாலர் கல்வி"யில் கண்டபிரகாரம் உபாத்தியாயர்களே ஒரு கையெழுத்துப் பத்திரிகை தயார் செய்வது அவசியம்.

3. தினசரிப் பத்திரிகையிலுள்ள சில விஷயங்களை வகுப்புக் குழந்தைகளுக்குப் படித்துக் காட்டுவது அவசியம் :—

#### A. சுதேசமித்திரன்

—சென்னை, ஜன. 30உ

1. இன்று காலை ஒரு வாடகை மோட்டார் வண்டியானது ஒரு மாட்டு வண்டிமீது பெரம்பூர் ஹைரோட்டில் மோதியது. அப்பொழுது மாட்டு வண்டியின் கட்டையானது மோட்டாரில் உட்கார்ந்

திருந்த ஒரு ஆங்கிலோ இந்தியர்மீது பாய்ந்தது. அதனால் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. இவரை உடனே ஜனரல் ஆஸ்பத்திரிக்கு தூக்கி வந்தனர். போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

B. கராச்சி. ஜன. 2—

இந்திய ' சமஸ்தான மொன்றில் அந்த சமஸ்தான அதிபதி சிங்கங்களுக்கு ஆட்டுக்குட்டிகளை உயிருடன் இரையாகக் கொடுத்ததைக் கண்டு ஜார்ஜ் மன்னர் அந்த ஆட்டுக்குட்டிகளை வெளியே எடுக்கச் சொல்லி அவற்றிற்கு உயிர்ப்பிச்சை கொடுத்ததாகவும் பிறகு அவற்றில் ஒன்றின் சம்ரக்ஷணத்துக்குப் பென்ஷன் கொடுக்க உத்தரவிட்டதாகவும் அவர் ஒருசம்பவத்தை வெளிப்படுத்தினர்.

C. ஸ்ரீமான் பி. கே. கோஷ் கை விலங்குகளுடன்
71½-மணிநேரம் நீந்தினர்

**ஜனங்களின் குதூகலம்**

கல்கத்தா, ஜுலை. 27—

ஸ்ரீமான் பி, கே, கோஷ் கல்கத்தா கார்ன்வாலிஸ் சதுக்கத்திலுள்ள குளத்தில் வெள்ளிக்கிழமை காலை 7-12 மணிக்கு நீந்த இறங்கினர். கல்கத்தா கார்ப்பொரேஷனின் பிரதம நிர்வாகியான ஸ்ரீமான் ஜே. ஸி. முகர்ஜி அவருக்குக் கைவிலங்குகளைப் பூட்டினர். கல்கத்தா மேயரும் இதர பிரமுகர்களும் வந்திருந்தனர். மத்திய நீச்சுச்சங்கம் இவர் நீந்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தது. நேற்றிரவு 10-12 மணிக்கு அவர் 63-மணி நேரத்தைப்பூர்த்தி செய்தார். கார்ப்பொரேஷன் பிரதம நிர்வாகியான ஸ்ரீமான் முகர்ஜி ஒரு படகில் சென்று அவருக்கு மாலை போட்டு அவரது இலக்ஷியம் சித்தியாகி விட்டதைத் தெரிவித்தார். அப்போது வெடிகள் வெடி தீர்க்கப்பட்டன.

D. சிறு குழந்தைகள்கூட பெரிய எழுத்துகளில் எழுதப்பட்ட சில சுலபமான விஷயங்களைப் படிப்பது பொருந்தும். மற்றும் காலநிலை, கலியாணம், நகரச்செய்தி, வெளியூர் வர்த்தமானம், ரயில் மோட்டார் வண்டி, நெருப்பு விபத்துகள், பள்ளிக்கூடக் கொண்டாட்டக் குறிப்புகள் முதலியவை ஏற்றதாகும். இவைகளைக் கத்தரித்து பழுப்புக்காகிதங்களில் ஒட்டிக்கொள்ளலாம்.

## எதைப் பார்க்கினும் அதைப்படித்தறிய ஆசை உண்டு பண்ணுதல்

விளம்பரம், டிராமா நோட்டீஸ்கள். சுகாதாரக் கொண்டாட்ட அறிக்கைகள், விவசாய இலாக பிரசுரங்கள், ரெயில்வே கம்பெனியார் வெளியிடுகைள், ஆங்காங்கு ஜனங்கள் கூடுமிடங்களில் ஒட்டியிருக்கும் விளம்பரங்கள், கையெழுத்துக் கடிதங்கள் இவைகளை வாசிக்க அவா உண்டு பண்ணுதல் அவசியம்.



## பழங்கதைகளைப் படித்துக்கேட்டலும் படித்துப் பார்த்தலும்

நாம் தெருக்களில் போய்க்கொண்டிருக்கிற காலத்தில் கிராமத்து ஜனங்கள் என்ன புஸ்தகங்கள் படித்து வருகிறார்கள் என்பதைக் கவனித்திருக்கலாம். ஜுலை மாத சஞ்சிகையில் இவற்றைப்பற்றி சில குறிப்புகள் எழுதி யிருந்தேன். அங்கு சொல்லப்பட்டவைகள் கதைப் பாடல்கள் ஆகும். பாடல்களைத் தவிர வசன நடையில் எழுதப்பட்ட புஸ்தகங்கள் பல உள.

| | |
|---|---|
| 1. விக்கிரமாதித்தன் கதை | 8. இராமாயணம் |
| 2. நான்குமந்திரி கதை | 9. பாரதம் |
| 3. பன்னிரண்டு மந்திரி கதை | 10. பாகவதம் |
| 4. தென்னாலி ராமன் கதை | 11. பக்த விஜயம் |
| 5. மயில் இராவணன் கதை | 12. ஸ்காந்தம் |
| 6. சதகண்ட ராவணன் கதை | 13. விநாயக புராணம் |
| 7. ஏகாதசி விரத மகிமை | 14. விஷ்ணு புராணம |

ஒருதொழிலாளி தன் தொழிலிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறான். அங்கு சுற்றி சிலபேர் உட்கார்ந்திருக்கிறார்கள். படிக்கத் தெரிந்த ஒருவன் மேலே சொல்லப்பட்ட புஸ்தகங்களில் ஒன்றைப் படிக்கப் பாக்கியுள்ளோர் கதைக்கேட்டுக் காலத்தைக் கழிக்கிறார்கள். இது பழைய சம்பிரதாயம். இக்காலமும் இந்த அனுஷ்டானம் இருந்து வருகிறதை நான் கண்டு வருகிறேன். பள்ளிக்கூடத்தில் இம்மாதிரி சம்பவங்கள் பல இருக்க வேண்டும்.

**சில உதாரணங்கள் :** I. பக்தவிஜயம் இராமதாஸ் சரித்திரம்

ஏ! ராமச்சந்திரா! உனக்கு வைரமணி இழைத்த மணி மகுடம் செய்து சாத்தினேனே, உன் பிதாவாகிய தசரதர் உனக்கென்று செய்து தன் கரத்தால் உனக்கு ராஜ்யாபிஷேகம் பண்ணி உன் தலையில் அவர் சூட்டிய முடியா? தானிஷாவின் ஆசூருக்குச் சேரவேண்டிய கஜானா பணத்திலிருந்து பதினாயிர விராகன் என்று நான் செலவிட்டு செய்த முடியன்றோ நீ உன் தலையில் தரித்துக்கொண்டு அழகு பார்க்கிறாய்? தானிஷாவின் கடனிற்காக நான் சிறைப்பட்டிருக்கும்போது அந்தப் பணத்தை நீ கொண்டுவந்து கட்டவேண்டாமோ? மரகத பச்சை இழைத்த பாஜிபந்து ஐயாயிர விராகனில் செய்து தோள்களில் மாட்டிக்கொண்டிருக்கிறாயே அது உனது பாட்டனான உத்தர கோசல ராகவன் பண்ணிக்கொடுத்ததென்று நினைத்திருக்கிறாயா? கழுத்திற்கு வைர மிழைத்த கண்ட பூஷணம் இருபதினாயிரம் விராகனில் செய்து போட்டேனே? அதை உன் மாமனான ஜனகன் போட்டதென்று மதித்திருக்கிறாயா? உனது தேவியாகிய சீதைக்கும், இளவீரருக்கும் என்று புதிது புதிதாக நகைகளைச் செய்து அணிந்து உலகம் நகைக்க சிறைபுகுந்தேனே? நீ நமக்கு வந்த

தென்னவென்றிருந்தால், என்கதி என்ன ? இப்படியே சிறையில் அழுந்தி உயிரை விடுவதா ? இது உனக்கு சம்மதமா ? வருஷம் பன்னிரண்டாயிற்றே ? பன்னிரண்டு வருஷம் வீட்டைவிட்டுப்போய் விட்டால், அதற்கு பிராயசித்தம் சொல்லியிருக்கிறதே ? உன்னை சேவித்துப் பன்னிரண்டு வருஷமாயிற்றே ? உனது சன்னதிவந்து உன்னைச்சேவை செய்யாத ஜென்ம மிருந்தென்ன ?

## 2. விக்ரமாதித்தன் கதை

இப்படி இருக்கின்ற நாளையிலே ஒருநாள் முதன் மந்திரியாகிய நீதி வாக்கியனை அழைத்து நாம் வேட்டை மார்க்கமாய்ப் போகவேண்டும். ஆனபடியால், நம்முடைய ரத, கஜ, துரகபதாதியாகிய நால்வகைச் சேனைகளையும் கூடப் பிரயாணப்படும்படியாக சொல்லுமென்று இராஜன் மந்திரிக்குச் சொல்ல, அப்போது நீதி வாக்கிய மந்திரி அப்படியே நால்வகைச் சேனைகளை எல்லாம் பிரயாணப்படுத்த போஜ மகாராஜன் தன்னுடைய ஆடை ஆபரண அலங்கிருதனாய் ஆயுத முஸ்தீப்புடனே நால்வகைச் சேனைகள் மந்திரி பிரதானிகள் சூழப் புறப்பட்டு காடு, மலை, வனம், வனாந்திரமும் கடந்து ஆரண்ணியமான காட்டிற் சென்று, காடி புலி சிங்கம் முதலிய மிருகங்களை வேட்டையாடி விடாய்கொண்டு, சதுரங்க சேனையுடனே தனது நகரத்தை நோக்கிவரும் மார்க்கத்தில் சரவணப்பட்டனென்கிற ஒரு பிராமணன் கம்புக்கொல்லைக்குக் காவலாகப் பரண் கட்டிக்கொண்டு அதன் மேற்காவலிருந்தான். அப்படியிருக்கையில் போஜராஜனும் சேனைகளுங்கூடி கொல்லையருகே வருகிறபொழுது அக்கொல்லையைக் காத்துக் கொண்டிருக்கிற பிராமணன் பரண்மேலிருந்து வருகின்ற சேனைகளைப் பார்த்துச் சொல்லுவான். "ஓகோ 'சேனைகளே ! நீங்கள் மெத்தவும் பசியாய்த் தண்ணீர் விடாய்ப்பட்டுப் போகின்றீரே, இதோ என் கம்புக்கொல்லையில் கம்புக் கதிரிருக்கின்றது. அதைப் பறித்துத் தின்னுங்கள். அது வேண்டாமென்றால் வெள்ளரிக்காய் விதைத்திருக்கிறேன் அதையாவது தின்று பசியாறிப் போங்கள்." என்று பிராமணன் சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்ட போஜராஜனும் சேனைகளும் நல்லதென்று கம்புக்கொல்லையிற் புகுந்து கம்புக் கதிர்களையும் வெள்ளரிக்காயையும் பறித்துத்தின்றார்கள்.

### பழமொழிகள்

பழங் கதைகள் படிக்கிற காலத்தில் பழமொழிகள் பல கலந்துவருகின்றன. பழமொழிகள் மிக ரஸம் பொருந்தியவை. பெரிய கருத்துக்களை ஒரு சிறு வாக்கியத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பாஷையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. ஒவ்வொரு பழமொழி ஏற்பட்டதற்குக் காரணமான சில கதைககள் நமது நாட்டில் உலாவிவருகின்றன. அக்கதைகளை நாம் சேர்ப்பது பொருந்தும். பழமொழிகளை ஒருவாறு படமமைத்துக் காட்டுவது நலமாயிருக்கும். இங்கு சில பழமொழிகள் படங்களினால் காட்டப்பட்டிருப்பதைக் கவனிக்க.




JL
T15m21, N361A
N36.1.8-9
147640

பழமொழிகள், பழமொழிக் கதைகள் இவைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாதவை. அந்த உருசியை பிள்ளைகள் பருகுதல் வேண்டும். சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் என்ற விதி பழமொழிகளில் நன்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

## பாடபுத்தகமும் கற்றுக்கோடுக்கப்பட வேண்டிய விஷயங்களும்

பாட புஸ்தகத்தின் பொருளடக்கத்தைக் கவனிக்க நமக்கு அதில் எவ்விஷயங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றனவென்று இதன் ஆரம்பத்தில் ஒருவாறு குறிப்பிட்டேன். பலர் இவற்றையே சாதாரணமாய்க் கையாண்டு வருகிறார்கள். எனக்கு வேறு ஒரு விஷயம் தோன்றிற்று. அதாவது குழந்தைகள் எவ்வித விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள்? அவர்கள் மனதில் இருக்கும் சந்தேகங்கள் எவை? ஆங்காங்கு அவர்கள் பற்பல விஷயங்களைப் பார்க்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்கிறார்கள். சிற்சில சமயம் அவற்றைப்பற்றின எண்ணம் அவர்கள் மனதில் பதிகிறது. ஏன் இப்படி? எதற்காக அப்படி? யாரால் இது ஏற்பட்டது? எப்பொழுது இது தெரியவந்தது? இதற்கு முன்னால் எப்படியிருந்தது என்று எண்ணுகிறார்கள். ஆனால் பயந்த சுபாவமுள்ளவர்களும் பயத்தினாலே வெருண்டுகிடக்கின்ற குழந்தைகளும் இதைப்பற்றி யாரிடமும் சொல்லுகிறதில்லை. கேட்கிறதில்லை. தப்பித்தவறி சிலர் கேட்பார்கள். மனதிலுள்ள எண்ணங்களையும் கருத்துக்களையும் வெகு சீக்கிரத்தில் வெளியிட விரும்புகிறதில்லை. சந்தேகம், பயம், பிறர் என்ன சொல்லுவார்களோ என்ற எண்ணம், வெட்கம், தன்னை ஒன்றும் தெரியாதவர் என்று நினைத்துவிடுவார்களோ என்ற ஒரு பீதி, இவை நம்மை எண்ணங்களை வெளியிடக்கூடாமல் பலவந்தப்படுத்துகின்றன. சில சமயங்களில் வெறுக்கத்தக்க எண்ணங்களும் எழும்புகின்றன. பொதுவாக அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப்பற்றி நமது எண்ணங்களை வெளியிடுதல் பொருந்தும்.

இங்கிலாந்தில் ஆர்தர்மீ என்ற பெரியார் குழந்தைகள் என்ன கேள்விகள் கேட்கிறார்கள் என்று ஆராய்ந்து அக்கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதியிருக்கிறார்கள். இக்கேள்விகளுக்குப் பதிலை அவர் தமது குழந்தைகளுக்கேற்ற வாரப்பத்திரிகை, "மை மாகஸீன்" என்ற மாதப் பத்திரிகை "புக் ஆப் நாலெட்ஜ்" என்ற புஸ்தகங்களில் வெளியிட்டிருக்கிறார்.

நமது குழந்தைகள் எதைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள் என்று அறிய அவாக்கொண்டு நான் சென்ற 3, 4 வருஷங்களாகப் பிரயத்தனம் செய்தேன். பொதுவாகச் சொல்லுமிடத்து அடியிற் கண்ட மாதிரிக் கேள்விகள் கிடைக்கலாயின.



I. எப்படிச் செய்யப்படுகிறது.

காகிதம், ரெயில்வண்டி. பென்சில், பேனா, சைகிள். கண்ணாடி, நெருப்புப்பெட்டி, சிலேட்டுப் பென்சல், சாக், ரப்பர், துணி.

II. எங்கிருந்து கிடைக்கிறது?

கருங்கல், ஐஸ்.

III. எப்படி உண்டாயிற்று

கடல், மின்சார சக்தி, ஏரோப்ளேன், மலைகள்.

IV. ஏன்?

1. சில பேருக்குப் பைத்தியம் பிடிக்கிறது.
2. கோழி ரொம்பதூரம் பறக்கிறதில்லை. வாத்து பறக்கிறதில்லை.
3. சூரியனைப்பார்த்துவிட்டு கீழே பார்த்தால் மஞ்சள் நிறமா
4. காற்று இல்லாவிட்டால் நாம் இருக்கமாட்டோம்[யிருக்கிறது.
5. ஜனங்கள் வாயில்லாப் பிராணிகளைத் தின்கிறாகள்.
6. மழை காலங்களில் திடீரென்று அதிக சப்தம் ஏற்படுகிறது?
7. அம்மை குத்திக்கொள்ள வேண்டும்?

V. எப்படி?

1. சில விதைகள் போட்டால் அவை முளைகிறதே.
2. முன் காலத்தில் போக்கு வரவு நடந்தது.
3. மழை பெய்கிறது.
4. யானைக்கால் வருகிறது.
5. புஸ்தகம் செய்யப்படுகிறது.
6. நெருப்பு கண்டு பிடித்தார்கள்.

VI. யார்?

அனேக மதங்களை உண்டாக்கினது.
அனேக இயந்திரங்களைக் கண்டு பிடித்தது.
சோப்பு முதன் முதலில் கண்டு பிடித்தது.
கப்பல் முதன் முதலில் செய்தது.

VII. எதற்காக?

கைகாட்டி மரம்
போலீஸ் ஸ்டேஷன்
ரயில்வே ஸ்டேஷன்.

VIII. என்றால் என்ன?

ரிஜிஸ்தர் செய்வது—
கொழுப்பு.

### நான் கண்டறிந்த ஓர் ஆச்சரியம்

மேலே சொல்லப்பட்ட கேள்விகள் நமது தற்போதைய வாழ்நாள் சம்பந்தமாய் இருக்கின்றன. ஆர்தர்மீ எழுதின கேள்விகளும் இதே மாதிரிதான் காணப்படுகின்றன. ஆயினும் நான் ஆச்சரியத்தைக் காணுற்றேன். அதிலிருந்து அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். நான் எவ்வளவு அறிவில் குறைந்தவன் என்று கண்டேன். எந்தக் கேள்விகள் என்னை இப்படி பிரமிக்கச் செய்தன ?

### உதாரணகள்

1. கடவுள் இருப்பது நமக்கு ஏன் தெரியவில்லை.
2. நம்மைப்படைத்தவர் யார் ?
3. நாம் எப்படி ஜீவித்து இருக்கிறோம் ?
4. உலகத்தில் ஜனங்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள் ?
5. நான் முன் ஜன்மத்தில் என்னவாக இருந்தேன் ?
6. நமக்கு யார் உயிர் கொடுக்கிறார் ?
7. ஏன் கடவுளை வணங்கவேண்டும் ?
8. ஏன் மனிதர்கள் தர்மம் அளிக்கிறார்கள் ? தர்மம் அளித்தால் என்ன பயன் ?
9. நமக்கு ஏன் தேவேந்திரப் பதவி கிடைக்கவில்லை.
10. மந்திரம், பஞ்சபூதம் என்றால் என்ன ?
11. கடவுள் எப்படிப்பட்டவர் ?
12. ஏன் நமக்கு இறப்பு, பிறப்பு முதலியவைகள் உண்டாகின்றன ?

இவைகளைப்பற்றி அறிந்துகொள்ள யான் மற்றும் அதிகம்படிக்க வேண்டும், யோஜிக்கவேண்டும், பிறருக்குச்சொல்லும் திறமையைப் பெற வேண்டும். அதுவரையில் நான் அறியாதவனே ஆயினும் இம்மாதிரி கேள்விகள் குழந்தைகள் மனதிலும் எழும்புகின்றனவே, என்ன காரணம்? கீழ் தேசங்களில் இகலோகத்தைவிட பரலோக விவகாரங்களை அறிய ஓர் உயர்ந்த அறிவு பிறவியிலேயே ஏற்படுகிறது. பெரியோர்கள் இதைப் பற்றிப் பேசுவதும் குழந்தைகள் அவற்றைக்கேட்டு சிந்திப்பதும் இயற்கையாகவே இருக்கின்றன. துருவன், பிரகலாதன் திருஞான சம்பந்தர் முதலானோர் பிறந்த நாட்டில் அவர்களது அறிவில் ஆயிரத்தில் ஒரு பாகமாவது நமது குழந்தைகளுக்கு இந்நாளும் இருக்கிறதே, அது ஒரு விசேஷந்தான். ஆத்ம விசாரத்துடன் ஆத்மா விசாரணையும் கலந்துள்ளது. மேலே சொல்லப்பட்ட கேள்விகளுக்கும் இகலோக சம்பந்தமான கேள்விகளுக்கு முக்கியமாகவும் நாம் விடையளிக்க வேண்டியதில் நாம் உபயோகிக்க வேண்டிய பாஷையைப்பற்றி ஆராய்ச்சி செய்வது அவசியம்.

(தொடரும்)

# எதிர்கால ஆரம்பப் பாடசாலை*

ஆரம்பக் கல்வியின் சம்பந்தமாக ஐந்துபேர் முக்கியமானவர்கள். அவர்கள் உபாத்தியார், மாணவன், பெற்றோர், பாடசாலையை நடத்தும் காரியஸ்தர் (School Manager) கல்வியிலாகாமேல் விசாரணைக்காரர் (D. E. O.) என்பவர்களாம். இவர்களுள் கல்வியில் மிகவும் உத்தரவாதமான பொருப்பமைந்த பதவியை வகிப்பவர் உபாத்தியாயரே. ஆதலால் அவரே அதிக முக்கியமானவர் என்றாலும் முன் சொன்ன ஐந்து பேருடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் தகுந்த கல்வி நிலைமையை ஏற்படுத்த முடியாது என்பதை அறியவேண்டும். இந்த ஐந்துபேர்க்குள் உண்டாகும் ஒற்றுமைக் குறைவே கல்வி அபிவிருத்தியின் தாமதத்திற்கு மகத்தான காரணமாகக் கூடியதாயிருக்கிறது.

ஆனால் ஒரு புதிய காலம் வந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சமீபத்தில் தான் ஏறக்குறைய மூந்நூறு ஆரம்ப ஆசிரியர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று கூடிற்று. அவ்வாசிரியர்களின் மேல் விசாரணைக்காரர்களும் அக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தங்கள் ஜில்லாக்களில் ஆரம்பக் கல்விக்கு உத்தரவாதிகளான முக்ய உத்யோகஸ்தர்களும் அங்கு விஜயஞ் செய்திருந்தனர். குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு அழைப்பதற்கும் அப்பாடசாலைகளை அக்குழந்தைகள் அதிகமாகப் பிரியப்படக்கூடியவைகளாக்குவதற்கும் பெரும் பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன. முக்கியமாகப் பெற்றோர்களையும் பள்ளிக்கூட விஷயத்தில் பற்றுடையவர்களாக்குவதற்குரிய எல்லா எத்தனங்களும் செய்யப்படுகின்றன. இவ்வருஷம் கலவிவாரக்கொண்டாட்டம் மறுபடியும் நடத்தப்பட்டது. கல்வியில் உரிமை உடையவர்களாகிய அந்த ஐந்துபேரையும் ஒன்று கூட்டுவதற்கும், அவர்களுடைய 'அன்யோன்யமான' ஆலோசனைகளால் கல்விக்குரிய நிலைமையை அதிகத் திறமை வாய்ந்த தாக்குதற்கும், ஏற்பாடுகள் ஆக்கப்படுகின்றன.

நான் முன் சொன்னமாதிரி இந்த நடைமுறையில் ஆசிரியர்களாகிய நீங்கள் அதிக அவசியமான அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள் ஏனெனில் நீங்கள் கல்வியில் தனிப்பயிற்சி பெற்றவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் மற்றவர்களைச் சரியான கல்விக்குரிய நோக்கங்களுக்கும் நிலைமைகளுக்கும் வழிகாட்டி நடத்தும் சக்தியுடையவர்களாக இருத்தல்வேண்டும். அக்காரணம்பற்றியே எதிர்காலத்தில் வரக்கூடியதெனக் கருதத் தகுந்த அவ்வாரம்பக் கலா நிலையங்கள் எவ்விதமாக இருக்கும் என யான் யோசிக்கிறேன் என்பதையும், இங்கு சொல்லப்பட்ட அப்பாடசாலையை

* Rev. M. G. Kuoet அவர்கள் ஆங்கில ப்ரசங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு.

அமைப்பதில் ஊக்கம் உடையவர்களின் உதவியை நீங்கள் பெறுதற்கு வேண்டியவற்றை இப்பொழுதே ஆரம்பிக்கும்படி ஆசிரியர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

முதலாவதாக, இனிவரும் பாடசாலை ஆசிரியர் கற்பிப்பதற்கு ஆசைகொள்ளும் இடமாக இருக்கும். ஏனெனில் அவர் அதை அவவாறு செய்வதற்குத் தகுதியுடையவராக இருப்பார். அவ்வாசிரியர் ஒவ்வொரு விதத்திலும் தக்க பயிற்சி பெற்றிருப்பார். தாம் செய்யும் தொழிலை நடத்துதற்குரிய விசேஷ சக்தியும் தகுதியும் உடையவராக யிருப்பார். பிழைப்புக் கென்றுமட்டும் உபாத்திமைத் தொழில் புரிய விரும்புவோர்க்கு இனி இடமில்லை. இனி வரும் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் குழந்தைகளை நேசிப்பதால் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதிலேயே ஆசை அடைவார். ஆயினும், பிள்ளைகளிடம் பெண்கள் பிரியம் காட்டுவது போல் ஆண்கள் காட்டுவதில்லை. ஆதலால் நான் நினைக்கிறபடி எதிர்காலத்திய ஆரம்பப் பள்ளிக்கூடம் தற்போதிருப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகிய பெண் உபாத்திமார்களை உடையதாயிருத்தல்வேண்டும். பாலர்களரி, முதல் அல்லது இரண்டாம் வகுப்புகளில் உபாத்தினிகள்தான் இருப்பார்கள். கூடியவரையில் மற்றைய வகுப்புகளுக்கும் அவர்களையே அமைக்கவேண்டும்.

அல்லாமலும் இனிமேல் ஆரம்ப ஆசிரியர்கள் நேர்த்தியான வகுப்பறைகளும் கற்பிப்பதற்குரிய உபகரணங்களும் பெற்றிருப்பார்கள். ஆதலால் போதிப்பதற்குச் சந்தோஷப்படுவார்கள். பாடசாலைகள் தூசு தும்புகளுக்கும் சந்தடிகளுக்கும் நெடுந்தூரம் விலகிச் சுற்றிலும் பூந்தோட்டங்களும் தகுந்த மரங்களும் உடையனவாவிருக்கும்.

இவைமட்டும் அல்லாமல் இனி அவ்வுபாத்திமார்களுக்குத் தற்போதுள்ள கவலைகளில் பெரும்பாலும் இல்லாமலிருக்கும். சிராக வாழ்வதற்குத் தகுதியான சம்பளத்தை ஆசிரியர் பெறுவார். அச்சம்பளம் கிரமமான காலங்களில் எப்பொழுதும கிடைக்கும். அதனால் அவர்க்குள்ள பலவிதமான பணக்கவலைகள் தொலையும்.

இரண்டாவதாக இனிமேல் உண்டாகக்கூடிய ஆரம்பப் பாடசாலைகள் மாணவர்கள் விருப்பத்துடன் வரக்கூடியவைகளாக இருக்கும். அங்கு மிகுதியான கட்டுமுட்டுச் சாமான்கள் இல்லாதபோதிலும் அதே காரணத்திற்காகவே அது அதிகத்திருத்தமான பள்ளிக்கூடமாகும். மாணவன் ஏன் பாடசாலைக்கு வரும் விருப்பமுடையனுவான் என்றால் அவன் அவ்விடத்தில் அதிக சுவதந்திரமுடையவனுக இருப்பான். அங்கு எங்கும் தாராளமாகச் சஞ்சரிப்பான். தன் வகுப்பறையிலுள்ள சகோதர சகோதரிகளுடன் சம்பாஷிக்கும் சந்தர்ப்பமுடையவனுவான். அங்குள்ள அழகிய படங்களையும் அலங்காரமான வர்ணங்களையும் கண்டு ஆனந்திப்பான். அவனுக்கு அங்குக் கூடுகளில் உள்ள சிறிய பறவைகள்



பாடுவதைக்கேட்க மகிழ்ச்சியாயிருக்கும். அங்குள்ள தோட்டத்திற்குள் செல்லவும் பயிராவதற்குத் தானே ஒத்தாசை செய்த அழகிய புஷ்பங்களைக் காணவும் அவனுக்கு ஆனந்தம் பெருகும். பள்ளிக்கூடத்தில் மாணவனுக்குரிய பலவித விளையாட்டுகள் இருக்கும். உண்மையில் அவன் எந்நேரமும் விளையாடிக்கொண்டிருப்பதாகவே எண்ணுவான். தான் விளையாடிக்கொண்டே எவ்வளவு கற்றுக்கொண்டான் என்பதை அவன் நாளடவில் அறியும்போது ஆச்சரியம் அடைவான். இவை எல்லாவற்றிலும் மேலாக அம்மாணவன் தன் ஆசிரியர் தன்னை நேசிக்கிறார் என்றும், அவர் செய்யும் ஒவவொரு காரியமும் தன் ஒத்தாசையைப் பொருத்ததென்றும், அறிந்து பள்ளிக்கூடம் வரவிரும்புவான். அப்பேர்ப்பட்ட பாடசாலைகளிலிருந்து மாணவர்களை விலக்கிவைக்க முடியாது.

மூன்றுவதாக, இனி யுண்டாகும் பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைப்பதற்குப் பெற்றோர்களும் விருப்பங்கொள்ளுவார்கள். அவர்கள் தற்காலத்தில் ஏதேனும் வேலைசெய்து ஒருவாரத்தில் சில அணுப் பணத்தைச் சம்பாதிக்கும்படி தம் பிள்ளைகளை வீட்டில் நிறுத்திக்கொள்கிறார்கள். பிள்ளைகள் அணு வருமானமுடையவர்களாக இருப்பதால் பெற்றோர் ரூபாய்கள் சம்பாதிப்பதை இழக்கிறார்கள் என்பதை இனி அவர்கள் அறிவார்கள். பிறகு பிள்ளைகள் வேலை செய்வதை நிறுத்திப்பெற்றோர்கள் மிகுதியாகச் சம்பாதிப்பார்கள். பிள்ளைகளும் அதிகமாகப் படிக்க ஆரம்பிப்பார்கள். ஒவ்வொரு தேசமும் இதனைச் சோதனைச் செய்து இதன் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறது. இனிமேல் தாய் தந்தையர்கள் தம்மக்கள் போக விரும்புவதால் அவர்களைப் பள்ளிக்கூடம் அனுப்புவார்கள். பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தினந்தோறும் பள்ளிக்கூடம் போகும்படி அடித்து விரட்டிவிட்ட சங்கதி இனி இருக்காது. பெற்றோர்கள் உபாத்திமார்கள் தங்களைச் சந்தித்துத் தம் பிள்ளைகளின் தன்மைகளைப்பற்றியும் பள்ளிக்கூடத்தில் அவர்கள் திருத்தமாக அபிவிருத்தி அடையவேண்டியதற்கு இவர்கள் செய்யவேண்டிய உதவிகளைக் குறித்தும் தம்மோடு பேச, மகிழ்ச்சி அடைவார்கள். பெற்றோர் தம் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பச் சந்தோஷப்படுவது மல்லாமல், அவர்கள் அங்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும் குடும்பத்திற்கு ஒத்தாசை செய்வதற்குரிய விஷயங்களைக் கற்றுக் கொண்டிருப்பார்கள் என்று மாலையில் அவர்களுடைய வருகையிலும் மகிழ்ச்சியடைவார்கள். இன்னும தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள பெற்றோர்கள் தமது குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொண்டவற்றைத் தங்களுக்குப் படித்துக்காட்டவும், அங்கு நடந்த விஷயங்களைச் சொல்லவும் கேட்டு, ஆனந்தம் அடைவார்கள். தங்கள் விட்டையும் சுற்றுப்புறங்களையும் அதிக சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ளத் தம்மக்கள் உதவி செய்வதைக்கண்டு இன்பம் அடைவார்கள். சாதாரணமாகச் சிறுவர்கள் கல்வியில் தற்பெருமை

பாராட்டுவதையே கற்றுக்கொள்கிறார்கள். இனியுண்டாகும் பள்ளிக்கூடங்களில் அப்படி நடக்காது. அங்கு மாணவர்கள் தாம் கற்ற கல்வி மூலமாகப் பிறர்க்கு எப்படி பிரயோசனம் உடையவர்களாக வேண்டும் என்பது கற்பிக்கப்படும். அப்படிப்பட்ட பாடசாலைக்குத் தம்மக்களை அனுப்பப் பெற்றோர்கள் மனம் மகிழ்வார்கள்.

நான்காவதாக, எதிர்காலப் பாடசாலைகளில் மானேஜர்களாக வருபவர்கள் அங்குத் தங்கள் பதவியை வகித்துக்கூடுமான வரையில் உதவி செய்யச் சந்தோஷமுடையவர்களாக இருப்பார்கள். சாதாரணப் பள்ளிக்கூட மானேஜர்கள் கல்வியில் ஆழ்ந்த ஊக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றி யோசிக்கப் பிரத்தியேகமான நேரம் அகப்படுவதில்லை. ஆதலால் தற்காலத்தில் ஆசிரியர் ஒருவர் யாதேனும் ஓர் ஆலோசனைக்காகத் தங்களிடம் வரும்போதெல்லாம் அவர் பிள்ளைகளின் நலத்தை எண்ணாமல் தன் சுயநலங் கருதியே தம்மிடம் அதிக உதவிபெற வந்திருப்பதாக அடிக்கடி அஞ்சுகிறார்கள். இனிவர இருக்கும் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு உபாத்தியாயரும் தமது தொழிலில் கைதேர்ந்தவராக இருப்பார். அவ்வாசிரியர் முக்கியமாக மாணவரின் க்ஷேமத்தையே மனதிற் கொண்டு, தம்தொழிலில் தமக்குள்ள பிரியத்தினால் வேலைசெய்கிறார் என்பதை மானேஜர் உடனே அறிந்துகொள்ளும்படியாக உண்மையாக உழைப்பார். அவர் தம் பாடசாலையின் முன்னேற்றத்தைக் குறித்து ஏதேனும் ஒன்றை விண்ணப்பம் பண்ண வரும்போது மானேஜரிடம் பள்ளிக்கூடத்தின் தேவைகளைப்பற்றி தமக்கு யாதொரு சந்தேகமுமில்லாமல் அவற்றைக்குறித்து பூரண அறிவோடு பேசுவார். ஒவ்வொரு சிறிய சீர்திருத்தத்திற்கும் ஆசிரியர் அடிக்கடி தம்மிடம் வரமாட்டார் என்று அவருக்குத்தெரியும். சாமான் முதலியவற்றிற்கு ஆசிரியர் அளவற்ற ஜாபிதா தயாரிக்காமல் உள்ள பொருள்களைத் தக்கபடி உபயோகித்துக் கொள்வார் என்றும், மற்றைய பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்பட்ட பொருள்களில் தமக்கு வேண்டியவற்றைத் தாமே அமைத்துக்கொள்ள வல்லவர் என்றும், மானேஜர் அறிவார். படிப்பதில் ஆர்வமும் உற்சாகமும் உடைய மாணவர்கள் நிரம்பியதும் யாரும் விரும்பக்கூடியதுமாகிய தன் பாடசாலையைக் காட்டிலும் ஒரு மானேஜருக்கு மன மகிழ்ச்சியைத் தரக்கூடியது வேறொன்றுமில்லை. அதுதான் எதிர் கால பள்ளிக்கூடம் எனப்படும். அப்பள்ளிக்கூடத்தில் தான் உபாத்திமார்களும் மானேஜரும் எஜமான், வேலைக்காரர் என்னும் எண்ணம் இல்லாமல், உடன் உழைப்பவர்களும் சிநேகிதர்களுமாக இருப்பார்கள்.

ஐந்தாவது, இன்ஸ்பெக்டர்களும் முற்கூறிய பாடசாலைகளில் மேல் விசாரணைசெய்ய ஆசை யுடையவர்களாவார்கள். ஆசிரியர்களும் தங்கள் பாடசாலை மேற் பார்வைசெய்யப்பட வேண்டுமென்று விரும்புவார்கள். எதிர் காலத்திற்குரிய சில புதிய இன்ஸ்பெக்டர்கள் இப்பொழுதும் இருக்



கிறார்கள். நம்மைக்கெடுக்கக்கூடிய முறையில் குற்றங்கண்டு பிடிக்காமல் நமக்கு உபயோகமுள்ள ஆலோசனைகளைச் சொல்லத்தெரிந்தவரே இன்ஸ்பெக்டர் ஆவார். குற்றங்களைச் சுட்டிக்காட்டவும் அக்குற்றங்கள் நேராத வழிகளைக் கற்பிக்கவும் வல்லவரே இன்ஸ்பெக்டர்: அவர் நேர்த்தியான கல்வியைப் பயிற்றக்கூடிய திறமை பொருந்திய முறைகளைக்காட்டும் நவீன அறிவைக் கையாளுவார். அத்தகைய இன்ஸபெக்டர்களைக் கண்டு ஆசிரியர்கள் அஞ்ச மாட்டார்கள். அம்மாதிரியான இன்ஸ்பெக்டர்கள் கல்வியின் காவற்காரர்கள் அல்ல. ஆனால் அதை அடைதற்குரிய வழிகாட்டிகளாவார்கள். அம்மாதிரியானவர்கள் இக்காலத்திலும் இருக்கிறார்கள். அந்த இன்ஸ்பெக்டர்கள் நல்ல நோக்கத்தை முற்கொண்டு உற்சாகத்துடன் மேற்பார்வை செய்வார்கள். அதுமட்டும் அல்லாமல் அவர்கள் அப்பள்ளிக்கூடங்களுக்குச்சென்று தாங்கள் மேற்பார்வை செய்த அன்றைக் கிருந்ததுபோல் வருஷ முழுவதுமிருக்கும்படி செய்வார்கள். இன்ஸ்பெக்டர் வருகிறார் என்று ஆசிரியர்கள் ஆடம்பரமான ஆடைகளை அணிவதும். குழந்தைகளைச் சுத்தமாக வரும்படி வேண்டிக்கொள்வதும், மாணவர்களைக் குறித்த பாடத்தில் மட்டும் பழக்கிவைப்பதும், பாடசாலை கட்டடத்தை சுத்திசெய்வதும் படங்கள் தயாரிப்பதும், ஆகிய செயல்களைப் பிரத்தியேகமாகச் செய்யமாட்டார்கள். இன்ஸ்பெக்டர் அடிக்கடி எல்லாவற்றையும் மேல் விசாரணை செய்வதற்காகப்போதிய, சில பள்ளிக்கூடங்களை மட்டும் விசாரணையின் கீழ்வைத்திருப்பார். அவர் ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஓர் சிறந்த நண்பராக இருந்து, அவர் எல்லோருடனும் தாராளமாகப் பழகுவார். ஆசிரியர் கல்வி சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான காரியங்களைக் குறித்து ஆலோசனைக்கேட்க அவரிடம் வருவது அவர்க்குப்பிரியம். அவ்வாசிரியர்கள் அவரிடம் நம்பிக்கைகொண்டு நடப்பார்களானால் அவர்களுடைய கஷ்டங்களிலெல்லாம் உதவிசெய்வதற்குத் தயாராக இருப்பார்கள். எதிர்காலப்பள்ளிக்கூடத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கும் என்பது என் எண்ணம். அது இவ்விதமாகத்தான் இருக்கும் என்று என்னால் சொல்லமுடியாது. ஆயினும் அது இப்படித்தான் இருந்தாகவேண்டும் என்பதை யான் அறிவேன். இன்று நாம் ஆசிரியர்களாக ஒன்று கூடியிருக்கின்றோம். இன்ஸ்பெக்டர்களும் மானேஜர்களுங்கூட இருக்கிறார்கள். பிரயோஜனப்படக்கூடிய ஒழுங்கமைந்த நவீன கல்வியை உண்டாக்குதற்குரிய உரிமை உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. துரைத்தனம் தாமதிக்கலாம். பணக்கஷ்டம் நேரலாம். எப்படியானாலும் உங்களில் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற வரை, கல்விக்குரிய நற்காலத்தை விரைவில் வருவிப்பதற்கு, தங்கள் ஊழியத்தைச் செய்வீர்களானால் எதிர்கால இந்தியக்குழந்தைகளின் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதற்காக, இத்தேசம் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கும்.

# முதல் வகுப்பிற்கு தாய் பாஷையை கற்பிக்கும் விதம்

## தமிழ் படிக்க எழுதக் கற்பித்தல்

ஆசிரியர் A. மாரிமுத்து போர்டு பாடசாலை, சேதுவாலை.

### பீடிகை

நமது அனுபவங்களுள் வராத விஷயங்களையும், பிரர் அபிப்பிராயங்களையும் தெரிந்து கொள்ள, வாசிப்பதே அல்லது படிப்பதே முக்கிய மார்க்கம். மானிட அறிவாகிய பொக்கிஷத்தைத் திறக்கும் திறவு கோல் வாசித் தறிவதேயாம். இதை கற்பிப்பது சுலபமல்ல; ஏனெனில், எழுத்துக்களும், வார்த்தைகளும், அவை குறிக்கும் தாத்பரியங்களை எப்பொழுதும் குறிப்பதில்லை. ஒரே எழுத்திற்குப் பல சப்தங்களுண்டு. சில சமயங்களில் ஒரே சப்தத்தைப்பல எழுத்துக்கள் குறிக்கும். சில விடங்களில் எழுத்துக்களுக்குச் சப்தமேயில்லை. ஆரம்பத்தில், இது விஷயமான கஷ்டங்களைப் போக்குவதே நமது முக்கிய எண்ணமாகும்.

### நோக்கம்

A. பிள்ளைகள் தங்கள் தாய்ப்பாஷையாகிய தமிழை சரிவரக் கற்று தங்கள் எண்ணங்களை எடுத்துச் சொல்லல்.

B. மற்றவர் பேசுவதை சந்தேகமும் விபரீதமும் மில்லாமல் நுட்பமாய் எளிதில் அறிந்துகொள்ளல்.

C. தமிழ் பாஷையிலுள்ள புத்தகங்களை தகுந்த விதமாய் பிரயோகித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல்.

இப்படிப்பட்ட பழக்கம் ஆரம்பத்திலிருந்தே ஏற்படவேண்டுமாதலால் ஆரம்ப ஆசிரியர் பிள்ளைகளின் மனோதத்துவத்தை அறிந்து அதற்கு ஏற்றவாறு முறைகளைக் கையாடல் வேண்டும். இளம்பிராயத்தில் சிறுவர்களின் மனோதத்துவம், விஷயங்களைப்பற்றி ஆலோசித்தறிதலில், அதிகமான திறமை பெற்று இராது. வயது முதிர முதிர அந்த சக்திகள் அவர்களுக்கு விருத்தியாகும். ஆகையால் இப்பருவத்தில் மிகவும் கொஞ்சங் கொஞ்சமாக விஷயங்களைப் புகட்ட வேண்டும் அவசரப்பட்டுப் பல விஷயங்களை பிள்ளைகளது மனதில் புகுந்த ஆரம்பித்தால் அவர்கள் ஒன்றையும் அறிந்துகொள்ள மாட்டார்கள். மாணவர்களின் சுபாவ



குணங்களை அறிந்து தக்க முறைகளைக் கையாடி விஷயங்களை அறிவுறுத்தவேண்டும்.

### போதனுமுறை வேண்டும்

நமது தேசத்து குழந்தைகள் ஐந்து வயது வரை வீட்டிலேயே யிருக்கிறார்கள். ஐந்தாம் வயதில் அக்ஷர அப்பியாசம் ஆகிறது. அப்போது பாடசாலைக்கு வருகிறார்கள். பெற்றோர் குழந்தைகளை உபாத்தியாயரிடத்தில் கொண்டு வந்து விடும்போதே 'ஐயா, இக்குழந்தையின் கண்ணைத் திறந்து விடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். இதன் அர்த்தமென்ன? அந்தக் குழந்தை யறிந்து கொள்ளவேண்டியவற்றையெல்லாம் ஆசிரியர்தாமே கற்பிக்கவேண்டுமென்று எண்ணாமல் அவனையே படிப்படியாக ஒவ்வொன்றையும் அறிந்து கொள்வதில் ஊக்க முள்ளவனாகச் செய்யவேண்டும் என்பதே மேற்கூறிய வாக்கியத்தின் அர்த்தமாகும்.

ஆகையால் உபாத்தியாயர் ஓர் குழந்தையைக் கற்பிப்பதாக எடுத்துக் கொண்ட உத்தரவாதத்தைச் சரிவரப் பூர்த்தி செய்யவேண்டுவதற்குத் தகுந்த சிறந்த போதனுமுறைகளைக் கையாள வேண்டுமல்லவா?

### பாஷாஞானம்

தமிழ்மொழியைக் கற்பிப்பதில் நமது நோக்கம் என்ன? பாஷையை நன்றாய் அறியாதபோது மற்றப்பாடங்களைத் தவறன்றிக் கற்றல் கடினமென்பதை உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல யாவருக்கும் தெளிவாகத் தெரிந்த விஷயமன்றோ. ஆதலால் மற்ற எல்லாப் பாடங்களிலும் தெளிவான நுட்பமான ஞானத்தைப் பெறுவதற்கு பாஷா ஞானமே மூலகாரண அடிப்பீடமாகவுளது. இதனால் தான் தமிழ்ப் பாடம் மற்று எல்லாப் பாடங்களை விட மேலானதாக முதன்மையாக எண்ணப்படுகின்றது. சொற்களுக்கும் அவை தெரிவிக்கும் பொருள்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஒவ்வொருவரும் நன்கு கற்கவேண்டும் அங்ஙனம் கற்றால்தான் அவரவர் கருத்துக்களைப் பிழையின்றி யெடுத்துக் கூறவும். பிறர் கூறுவதை உள்ளபடி நன்கு அறிந்து கொள்ளவும் முடியும்.

இந்த நோக்கங்களை ஆசிரியர் ஆராய்ந்து கவனித்தால் தமிழ்ப் பாஷையை முதன் முதற் கற்பிப்பதில் 'எழுத்து' 'சொல்' என்ற இரண்டினுள் எதனை முன்னே முக்கியமாகக் கொள்ளவேண்டும் என்பது அவருக்கே புலனாகும். எழுத்துக் கற்பித்தலில் எழுத்துக்களை எழுதுவதில் ஏற்படும் கஷ்ட சுலபங்களுக்குத் தக்கவாறு அவற்றைக் கிரமப்படுத்திக் கொண்டு, பிறகு ஒவ்வொரு எழுத்தாகக் கற்பிக்கவேண்டு மென்பதும், அவ்வாறு கற்பிக்குங்கால் அவ்வெழுத்துக்களை சொல்லாடல் மூலமாய் வார்த்தைகளின் மூலமாகக் கற்பிக்கவேண்டு மென்பதும், ஆகையால் எழுத்தைக் கற்பிக்கத் தொடங்குமுன் (சம்பாஷணையையும்) வார்

JL
T1Sm 21, N361A
N36.1.8-9
147640

தைகளையும் கற்பித்துவர வேண்டுமென்பதும் நவீனமாக அனுசரிக்கப்படும் முறையாம்.

இம்முறையை யொட்டி ஆராயுங்கால் பாஷாஞான அறிவுக்கு பிரதானமான மூன்றுகாரியங்கள் உள்ளன.

(அ) பேச்சில் தேர்ச்சியடைதல்.

(ஆ) வாசிப்பில் தேர்ச்சியடைதல்.

(இ) எழுதுவதில் தேர்ச்சியடைதல்.

## சொல்லாடல் (அ) சம்பாஷணை

சிலர் "எழுதப்படிக்கத் தெரியவேணடும்" என்று சாதாரணமாக வழங்கும் வாக்கியத்தைக்கொண்டு முதலாவது எழுதக் கற்றுக்கொடுப்பதே நலம் என்று எண்ணுகிறார்கள். இதனை யோசித்தால் முதலில் பேசுதலும், பிறகு படித்தலும் அதன் பிறகு எழுதுதலுமே சிறந்தவழி என்பது தெளிவாகிறதல்லவா?

ஐந்துவயதுவரை தன்னிஷ்டப்படி விளையாடிக்கொண்டும், பெற்றோராலும் உற்றோராலும் அன்பாகப் பாராட்டப்பெற்றும் வளருகிற குழந்தை, தன்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் பேசுந்தொனிகளைக் கேட்டும், அவர்கள் அந்தத் தொனிகளை வாயாற்சொல்லும் மாதிரியைக் கண்ணால் பார்த்தும், ஒவ்வொரு தொனியும் குறிக்கும் உருவம் அல்லது செய்கை என்பவற்றையும் கவனித்தும், படிப்படியாகப்பேசக் கற்றுக்கொள்ளுகிறான். பிறர்பேசுவதைக் காதால் கேட்பதாலேயே குழந்தைகள் பாஷையைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இவ்விதமாகக் குழந்தைகள் பிறர் பேசுவதைக்கேட்டே தாமும்பேசக் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற உண்மையை ஆசிரியர் மறக்கவே கூடாது. ஆறும்வயது வந்துவிட்ட காரணத்தாலேயே, குழந்தைகள் அதுவரை உற்சாகமாக விளையாடிக்கொண்டு இருந்ததையெல்லாம் நிறுத்திவிட்டு, உடனே கஷ்டப்பட்டு எழுதவும் படிக்கவும் ஆரம்பிப்பார்கள் என்று எண்ணி, அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவது கொடுமையிலும் மிகக் கொடுமையேயாகும். பள்ளிக்கூடத்துக்கு முதன்முதல்வந்த ஒருகுழந்தை, பள்ளியும் ஒரு குடும்பமே என்று எண்ணி உற்சாகமாக சந்தோஷமாக இருக்கும்படி, போதனாமுறை அமையவேண்டும். இஷ்டப்படி விளையாடிக்கொண்டும் தனக்குத்தோன்றிய எண்ணங்களை அன்போடும் ஆவலோடும் கேட்பதில் பிரியமுள்ளவர்களிடத்தில் "மழலைச்சொற்களைச் சொல்லி ஆநந்தமாக இருந்தகுழந்தை பள்ளிக்கூடம் வந்தவுடனே கைவலி எடுக்கும்படி எழுதப் பிரியப்படுமா? அவ்விதம் எழுத்துக்களை எழுதச்சொல்லி நிர்ப்பந்திக்கும்போது வீட்டுக்கு ஓடிப்போகவேண்டுமென்று எண்ணுவது தவறாகுமா? மேன்மேலும் நிர்ப்பந்தப்படுத்தும்போது பள்ளிக்கூடத்திற்குப்போக அழுது அலறுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? இவ் விஷயங்களை யோசிக்கும்பொழுது முதன்முதல் படிப்பிக்கும்முறை "சொல்லாடல்" முறையே யென்பது தெளிவாகும்.



## பேச்சுப்பழக்கம் உண்டுபண்ணுதல்.

ஆரம்பத்தில் பேச்சு அப்பியாசம் எவ்வளவு கொடுக்கக்கூடுமோ அவ்வளவும் கொடுக்கவேண்டும். ஆசிரியர், வீட்டில் பெற்றோர் பேசுவது போலவே பள்ளிக்கூடத்திலும் சம்பாஷிப்பாரானால் குழந்தைகளும் சந்தோஷமாக பாடசாலைக்கு வருவார்கள். வீட்டில் குழந்தைகள் பேசிப்பழகி என்ன என்ன வார்த்தைகள் தெரிந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை, ஆசிரியர் தமது சம்பாஷணைமூலமாக அறிந்து அப்படியே சம்பாஷித்து, அநேக வார்த்தைகளையும் கற்பிப்பதுடன், பல சிறுகதைகளையும் சொல்லவேண்டும். அன்றியும் ஒவ்வொரு பாடத்திலும்கூடுமான அளவு பேச்சுப்பழக்கம் கொடுத்தல், பிள்ளைகள் தாங்கள் கேட்டதும் கண்டதுமான சங்கதிகளைத் தங்களுக்குள் பேச்சினால் வெளிப்படுத்தல், சாதாரண சமாசாரங்களைத் தாராளமாய் எடுத்துக்கூறவும் பழக்கம் அடைதல், திருத்தமாயும் கூச்சமின்றியும் பேசப்பழக்கம் அடைதல், கேள்விகள் கேட்கும்படி அவர்களை உற்சாகப்படுத்துதல் வேண்டும்.

## பேச்சுப்பழக்கத்துக்குச் சாதனமான விஷயங்கள்.

(அ) பிள்ளைகளைப் பேசத்தூண்டித் தங்களுக்குள் கேள்வி கேட்கும்படி செய்யக்கூடிய பாடங்களும், பாடப்புத்தகங்களும்.

(ஆ) வீடு, பெற்றோர் உற்றோர், உடை, பாத்திரம், பழக்கவழக்கங்கள்.

(இ) சிறுபாலர்களுக்கேற்ற செய்யுள், பாட்டுகள், கதைகள்.
கதைகளை உபாத்தியாயர் குழந்தைகளின் மனோபாவத்தை அநுசரித்து, பஞ்சதந்திரக்கதைகள், திராவிடப் பூர்வகாலக்கதைகள் தெனாலிராமன் கதை, "இளமையும் ஒழுக்கமும்" என்ன புத்தகத்திலுள்ள சிறுகதைகளை தேர்ந்து எடுத்து, குழந்தைகளுக்குத் தெளிவாக சொல்லவேண்டும். குழந்தைகளையும் சொல்லச்செய்து உச்சரிப்பைத் திருத்தவேண்டும்.

(ஈ) இயற்கையின் காக்ஷிகளைப் பற்றியும் சம்பாஷிக்கலாம்.
பிள்ளைகளுக்கு இஷ்டமான பிராணிகளைப்பற்றியும் சம்பாஷிக்கலாம்.

எல்லாப்பாடங்களிலும் பிள்ளைகள் உபாத்தியாயரோடும் தங்களுக்குள்ளும் பேசிக்கொள்ளும்படி நியாயமான சுதந்திரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

பாடசாலையில் கற்குங்காலம் முழுவதிலும் பிள்ளைகள் தெளிவாவும், பிசகின்றியும், சரியான உச்சரிப்புடனும் பேசப்பழக்க வேண்டுமென்பது ஆசிரியருடைய முழுநோக்கமா யிருக்கவேண்டுவது மிக அவசியமாகும். அன்றியும் ஆசிரியரைக்கண்டு பாவித்து பேசுவதே பிள்ளைகள் திருத்தமான பேச்சையடைய உத்தமமான உபாயமாகும். ஆகையால் தெளிவாயும் திருத்தமாயும் உபாத்தியாயர் பேசப்பழக்குவது வெகு அவசியமாகின்றது.

## படித்தல்

இவ்விதமாகப்பேசி அநேகம் வார்த்தைகளை பிள்ளைகள் தெரிந்துகொண்ட பிறகு, படிக்கச்சொல்லித்தர ஆரம்பிக்கவேண்சிம். காதால் கேட்டு அறிந்தமொழி, ஒலிவடிவம் என்று சொல்லப்படும். முன்னே குழந்தை ஒவ்வொரு வஸ்துவையும் கண்ணுற் பார்த்து அதனைத் தெரிவிக்கும் சப்தமாகிற மொழியைக் காதாலும் கேட்டு இருப்பதால் ஒருமொழியின் சப்தத்தைக் கேட்டவுடனே, அந்த மொழியின் சப்தம் எந்தப் பொருளைக் குறிக்கிறதென்று குழந்தை உடனே அறிந்து கொள்ளுகிறான். அம்மியைப் பார்த்த குழந்தை, அம்மி என்ற மொழியையும் அந்தமொழியானது குறிக்கும் பொருளையும் ஒருவகையாகச் சம்பந்தப்படுத்தி மனதில் வைத்துச்கொண்டு இருக்கிறான். இப்போது 'அம்மி' என்ற மூன்று எழுத்துக்களால் சேர்ந்ததாகிய வடிவத்தைக் குழந்தை 'அம்மி' என்று தான் முன்னே கேட்டிருக்கிற மொழியோடு முதலில் சம்பந்தப்படுத்தி பிறகு அந்தமோர் குறிக்கும் பொருளாகிய அம்மியின் உருவத்தை மனதில் வருவித்துக் கொள்ளுகிறான். இப்படி 'அம்மி' என்ற பொருளின் பேச்சு வடிவம் 'அம்மி' என்ற சப்தம்; இந்த சப்தத்தின் எழுத்து வடிவமே நாம் எழுதுகிற மூன்று எழுத்துக்களாம்.

### முதல் வாசிப்புப் புத்தகம் தோடங்குமுன் அனுஷ்டிக்கும் முறைகள்:—

(அ) பிள்ளைகளுக்கு வாசிக்கக் கற்றுக்கொள்வதில் ஆவலைத் தூண்டும் வகை. கதைகள், படங்கள், சுற்றுமுள்ள வஸ்துக்கள், இடங்கள் இவை சம்பந்தமான பாடங்களை வாசிக்கச்செய்தல்.

(ஆ) வாசிப்பு அட்டைகளைத் தயார் செய்தல்.

(இ) பிள்ளைகளை தனித்தனியாக வாசித்துப் பழக்கச் சாதகமான உபகரணம் உண்டாக்குதல்.

(ஈ) முதல்பாட புத்தகங்களைத் தெரிந்தெடுத்தல்.

(உ) பத்திரிகைகளிலுள்ள படங்களும் பெரிய எழுத்துக்களால் ஆன பிரசுரங்கள் கதைகள் முதலியன.



## படங்களின் உபயோகம்

பிள்ளைகள் முன்னே கேட்டுத்தெரிந்து கொண்டிருக்கிற வார்த்தைகளை எழுத்துக்களால் எழுதிக்காட்டினால் படமும் சொல்லும் சேர்ந்திருக்கும்போது, அந்தச்சொல்லை அவர்கள் சுலபமாகச் கொள்வார்கள் என்ற உண்மை மேற்கண்ட விஷயங்களிலிருந்து வெளியாகும். இக்காரணம்பற்றியே, முதன் முதல் எழுத்துக்களைக் கற்பிக்கும்போது படங்களைக்காட்டி படங்களிலுள்ள பொருள்களைக் குறிக்கும் சொற்களைக் காட்டி இரண்டையும் பொருத்தப்படுத்தி. வார்த்தையைப் படிக்கக் கற்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்.

## சொல்லைக் கற்பிக்கவேண்டும்

எழுத்துக்களைத் தனித்தனியே கற்பிப்பதில் அர்த்தமேயில்லை. ஒன்று இரண்டு மூன்று முதலாய எழுத்துக்களால் ஆன பதங்களை நேரே ஒரு மிக்க வாசிக்கக் கற்பிப்பதே சுலபமானவழியாகும். தனித்தனி எழுத்துக்களை எழுதச் சொல்வதில் பயனில்லை. ஒன்று இரண்டு முதலாய எழுத்துக்களால் ஆன பதங்களை (உதாரணம்) ஈ, பசு, குடம்,—இவைகளை வாசிக்கப் பழகியபோது, இந்தவிதமாக எழுத்துக்கள் சேர்ந்துள்ள இடங்களில் எல்லாம், பிள்ளைகள் இவற்றைச் சுலபமாகக் கண்டு பிடிப்பார்கள். அப்படிப்பட்ட பழக்கம் வந்தபோதுதான் எழுதக் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்.

இவ்வகுப்பில் பெரும்பாலும் வார்த்தைகளே கற்பிக்கப்படுவதால் சொற்களுக்குப் பொருள் விளக்குதலே இவ்வகுப்பில் கற்பிக்கவேண்டிய விஷயம் எனலாம். ஒவ்வொரு சொல்லைக் கற்பிக்குங்காலும் அதன் பொருளைச் சிறுவர் அறிந்துகொள்ளுமாறு செய்யவேண்டும். இதற்காகக் கற்பிக்க வேண்டிய சொற்களை வைத்துப் பல வாக்கியங்கள் அமைத்துக் காட்டலாம். அச் சொற்பொருளைச் செய்கைகளின் மூலம் செய்துகாட்டக் கூடுமாயின் அங்ஙனம் செய்து காட்டலாம்.

## கரும்பலகையில் எழுதிக் காட்டல்

படிக்கக் கற்றுக் கொடுக்கும்போது குழந்தைகள் கையில் புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லுவது நல்லதா? அல்லது கரும் பலகையிலோ (அ) அட்டையிலோ எழுதிவைத்து அப்பதங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பது நல்லதா? சிலர் குழந்தைகள் கையில் புஸ்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி கேட்கிறார்கள். குழந்தைகள் புஸ்தகங்களைக் கண்ணுக்குச் சமீபத்தில் வைத்துக்கொண்டு உறுத்துப் பார்க்கும்போதும் அவர்கள் கண்ணில் நீர்வருகிறது. கண்வலி யெடுக்கிறது. ஆகையால் அவர்கள் நேரே நிமிர்ந்து பார்த்து வாசிக்கும்படி பதங்களைக் கரும்பலகையில் எழுதிக் காட்டிப் படிக்கச் செய்வதே நலம் எனத் தோன்றுகிறது.

I. பிள்ளைகளுக்குப் பழக்கமாயுள்ள சொற்களைப் பல இடங்களில் எழுதிவைத்து வார்த்தையை உபாத்தியாயர் சொல்லி, அந்த வார்த்தையைக் கண்டு பிடிக்கச் செய்யலாம்.

II. எழுதிய சொல்லைக் காட்டிப்படிக்கச் சொல்லலாம். இப்படிப் படிக்கச் சொல்லித் தரும்போது பிள்ளைகள் முன்னே கேட்டும் அறிந்தும் பார்த்தும் இராத சொற்களைக் கரும் பலகையில் எழுதி வைக்கக் கூடாது. எழுத்து வடிவம் தெரிந்தபிறகே இவ்வகையான அப்பியாசத்தைத் தர வேண்டும்.

## எழுதுதல்

எழுத்து எழுதுவது என்பது சித்திரம் வரைதலை யொத்தது. கண்ணால் பார்த்த வரிவடிவமாகிய எழுத்தைக் குழந்தைகள் சித்திரம் வரைதலைப்போல வரைவதற்கு சுலபமான சித்திரங்களைக் கரும்பலகையில் விரைவாக வரையப் பழகிய பிறகுதான், எழுத்துக்களை வரையச் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் எழுதச் செய்வது குழந்தைகளுக்குத் துன்பத்தை உண்டாக்கும். ஏனெனில் அவர்களது விரல் எழுதுகோலைப் பிடித்து எழுதும் வன்மையை அடைந்திராது. அதனால் மணலிலாவது, கரும் பலகையிலாவது கையை வீசிப் பெரும் எழுத்துக்களாக எழுதச் செய்யவேண்டும். எழுதுவதற்குள்ள மணலில் குப்பைச் சேர்ந்தால் சுகாதாரத்திற்குக் கேடுண்டாகும். ஆதலால் அடிக்கடி புது மணல் மாற்ற வேண்டும்.

## எந்த எழுத்துக்களை முதலில் எழுதுவது

இவ்வகுப்பில் சிறுவர் எழுத்தின் அமைப்பையே அறியவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சுலபமாகவும் விரைவாகவும் எழுதக்கூடிய எழுத்துக்களையே முதலில் கற்பித்தல் வேண்டும். எழுத்துக்கள் எழுதும் வகையைக்குழந்தைகளுக்குக் கற்பிக்கும்போது ஒவ்வொரு எழுத்தும் முதலில் தொடங்கிச் செல்லும் வழியையும், முடியும் இடத்தையும் தெளிவாய்க் காட்டுதலவசியம் (உ-ம்) ப, ட, ய, ம, ர, வ, ச, க, ந, ஈ, எ, அ, இ, ள, ன, என்ற வரிசையில் முதல் மூன்று எழுத்துக்களைத் தவிர மற்றவற்றை தடவைக்கு ஒன்று வீதம் கற்பிக்க இடம் ஏற்படும். அன்றியும் ஏதாவது ஒரு எழுத்தைக் கற்பிக்கவேண்டுமானால் இவ்வரிசைக்கிரமப்படி அதற்குமுன்னால் உள்ள எழுத்துக்களை முன்னறிவாகக் கொண்டு, பற்பல வார்த்தைகளைஉண்டாக்கி அவ்வெழுத்தைப் போதிக்கச் சௌகரியமாயிருக்கும்.

எழுத்துக்களைக் கற்பிக்கும்போது சித்திரம் வரைதல், குச்சி வைத்தல், கொட்டைவைத்தல் முதலிய விளையாட்டுகளில் பழகிவந்த உருவங்களோடு எழுத்துக்களை ஆரம்பத்தில் கற்பிக்கவும் குழந்தைகளைப் பழக்கலாம். பெரும்பாலும் வழக்கத்திலுள்ள சொற்களிலுள்ள எழுத்துக்களையே கற்பிக்கவேண்டும். இதைவிட்டு ஒரு பயனுமில்லாத, ங, ஙா,



ஞ, ஞா, என்ற வரிசைப்போன்றவற்றை ஆரம்பத்தில் கற்பியாமல் நாளடையில் கற்பிக்கவேண்டும்.

உயிர் மெய்யெழுத்துக்களில் பெரும்பாலும் உபயோகமாகிவருகிற கொம்பு, கால், என்ற வடிவங்களை வர்ணத்தில் எழுதிக்காட்டி சுலபமாக அவ்வகை வடிவங்களை, மிக எளிதில் கற்பித்து விடலாம்.

## வாக்கியம்

பேசி, படித்து, எழுதப் பழகிய பின் சிறு வாக்கியங்களைப் படிக்கக்கற்பிப்பது வெகு சுலபமாக விருக்கும். இப்போது பிள்ளைகள் முன் பார்த்திராத பதத்தையும்எழுத்தையுங் கண்டு வாசிக்க ஆரம்பிக்கமுடியும். குழந்தைகள் வாசிக்கத் தருணம் வந்தபோது தாராளமாய்ப் படிக்கும்படிச்செய்வதும், உச்சரிப்புகளை சீர்திருத்துவதும், ஆசிரியரின் முழு நோக்கமாகும். பதங்களின் மூலமாகவே எழுத்துக்களைக் கற்பிக்க வேண்டுமென்று தற்காலத்தில் சொல்லப்படுகிறதுபோல, சொற்களை முழுவதும் பார்த்து வாசிக்க பழக்கவேண்டுமேயன்றி, எழுத்துக்களைத் தனித்தனியே கூட்டிக் கூட்டி வாசிக்கக் கற்பிக்கக் கூடாது. பிள்ளைகள் தாராளமாகவும், தவறு இல்லாமலும், சிறு சிறு வாக்கியங்களை வாசிக்கச் செய்து உச்சரிப்பை பின்னும் நன்றாய் சீர் படுத்தலாம். முக்கியமாய் ஆசிரியர் உச்சரிப்பும், கையெழுத்தும், சரியாயிருக்கவேண்டுதல் அவசியமாகும்.

## இலக்கணம்

ஒரு மொழியைப் பிழையின்றி, பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளக் கருவியாயிருப்பது இலக்கணமாம். ஆகையால் தமிழிலக்கண அறிவின்றித் தமிழில் நன்கு பேசவும் எழுதவும் இயலாது. ஆகையால் பாடசாலைகளில், தற்காலத்தில் அனுமானமுறை என்ற நவீனமுறை அதாவது "**உதாரணங்களிலிருந்து விதிகளை அறிவிப்பது**" எனும் முறையைத் தழுவி இலக்கணம் கற்பித்தலவசியம். சிறுவர்களுக்கு இலக்கணத்தின் மிக எளிய பாகத்தை மாத்திரம் போதிக்க வேண்டும்.

## வாசிக்கும் முறை

தமிழ் மொழியில் சொற்களை ஒன்று சேர்த்து வாசிக்குங்கால் சந்திகளைக் கவனித்தும், எழுத்துக்களின் பிறப்பை அறிந்தும் ஆசிரியர் கற்றுக் கொடுக்கவேண்டும். வாசித்தல் (அ) ரீடிங் விஷயமாக ஆசிரியர் வெகுகவனம் செலுத்தவேண்டும். வாசித்தலே எல்லாவித படிப்பின் பகுதியாகும். தெளிவான எண்ணங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் இதுவே காரணமாகும். உலகத்தின் சிறந்த நூல்கள் உரக்க வாசிக்கவும் பேசவுமே ஏற்பட்டன. நன்றாக வாசித்தால் அர்த்தம் தெளிவாகும். வாசிக்கும்போது பின்வரும் விஷயங்களைக் கவனிக்கவேண்டும் ;—

1. மெதுவாயும் தெளிவாயும் வாசிக்கவும்.
2. ஒவ்வொரு வார்த்தையையும் திருத்தமாய் உச்சரிக்கவும்.
3. தகுந்த இடங்களில் நிறுத்தவும்.
4. சரியான இடங்களில் அழுத்திச் சொல்லவும்.
5. பிறருக்குக்கேட்கும்படி உரக்கவாசிக்கவும், ஒவ்வொருவாக்கியத்தின் முடிவிலும் குரல்தணியவேண்டிய தில்லை.
6. வாய் சொல்லுமுன் கண் பார்க்கவேண்டும். பக்கம் திருப்பும் போது கண் முன் செல்லவேண்டும்.
7. பரிகாசமான இடங்களில் சிரிக்கலாகாது.
8. வியப்பு, அச்சம், கோபம், வினா முதலிய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு குரலைத்தாழ்த்தியும், உயர்த்தியும் வாசிக்க வேண்டும்.

நீண்ட பொறுமையான பழக்கம் வேண்டும். பிள்ளைகளுக்கு நல்லமாதிரி காண்பிக்க ஆசிரியர் நன்றாக வாசித்துக் காட்டவேண்டும். பிள்ளைகள் தங்களுக்கு இயற்கையில் அமைந்துள்ள குரலிலேயே படிக்கப் பழகவேண்டுமேயன்றி உரத்தக்குரலில் படிக்கவேண்டியதில்லை.

### மௌனமாகப் படித்தல்.

கீழ்வகுப்புகளில் படித்தபிள்ளைகள் மேல்வகுப்புகளுக்கு வரும் போது அவர்களைச் சற்றுநேரம் மௌனமாக வாசிக்கப் பழக்கவேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியில் வாசிப்பதெல்லாம் அநேகமாய் மௌனமாகவே வாசிக்கிறார்கள். அதைப்பழக்காவிட்டால் தங்கள் ஓய்வு காலத்தைச் செலவழிக்கும் ஒருவிதத்தை அவர்கள் அறியாமலே இருக்கலாம். பாடசாலையை விட்டபிறகு அவர்களால் மேலும்மேலும் வாசித்து தங்கள் அறிவை விருத்திசெய்து கொள்ளமுடியாது. ஆரம்பத்தில் உச்சரிப்பு நன்றாக அமையவும் படிப்பதன் கருத்தைத் தெரிந்து கொண்டு வாசிக்கிறார்களா வென்று கவனிக்கவேண்டும். அன்றியும், படிப்பவர்களெல்லாம் பெரும்பாலும் மௌனமாகவே படிக்கிறார்கள். தாமாகவே படிக்க ஆரம்பிக்கும்பொழுது உரத்தியே படிக்கமாட்டார்கள். ஆகையால் ஒரு புத்தகத்தை மௌனமாகப் படித்துக்கொண்டு போகும்போதே படித்த விஷயத்தை உள்ளத்தில் வாங்கிக்கொண்டு ஞாபகத்தோடு படிப்பதே விசேஷமாகையால் இப்படிப்பட்ட பழக்கத்தைப் பிள்ளைகளுக்கு— ஆதியிலேயே உண்டுபண்ணுதல் மிகச்சிறந்ததாகும். மேல்வகுப்பிற்கு வாரத்திற்கு இரண்டுநாள் சிறிதுநேரம் மௌன வாசிப்புகொடுத்து, பிள்ளைகளை, தங்கள் கருத்துக்களை வெளியிடும்படி கேட்பது வெகுநலமாகும்.

இவ்வாறு தாங்கள் படித்த விஷயங்களை எடுத்துச்சொல்லுகையில் பிள்ளைகள் சொல்லும் வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை ஆசிரி



யர் திருத்தவேண்டும். சாதாரணமாக—பெயர், வினை, எழுவாய், பயனிலை, தன்மை, முன்னிலை, படர்க்கை, ஆண்பால், பெண்பால், ஒருமை, பன்மை, என்ற இலக்கணச் சொற்களை உபயோகியாமல் அவை உபயோகிக்கும் மாதிரிகளைமட்டில் பிள்ளைகள் படிக்கும் புஸ்தகத்திலிருந்தே ஆசிரிய எடுத்துக் கூறவேண்டும்.

### எழுதக் கற்பித்தல்

தங்கள் மனதில் உள்ள கருத்தை யெடுத்துப்பேசி பிறருக்குத் தெரிவிப்பது ஒருமுறை, எடுத்துப்பேசத் தருணம் இல்லாதபோது அதனை எழுதித் தெரிவித்தல் மற்றொருமுறை. ஆகையால் எழுதுதலின் நோக்கம் நமது கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதேயாதலால், பிழையின்றி எழுதப் பழகவேண்டியது வெகு அவசியமாகும்

எழுத்துக்கள் எழுதும் விதத்தைப் போதிக்குங்கால், எழுத்துக்களை எங்கிருந்து தொடங்கி எங்ஙனம் கொண்டுபோய் எங்கு முடிக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகள் தெளிவாக உணருமாறு செய்யவேண்டும். சொற்பிழைகள் இல்லாமலும், வரிகோணாமலும், எழுத்துக்கள் நன்கு அமையுமாறு எழுதச் செய்யவேண்டும். சங்கிலித்தொடர்போல் எழுதக்கூடாது. ஒரு சொல்லுக்கும், மற்றொருசொல்லுக்கும் இடையில் சிறிது இடம் விட்டும், அவ்வாறே ஒருவரிக்கும், மற்றொருவரிக்கும் இடையில் சிறிது இடை வெளிவிட்டும் எழுதவேண்டும்.

ஒரு பாடசாலையின் பெருமையைப் பெற்றோர்கள் அநேகமாகப் பிள்ளைகளின் கையெழுத்திலிருந்தே அறிகிறார்கள். எழுதுதல் கைப்பழக்கத்தைச் சேர்ந்தவித்தை. ஆரம்பத்தில் பிள்ளைகளை வேகமாய் எழுதச் சொல்லக்கூடாது. இது விஷயமாக, தேகத்தைச் சரியானபடி அமர்த்திக்கொள்ளுதல், உட்காரும் விதம், எழுத்துக்களைச் சேர்க்கும்விதம், முதலியவைகளைக் கவனிக்கவேண்டும்.

### ஆரம்பம் :—

முதலில் கற்பலகையில் எழுதி எழுத்துக்களை ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுது பிள்ளைகள் ஒவ்வொரு எழுத்தும் உண்டாகும் விதத்தை நேரில் பார்க்கலாம் எழுதும் விதத்தையும், இடைவெளியையும், சாய்வையும், கூட்டும் (அ) சேர்க்கும் விதத்தையும் பிள்ளைகள் கவனிக்கவேண்டும். அடிக்கடி உபயோகத்தில் வரக்கூடிய சுலபமான எழுத்துக்களை முதலில் கற்பிக்கவேண்டும். ஏறக்குறைய ஒரேமாதிரியான எழுத்துக்களைச் சேர்த்துக் கற்பிக்கவேண்டும்.

ஆரம்பத்தில் குழந்தைகளின் கையெழுத்து நன்றாய் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. அதனால் கையெழுத்து மிக அழகாயும், சித்திர வேலைப்பாடாயும், டம்பமாயும் இருக்க

வேண்டுமென்பதல்ல; ஆனால் கூடியவரையில் லக்ஷணமாயும் தெளிவாயும் விரைவாயும் இருக்கவேண்டும்.

### பார்த்து எழுதுதலும் சொல்வதை எழுதுதலும்.

பிள்ளைகள்பார்த்து எழுதுதல் மிகவும் உபயோகமுள்ள அப்பியாசமாகும். வார்த்தைகளின் எழுத்துக்கூட்டலைக் கற்றுக்கொள்ள இது உபயோகமானது. கஷ்டமான வார்த்தைகளையும், அபூர்வமான வார்த்தைகளையும், பிள்ளைகளைக் கவனிக்கச் செய்யவேண்டும். வார்த்தைகளைவிட தொடர்மொழிகளையும், வாக்கியங்களையும் பிள்ளைகள் எழுதவேண்டும். எழுத்துப்பிழைகளைத் திருத்தவேண்டும். திருத்தினவற்றை சில தடவை எழுதவேண்டும். பார்த்தெழுதலின் முக்கியநோக்கம் மாணவர்கள் விரைவாக எழுதப்பழக்குவதேயாகும். பிள்ளைகள் பார்த்து எழுதும்போது தப்பு இல்லாமல் எழுத்தை நன்றாய் எழுதும்படி செய்ய வேண்டும்.

சொல்லப்பட்ட பதத்தையோ, வாக்கியத்தையோ பார்க்காமல் எழுதுவதற்குச் சொல்வதை எழுதுதல் என்றுபெயர். ஆசிரியர் சொல்வதைப் பிள்ளைகள் புத்தகத்தைப் பார்க்காமல் எழுதுவதினால் அவர்களுக்குச் சரியான அக்ஷரஞானம் இருக்கிறதா என்று அறிவதற்கு ஏதுவாகும். பிள்ளைகள் முதலில் படித்தபாடங்களிலிருந்து சொல்வதை எழுதுவித்தல்வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் முன்னே பார்த்துள்ள சொற்களில் அமைந்துநிற்கும் அக்ஷரங்களை ஞாபகப்படுத்திக்கொண்டுதான் முதலில் எழுதுவார்கள். பிறகு அவர்கள் முன்னேபார்த்து எழுதாதவையும் எழுதுவதற்குச் சக்தியுள்ளவர்களாவார்கள். அங்ஙனம் எழுதும்போது பெரும்பாலும் எல்லாப்பிள்ளைகளும் எந்த எந்தப்பதங்களைப் பிழையாக எழுதுகிறார்களோ அவற்றை ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக்காட்ட வேண்டும். எழுதவேண்டியதைத் தெளிவான உச்சரிப்புடனும், நிதானமாகவும் சொல்லவேண்டும். ஒருமுறை சொல்லி அவற்றை மாணவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எழுதப்பழக்குதல் வேண்டும். திருப்பித் திருப்பிச்சொன்னால் இயற்கையாகவே மந்தமாக எழுதுபவர்கள் ஆசிரியர் மறுபடியும் சொல்லுவார் என்று எண்ணி சுறுசுறுப்பாயிருக்கமாட்டார்கள். சுறுசுறுப்பாயிருக்கவேண்டியவர்களுக்கு இரண்டுதடவை சொல்லவேண்டியது அவசியம் இல்லை. இதை கவனமாக நடத்தினால் பிள்ளைகளுக்கு எழுத்துக்கூட்டலையும், கையெழுத்தையும் விருத்திசெய்ய ஏதுவாகும். இதை டைம்டேபிலில் பிரத்தியேகமாகக் குறிக்காமல் தேவையானபோது மாற்றுதலாய் இதை நடத்தலாம்.

### காப்பி எழுதுதல் :—

காப்பி எழுதுதல் பார்த்து எழுதுதல்போன்றதே. இதன் முக்கியநோக்கம் எழுத்துக்களை அவற்றின் உருவங்கள் கெடாமல் அழகாக



எழுதவேண்டுமென்பதாம். காப்பிப் புஸ்தகங்களிலுள்ள எழுத்துக்கள் தங்கள் பாடசாலையில் கற்பித்தமாதிரி இருக்கவேண்டும். பிள்ளைகள் எழுதும்போது, இவ்விவ்வாறு எழுதவேண்டுமென்று கற்பித்துத் திருத்த வேண்டும்.

இந்தமுறைகளையநுசரித்து, கீழ்வகுப்புகளில் தமிழ்ப் பாடத்தைப் போதித்தால் மாணாக்கர்கள் தெளிவாக எழுதப்படிக்க விரைவில் கற்றுக்கொள்வார்கள் என்பதே எமது துணிபு.

குறிப்பு :—ஆசிரியருக்கு உதிர்ந்த மலர்கள்.

ஒரு நாட்டின்பிற்கால முன்னேற்றம் மாணவர்களின் விருத்தியாம்சத்தைப் பொருத்திருக்கிறது. மாணவர்களின் அபிவிருத்தி ஆசிரியரின் முயற்சியைச் சார்ந்திருக்கிறது. எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையானவர் ஆசிரியரே.

ஆசிரியரின் தொழில் புனிதமானது. மாணவர்களுக்கும் உலகிற்கும் வழிகாட்டி ஆசிரியர்களே !

இவ்வகை மேம்பாட்டையுடையவர் தன் வேலையில் மனப்பூர்வத்துடன் தன்னால் இயன்றவரையில் சிரமம் எடுத்துக்கொள்ளாத ஆசிரியருக்கு, எவ்வித பிரசங்கமும், புத்திமொழியும், இதுபோன்ற வியாசங்களும், பாடக்குறிப்புகளும், சிறிதும் பிரயோஜனமேயில்லை ! யில்லை !!

1. குழந்தைகளை அன்புடன் பாராட்டுகிறவன், கடவுளிடத்தில் அன்புள்ளவனாவான்.
2. குழந்தைகளைக் களிக்கச்செய்கிறவன், தொழில்சாலையாகிய இவ்வுலகத்தில் கடவுளுடன் வேலைசெய்பவனாவான்.
3. குழந்தைகளுக்கு உதவிசெய்கிறவன், தேவலோகத்தை இங்கு வரவழைப்பவனாவான்.
4. தீமைகளிலிருந்தும், துன்மார்க்கங்களிலிருந்தும் குழந்தைகளைக் காப்பவன், தேசத்தின் நன்மைக்காகப் பாடுபடும் தேசாபிமானிகளில் ஒருவனாவான்.

சன்மார்க்கத்தைப் பற்றிச் சொல்லுவது கல்வி விஷயத்திற்கும் பொருந்தும். உள்ளே செலுத்தப்படுவது கல்வியல்ல, வெளியே கிளம்பி வருவதே கல்வி.

தான்சொல்லாமல் பிள்ளைகளைச் சொல்லச் செய்பவர்
தான்செய்யாமல் பிள்ளைகளைச் செய்யச்செய்பவர்.

இவர்களே சிறந்த உபாத்தியாயர்கள்.

# ஆரம்ப ஆசிரியர்களுக்கோர் விஞ்ஞாபனம்

---

ஆசிரிய தோழர்களே !

வணக்கம் நாகரீகம் முதிர்ந்த இந்த காலத்திலே நம் மாகாணத்திலே நமது சமூகத்தின் நிலைமை இருக்கும் வேடிக்கை உங்களுக்குப் புலப்படுகிறதா ? ஆம், புலப்படாமலிராது. தொழிலில் மிக்க கஷ்டமானதும், ஆனால் நம் நாட்டு கிராமவாசிகளால் மிக்க ஏளனமாக நினைக்கப்படுவதுமாகிய தொழில் நமது தொழிலே. நமக்குப் பாதுகாப்போ மிகக் குறைவு. ஆனால் நமது பொறுப்போ மிகப் பெரிது. நமது வேலையோ மிகக் கடியது. நமது ஊதியமோ மிக எளிது. சில பெருத்த குடும்பிகளுக்கு அவர்களுடைய வருவாய் அரைவயிற்று உணவிற்கும் போதாது !

நாம் ஒருவிதமாகக் காலங்கழிக்க விரும்பினால் கழுதையை விட அதிகமான பொறுமையை வகிக்கவேண்டும். இன்றேல் நமது தொழிலுக்கு இறுதியைத் தேடிக் கொண்டவராவோம். ஊரில் தோட்டி முதல் தொண்டைமான் ஈறுகவுள்ள சகலருக்கும் நாம் அடிமை என்பது ஒரு விதத்திலும் தவறாகாது. இத்தனை பேரும் நம்மை அதிகாரம் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நாம் யாரையும் அதிகாரம் செய்ய அதிகாரமுடையவர்களல்ல.

இத்தகைய கஷ்டங்களுக்கு இடையில் சிக்கி வருந்தும் ஆசிரிய சகோதரர்களே—குறைவிலா தரித்திரத்தில் மூழ்கி வருந்தும் குசேல முனிவர்களே—ஆதரவற்று அடிமை வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் சோதரர்களே! அடிமை தூக்கத்திலிருந்து எழுங்கள் !! நீங்கள் முன்னுக்கு வர முயலுங்கள் !!! உண்மையிலேயே நாட்டில் நலம் பெருகக்காரணஸ்தர்கள் நீங்கள்தான். உங்களையன்றி ஒருநாடும் முன்னேற்ற மடைய முடியாது. மற்றெல்லாரையும் விட உங்களுக்கே சலுகை அதிகம் காண்பிக்கப்பட வேண்டும். விரைந்து ஒன்று சேர முயலுங்கள். சேர்ந்து உங்களுடைய குறைகளை அதிகாரவர்க்கத்தினருக்கு முறையிட முன்னேறி வாருங்கள். இதற்காக ஒரு பெரு முயற்சி செய்ய நான் துணிந்து முன்வந்துள்ளேன்.

"மாகாண மகா நாடு" கூட்ட வேண்டியது மிக அவசியம். அந்த சமயத்தில் தான் நம்மில் பலர் ஒன்று கூடி தங்கள் அபிப்பிராயங்களை



நேரில் கலந்தாலோசிக்கவும் வேண்டிய ஆலோசனைகளைப் பெறவும் சாத்தியமாகும். இதற்காக வேண்டிய உதவிகளை நீங்களும் புரிந்து ஆசிரிய சமூகத்திற்கு நிரந்தரமான நன்மையை தேட துணை செய்வீர்களாக. மேற்படி மகா நாட்டை, வடாற்காடு ஜில்லாவிலுள்ளதும்—ஸ்தலவிசேஷமுடையதும், சௌகரியங்கள் நிறைந்ததுமான, "திருவண்ணாமலையில்" கூட்ட முயற்சித்திருக்கிறோம். மேற்படி நகரமானது ஏறக்குறைய நமது மாகாணத்தின் நடுமத்தியிலமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. ஆகையால் ஆசிரியர் ஒவ்வொரு ஆசிரியர் சங்கங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியையாவது அனுப்பி மகா நாட்டைச் சிறப்பித்து நடத்தி அதனால் பெரிய பலனை அனுபவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும் மகா நாட்டை நடத்துவதைப் பற்றிய யோசனைகளையும், தீர்மானங்களையும் வந்தனத்தோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

மகா நாடு நடத்தப்பட வேண்டிய தேதி—வேண்டிய தலைவர்கள், பிரதி நிதி கட்டணம்—முதலிய விபரங்கள் பின்னால் வெளியிடப்படும்.

ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர் சங்கக் காரியதரிசியும் தங்கள் கூட்டத்தில் இதை தெரிவித்து சபையின் சம்மதத்தையும், ஆலோசனைகளையும் கீழ்கண்ட விலாசத்திற்கு கூடிய விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

D. கிருஷ்ணசாமி, காரியதரிசி
பஞ்சாயத்து ஆசிரியர்கள் சங்கம்.
(திருவண்ணாமலை) சென்டர்)
நரியாப்பட்டு வாணாபுரம் போஸ்டு
(வாய) திருவண்ணாமலை
Norh Arcot District

# பத்திராதிபர் குறிப்புகள்.

## சரியான கொள்கையா?

ஆரம்பக்கல்வி சம்பந்தமாக தம்முடைய எண்ணத்தை அதிகாரிகள் சில நாட்களுக்கு முன்பு ஒரு முக்கிய அறிக்கையில் வெளியிட்டார்கள். நமது நேயர்கள் இந்த அறிக்கையைக் கவனித்தல் அவசியம். ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்தையே நாடிவரும் ஆசிரியர்களான நாம் அதிகாரிகளின் கொள்கையைத் தெரிந்து கொண்டு நம்மாலியன்ற உதவியைச் செய்ய வேண்டும். முதலிருந்து கடைசிவரை இந்த அறிக்கையில் ஒரே ஒரு பல்லவியைக் காண்கிறோம். அதுதான் யாரும் சொல்லிக்கொண்டிருக்கும் வியர்த்தம் அல்லது வேஸ்டேஜ் என்னும் அபிப்பிராயம். நம்மாகாணத்தில் சுமார் ஏழாயிரம் பள்ளிக்கூடங்களே ஐந்து வகுப்புக்களடங்கிய முழு ஆரம்ப பள்ளிக்கூடங்களாம். எண்ணாயிரம் பள்ளிக்கூடங்கள் சில வகுப்புக்களேயுள்ள குறைப்பள்ளிக்கூடங்களாம். பதினெண்ணாயிரம் பள்ளிக்கூடங்கள் ஓராசிரியன் பள்ளிக்கூடங்களாம். பன்னீராயிரம் பள்ளிக்கூடங்களில் முப்பது பிள்ளைகள்கூட சேரவில்லையாம் இத்தகைய பள்ளிக்கூடங்களால் பயனுண்டாவெனக் கேட்கிறார்கள். இவைகளுக்கு அளிக்கும் பொருளுதவி வீண் செலவென்றே கருதுகிறார்கள். கையிலுள்ள பணத்தைப்பயனுண்டாகும் வழியில் செலவழித்தல் அவசியமென்று சொல்லுகின்றார்கள். இந்த அறிக்கையின் முக்கிய நோக்கம் வேஸ்டேஜைத் தடுப்பது. கீழ் வகுப்பில் அநேகம் பிள்ளைகள் தங்குவதற்கும் மேல் வகுப்புக்களில் பிள்ளைகள் மிகக்குறைவாயிருப்பதற்கும் ஓராசிரியன் பள்ளிக்கூடங்களும் குறைப் பள்ளிக்கூடங்களும் முக்கிய காரணமென்பது அதிகாரிகளின் அபிப்பிராயமென அறியக்கூடும்.

ஆகவே இத்தகைய பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவி அளிக்கக்கூடாதென்றும் இவைகள் பொருட்டுச் செலவழிக்கப்படும் தொகையை முழுப் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுத்துதவி வேஸ்டேஜைக் குறைக்க வேண்டுமென்றும் சர்க்கார் அறிக்கையில் வற்புறுத்திகிறார்கள். வேஸ்டேஜைத்தடுத்தல் அவசியமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் சர்க்காரின் கொள்கை சரியாவென்று பொது ஜனங்களும் தலைவர்களும், ஆசிரிய மானேஜர்களும் கவனிக்க வேண்டும்.



ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நாற்பதினாயிரத்திற்கு மேலிருக்க முழுப் பள்ளிக்கூடங்கள் சுமார் ஏழாயிரமே. ஆகையால் மேல் வகுப்புக்களில் பிள்ளைகளின் தொகை மிகவும் குறைந்திருப்பது ஆச்சரியமல்ல. குறைப்பள்ளிக்கூடங்களும் ஓராசிரியன் பள்ளிக்கூடங்களும் வேஸ்டேஜுக்குக் காரணமென்ற கொள்கை சரியானதல்ல. புது அமுலிலும் வகுப்புக் குறைந்த பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்காயிருக்கப் போகின்றன. இப்பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகள் தாமாகவே முழுப்பள்ளிக்கூடத்தை நாடுவார்களென நினைப்பதற்கில்லை. ஓராசியர் பள்ளிக்கூடங்களில் பல நன்றாய் உழைத்து வருவது நாமறிந்த விஷயம். வகுப்புக்கொரு ஆசிரியருள்ள முழுப்பள்ளிக்கூடங்களிலும் வேஸ்டேஜ் குறைவில்லையென்று அநுபவமுள்ளவர்கள் காட்டியிருக்கிறார்கள். உண்மையில் வேஸ்டேஜைத் தடுக்க வேண்டின் முதலில் அநாவசியப் பள்ளிக்கூடங்களை ஜாப்தா செய்து அவைகளை விலக்குதல் சரியான முறையாகும். அவசியமானதும் பொருளுதவியில்லாததால் தற்காலம் வலுக்குன்றியிருக்கும் ஓராசிரியன் பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்தல் வேஸ்டேஜைத்தடுப்பதுடன் ஆரம்பக்கல்வி பரவுவதற்கும் உதவியாயிருக்கும். சில வருஷங்களுக்கு முன்பு இப்போது கல்வி இலாகாத் தலைமை வகிக்கும் கனம் ஸ்டேதம் அவர்கள் சர்க்கார் உடனே கவனிக்க வேண்டிய சில விஷயங்களை ஒரு அறிக்கையில் தெரிவித்தார்கள். ஆரம்ப பள்ளிக்கூடங்களை அநாவசியமானவை, அவசியமாயினும் வலுக்குன்றியவை, சீரானவையென வகுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவசியமான வலுக்குன்றிய பள்ளிக்கூடங்களை ஒழித்துத்தான் சீரான பள்ளிக்கூடங்களுக்கு, உதவி கொடுக்க வேண்டுமென்று எவரும் சொல்லமாட்டார்கள்.

வேஸ்டேஜுக்குக் காரணங்கள் வேறு பலவுள. வருஷாந்திர வரவு செலவு திட்டத்திலேயே போதுமான அளவு கிராண்டுக்கு வைக்கவில்லையென்றும் ஏழுலக்ஷம் ரூபாய் குறைவாயிருக்கிறதென்றும், வருடா வருடம் ஜில்லா கௌன்ஸல்களுக்குத் தொகைக்குறைக்கப்பட்டு வந்ததென்றும் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். வேண்டிய பணம் செலவு செய்யாவிடில் பயனெவ்வாறு ஏற்படும்? விதை விதையாவிடில் பலனெவ்வாறு அடையக்கூடும். மேலும் ஆரம்ப பள்ளிக்கூடத்தில் இது சொத்தை இது சொள்ளையென்று விடாது பேசிவரும் பெரியோர்கள் ஆசிரியர்களின் நிலையை யறிந்திருந்தும் உதவியொன்றும் புரியவில்லை. மாகாநாடுகளிலும், சட்டசபையிலும், சம்பளம் மிகக்குறைவென்றும். சொற்ப சம்பளமும் காலத்தில் கிடைப்பதில்லையென்றும் பல தடவை கதறியிருக்கிறோம். மற்

றைய இலாகாவில் இந்நிலையிருப்பின் எவ்வித குழப்பமேற்பட்டிருக்குமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. சர்க்கார் அறிக்கையில் உபாத்தியாயர்களை மறந்துவிடவில்லை. இரண்டு ரூபாய் வரை சம்பளத்தை உயர்த்தப் பொருதளுவி மானேஜர்களுக்குக் கொடுப்பதாகத்தெரிவித்திருக்கிறார்கள். இத்தொகை மிகவும் குறைந்ததென்றே அதிகாரிகளும் நினைக்கிறார்கள். அநேக உபாத்தியார்கள் இருப்பதால் செலவு அதிகமாகுமென மிரளுவதாகத் தெரிகிறது. அநேக உபாத்தியாயர்களிருப்பதினாலேயே சாக்கார் சிக்கனத்தைப்பாராட்டாது அவசியமானதைச் செய்ய வேண்டும். இல்லாவிடில் வேஷ்டேஜ் வேரூன்றி விடக்கூடுமென்பதை மறக்கக்கூடாது. ஆசிரியர்கள் தற்கால நிலைமையென்ன? அவர்கள் காலத்தில் சம்பளம் பெற்றுக்கொள்ளுகிறார்களா? இவை போன்ற விஷயங்களை செவ்வனே விசாரிக்கப் போவதாகவும் அறிக்கையில் சர்க்கார் தெரிவித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

வேஸ்டேஜ் என்னும் பிணியை நீக்குதல் அவசியம். பள்ளிக்கூடங்கள் ஒழுங்கான நிலையில் பயனளிக்கக்கூடியனவாயிருக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்வதுடன் உழைக்கவும், தயாராயிருக்கிறார்கள். சரியான கட்டிடங்கள், வேண்டிய பொருளுதவி போதனா சாதனங்கள், சரியான பாட திட்டம், மேலான நோக்கம், பொதுஜன ஒத்துழைப்பு, நல்ல ஆசிரியர், போற்றும் அதிகாரிகள் முதலியன ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு அவசியம். முன் மலர்களில் காட்டியபடியே உபாத்தியாயர்கள் தம்முடைய பொருப்பை வகிக்கத்தயாராயிருப்பார்களென்றே நம்புகிறோம்.

---

## பாட திட்டம்

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நடந்து வரும் பாட திட்டம் சரியல்லவென்பது பலர் கொள்கை. பொது ஜனங்கள் பிள்ளைகளை அனுப்பாததற்கு இது ஒரு முக்கிய காரணமென்று சிலர் அழுத்தமாய்ச் சொல்லுகிறார்கள். பாட திட்டத்தை சீர்திருத்தும்படி சர்க்கார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சமீபத்தில் வங்காள கவர்ன்மெண்டார் நியமிக்கப்பட்ட கமிட்டியார் செய்த சிபார்சுகள் பத்திரிகைகளின் வெளிவந்தன. ஆாம்பப் பாடசாலைகள் நான்கு வகுப்புக்களுடையனவயிருந்தால் தற்காலம் போதுமென்றும் படித்தல், எழுதல், எண்ணுதல் ஆகிய மூன்றுடன் சிறிது நகர பரிபாலன சாஸ்திரமும் பூகோளமும், தேகப்பயிற்சியும் பாட



திட்டத்தில் சேரவேண்டுமென்றும் வங்காளக்கமிட்டியார் கூறியிருக்கிறார்கள். நம் பாடசாலைகளில் வேண்டாத பல பாடங்களைக் கற்பித்து வருகிறார்களெனச் சொல்வோர் பலர். மற்றுஞ் சிலர் பல விஷயங்களைப்பற்றியொன்றும் கற்பிக்கவில்லையேயென்று புகார் செய்கிறார்கள். பாட திட்டம் நிர்ணயஞ் செய்வதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சங்களென்பதைம்பற்றி அமெரிக்கா தேசத்திலுள்ள ஆசிரியர்கள் வெகுவாய் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். தம்மநுபவத்தைக்கொண்டும் முயற்சியைக்கொண்டும் சுபாவத்தைக்கொண்டும் குழந்தைகள் கல்வி கற்குமாறு பாட திட்டம் அமைய வேண்டுமென்று பெரியோர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். பாதிரிமார்கள் நடத்திவரும் பள்ளிக்கூடங்களில் மேலே சொல்லிய கொள்கைகளைக்கூடிய வரையில் கவனித்து வருகிறார்கள். இந்தியக் குழந்தைகளுக்குப் புதிய பள்ளிக்கூடங்களென்ற புத்தகத்தில் Dr. மக்கேயென்பவர் இவைகளை விரிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். புதிய கொள்கையை அநுசரித்துவரும் பள்ளிக்கூடங்களைப்பற்றி யெழுதியிருக்கிறார்கள். இப்புத்தகத்தின் முக்ய கொள்கைகளை தமிழில் ஆசிரியர்களறியும் படித் தெரிவித்தால் அவர்களுக்கு மேலான உணர்ச்சியுண்டாகும். ஸ்தலஸ்தாபனங்களின் ஆதீனத்தலடங்கிய ஸென்த்ரல் பள்ளிக்கூடங்களிலாவது இக்கொள்கைள் அனுசரிக்கப்பட்டால் கூடிய சீக்கிரத்தில் மாகாணமெங்கும் கிளர்ச்சியேற்படும். பாட திட்டம் சரியாயிருத்தல் அவசியம். ஆசிரியர்களைப் பொருத்தது பாட திட்டத்தின் பயன். மானேஜர்களும், அதிகாரிகளும் ஆசிரியர்களைப் பொறுக்குவதிலும் போற்றுவதிலும் சிக்கனத்தைப் பாராட்டுவதால் தகுந்த உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடத்திலிருப்பது அருமையாகிறது. ஆகவே வேஸ்டேஜைப்பற்றி ஆச்சரியப்படுவானேன்?

---

JL
T15:021, N36PA
N36.1.8-9
147640
சென்னை-600 008.

147640
சென்னை-600 008.
JL
TLSM21,N36PA
N36·1·8-9

# இந்தியச் செய்திப் படம்

டிசம்பர் மீ



Regd. No. M. 3473


# தென் இந்திய ஆசிரியர்

# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள்

ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.

உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.


Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St. Triplicane, Madras.